


# புரட்சித்தலைவியின் முழக்கம்

தொகுதி-2

# புரட்சித்தலைவியின் முழக்கம்

தொகுதி-2

மாண்புமிகு முதல்வர்
புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு

செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

# புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-2

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரைகளின்
தொகுப்பு

சிறப்பு வெளியீடு

முதல் பதிப்பு

செப்டம்பர், 1993

*விலை: ரூபாய் பதினைந்து*

**வெளியீடு:**

**இயக்குநர்**
**செய்தி-மக்கள் தொடர்புத்துறை**
**தமிழ்நாடு அரசு**
**சென்னை-600 009**

**அச்சிட்டது:**

**தமிழரசு அச்சகம்**
**அரசினர் தோட்டம்**
**சென்னை-600 002**

# பதிப்புரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 24.6.1991 அன்று தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, 16.5.1992 வரை பல்வேறு நிகழ்ச்சிகளிலும் ஆற்றிய உரைகளைத் தொகுத்து 'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலாக முன்பு வெளியிடப்பட்டது.

அதைத் தொடர்ந்து, 17.5.1992 முதல் 24.6.1993 வரையிலான (இரண்டாவது ஆண்டு) அவர்களுடைய உரைகளைத் தொகுத்து "புரட்சித் தலைவியின் முழக்கம் தொகுதி–II" என வெளியிடப்படுகிறது. முன்னது போலவே, இந்தத் தொகுதியும் அரசின் ஆக்கப்பணிகளையும் பிற இன்றியமையாச் சிறப்புடை நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளப் பெரிதும் துணை நிற்கும் என்று நம்புகிறோம்.

இரா. சம்பத், இ.ஆ.ப.,
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

சென்னை-600 009

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | திரையுலகம் தந்த பாராட்டு<br>என் தாய்வீடு தந்த பாராட்டு | 1 |
| 2. | இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி<br>தூளுரை ஏற்போம் | 9 |
| 3. | இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும்<br>மாநில உரிமைக்குக்குரல்கொடுப்பதும்<br>முரண்பட்டவையல்ல | 15 |
| 4. | பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனி<br>புரட்சித்தலைவர் நெறிநின்று<br>மது அரக்கனை ஒழிப்போம் | 22 |
| 5. | தேசிய மக்கள் தொகைக் கொள்கையை<br>நவீனப்படுத்தவேண்டும் | 26 |
| 6. | நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே<br>நேரத்தைச் செலவிடுங்கள் | 31 |
| 7. | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | 33 |
| 8. | நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகள் | 36 |
| 9. | பல்கலைக்கழகங்கள், மனிதப் பண்புகளை<br>வலியுறுத்தி மனித நலத்துக்கு முக்கியத்துவம்<br>தர வேண்டும் | 42 |
| 10. | ஓர் அரசைப்பற்றி, குறை காண்பதுடன் நில்லாது<br>ஆக்கபூர்வ கருத்துக்களையும் தரவேண்டும் | 50 |
| 11. | பாரபட்சமற்ற, மதச்சார்பற்ற, கட்டுப்பாடு<br>விசுவாசமான பணிகளுக்குப் பெயர் வாய்ந்தது<br>மத்திய ரிசர்வ் போலீஸ் படை | 63 |
| 12. | வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு<br>மக்களுடைய ஒத்துழைப்பு அவசியம் | 66 |
| 13. | தென் மாநிலங்கள் ஏற்றம் பெற...... | 69 |
| 14. | சிறுபான்மையினரைப் போன்றே,<br>பெரும்பான்மையினரும், உரிமைகளை<br>அனுபவிக்க, வகை செய்ய வேண்டும் | 77 |

| | | |
|---|---|---|
| 15. | தமிழக மக்கள் ஒவ்வொருவரும் ''நல்லா இருக்கணும்'' என்பதுதான் எனது ஆசை | 81 |
| 16. | வீரத்துறவி விவேகானந்தர் | 84 |
| 17. | ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், இந்திய மண்ணில் நம்மால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் | 87 |
| 18. | திரைப்பட விருதுகள் வழங்கும் விழா | 90 |
| 19. | மக்கள் என்பக்கம் இருப்பதால், இறுதி வெற்றி எனக்குத்தான்! | 94 |
| 20. | ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன் | 103 |
| 21. | கலைமாமணி' விருது வழங்கும் விழா | 108 |
| 22. | எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்! | 111 |
| 23. | படவுலகில் வேற்றுமைகள் மறையட்டும் நல்லுறவு மலரட்டும் | 124 |
| 24. | சென்னைப் புறநகரில் ஒரு தொழில் பூங்கா | 130 |

# திரையுலகம் தந்த பாராட்டு
# என் தாய்வீடு தந்த பாராட்டு

திரை உலகின் அனைத்துப் பிரிவினரையும் ஒன்றாகக் கூட்டி, நேசக்கரம் நீட்டி, பாசமழை பொழிந்து, தென்னகத் திரை உலகமே திரண்டெழுந்து, சிறப்புமிக்க ஒரு விழாவை எனக்காக எடுத்து, என்னைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறீர்கள். எல்லாச் சிறப்பும் பொருந்துகிற வகையில், இந்த விழாவினை எடுக்க முனைந்து, வெற்றி கண்டிருக்கிறீர்கள்.

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ், இத்தனையும் இணைந்த முத்தமிழ் விழாவாக இவ்விழாவினை ஆக்கியிருக்கிறீர்கள்.

சிறிது நேரத்திற்கு முன், தென்னகத் திரை உலகில், தனது இசையின் மூலம் நிரந்தர இடம் பெற்றுள்ள, திரு எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் இசைக் குழுவினரின் இசை மழையில், நாம் நனைந்து சொக்கிப் போனோம். பிறகு நாடகத் தமிழின் எழுச்சியினைக் கண்டு களித்தோம். நடனத்தின் வனப்பில் மூழ்கிப் போனோம். பல்சுவை நிகழ்ச்சிகளைப் பார்த்துத் திளைத்தோம். அதை அடுத்து, இயற்றமிழை எடுத்துக் காட்டும், பலரின் அருந்தமிழ்ப் பாராட்டுகளை அள்ளிப் பருகினோம்.

இவையெல்லாம் போதாது என்று பூர்ண கும்பமிட்டு, பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து, நினைவுப் பரிசுகளை வழங்கி என்னைப் பாராட்டி, சீராட்டி, அரசு சிம்மாசனத்தில் அமர்த்திப் போற்றியிருக்கிறீர்கள். கடந்த காலத்திலிருந்து இன்றைய நாள்வரை, பலரால் நான் பாராட்டப் பெற்றேன் என்றாலும்கூட, இன்றைக்கு எனக்குக் கிடைத்த பாராட்டு, ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இன்றைய பாராட்டு என் தாய் வீட்டுப் பாராட்டு! என் குடும்பத்தினர் கொடுத்த பாராட்டு!!

இப்படி நான் சொல்லுவதற்குக் காரணம், என்னை ஆளாக்கி, தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தி, ஏறத்தாழ 18 ஆண்டுக் காலம், வாழ்வும், வளமும் அளித்த அரும்பெரும் திரை உலகம், என் தாய் வீடு என்றால், அது பொருத்தம்தானே!

இன்றைக்குத் தன் குலக்கொடி, தனிப்பெரும் கோலோச்சும் தன்மை கண்டு, வியந்து பாராட்டி, உளமார நீங்கள் மகிழ்வதை என்னால் காண முடிகிறது, உணர முடிகிறது. இந்த நன்னாளை, நலம் மிக்க பொன்னாளை, எண்ணி எண்ணி மகிழ்கிறேன். எனக்கு இப்படி ஒரு மாபெரும் பாராட்டு விழாவைத் திரை உலகமே திரண்டு வந்து, அதன் அனைத்து அங்கங்களும் ஒன்றாக இணைந்து, எடுப்பும், சிறப்பும் மிக்க ஒரு விழாவாக, இப்படி நடத்தும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இவ்வாறு என் மீது அன்பைப் பொழிந்து, என்னைப் பெருமைப்படுத்திய, கலை உலகச் சகோதர, சகோதரிகளுக்கு, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் மிகச் சிறப்பாக, கலை நிகழ்ச்சிகளை அமைத்து, நடத்திய கலை விற்பன்னர்கள் அனைவருக்கும், என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த விழாவில் கலந்து கொண்டு, வாழ்த்துரைகள் வழங்கிய திரைப்பட உலகின் சகோதர சகோதரிகளுக்கு, என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலர்ந்த முகத்தோடு, தன் வீட்டுப்பிள்ளை தரணி ஆள்கின்றதே என்ற பெருமையோடு, இவ்விழாவிற்கு விரும்பி வந்து, நிறைந்த நெஞ்சோடு, என்னை வாழ்த்திக் கொண்டிருக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்கிக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒரு மாபெரும், மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும், என் உள்மார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்கு கிறேன்.!

நான் திரை உலகில் காலடி எடுத்து வைத்த நிகழ்ச்சி பலருக்குத் தெரியாது. அந்த நினைவை உங்களுடன் இந்தத் தருணத்தில் பகிர்ந்து கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நான் Bangalore, Bishop Cotton Girls' High School-இல் படித்துக் கொண்டிருந்த பொழுது, கோடை விடுமுறைக்காக, என் தாயாருடன் ஒரு முறை சென்னை வந்தேன். அப்பொழுது எனது தாயார் 'ஸ்ரீசைலம் மகாத்மியம்' என்ற கன்னடத் திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். அன்று இரவு படப் பிடிப்பிற்காக, நான் என் தாயாருடன் ஸ்டுடியோவிற்குச் சென்றேன்.

அன்றைய தினம் அந்தப் புராணத் திரைப்படத்தில், ஒரு குழந்தை நட்சத்திரம் பார்வதி போல வேடம் அணிந்து நடிக்கும் காட்சி, படமாக்கப்படுவதாக இருந்தது. எல்லோரும் படப்பிடிப்பிற்காக இரவு 9 மணி முதலே தயாராக இருந்தனர். ஆனால் இரவு 10 மணி ஆகியும், அந்தக் குழந்தை நட்சத்திரம் வரவில்லை. படத் தயாரிப்பாளரும், இயக்குநரும் பதட்டம் அடைந்தனர். அன்று படப்பிடிப்பு ரத்தானால், ஏற்படக்கூடிய வீண் நஷ்டத்தையும் எண்ணிக் கலங்கினர். குழந்தை நட்சத்திரத்திற்கு, உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றும், அவர் படப்பிடிப்பிற்கு வரமுடியாது என்றும் செய்தி வந்தது.

என்ன செய்வது என்று திகைத்து நின்ற அந்தத் தயாரிப்பாளரும், இயக்குநரும், என்னைப் பார்த்தனர். என் தாயாரை அணுகி, அந்த பார்வதி வேடத்தில் என்னை நடிக்க அனுமதிக்குமாறு கோரினர். அவர்களது சிரமங்களை உணர்ந்த என் தாயார், அவர்களுக்கு அப்பொழுது உதவும் எண்ணத்துடன், என்னை அன்று நடிக்க அனுமதித்தார்கள். பார்வதி வேடம் அணிந்து, குழந்தை நட்சத்திரமாக அன்று நடித்ததுதான், நான் திரை உலகில் எடுத்து வைத்த முதல் அடி. அப்பொழுது எனக்கு வயது 7. ஒரே ஒரு காட்சி யில் மட்டும் நடிப்பதாக இருந்த நான், நன்றாக நடித்ததைக் கண்ட தயாரிப் பாளர் எனக்காக ஒரு பாடல் காட்சியையே புதிதாக அந்தப் படத்தில் அறிமுகப்படுத்தி, என்னையே அதில் நடிக்க வைத்தார்.

அதன் பின்னர், திரைப்படங்களில் நடிக்கும் எண்ணமே எனக்கு ஏற்பட வில்லை. ஏனெனில், நான் சட்டம் படித்து வழக்கறிஞர் ஆகவேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முடியா

தவாறு எனக்கு 'Chinnatha Gombe' மற்றும் 'வெண்ணிற ஆடை', ஆகிய திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தபின், என் வாழ்க்கைப் பாதையே மாறிவிட்டது. அதன்பின், படிப்படியான என்னுடைய வளர்ச்சி, மற்றும் பல்வேறு கால கட்டங்களில், எனது திரை உலக உயர்வுகளைத்தான் நீங்கள் நன்கு அறிவீர்களே!

திரை உலகம், மற்றவர்களைவிட எனக்குத் தனிப்பட்ட முறையில் செய்துள்ள மகத்தான நன்மையை, இந்த நல்ல நேரத்தில் நினைவுகூர்வது, எனது தலையாய கடமையாகும். எனது இன்றைய உயர்விற்குக் காரணமான, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை, எனக்கு அறிமுகம் செய்து வைத்த, இச்சீர்மிகு திரை உலகை, நான் எப்படி மறக்க முடியும்? எனக்கு முதன் முதலாக அறிமுகத்தையும், புகழையும், பொருளையும், பெருமையையும் ஈட்டித் தந்த, இந்தத் திரை உலகை, நான் என் வாழ்நாளில் எப்போதும் மறக்க மாட்டேன்.

திரை உலகில் உள்ள அனைத்துக் கஷ்ட நஷ்டங்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், நான் அனுபவத்தாலேயே அறிந்தவள். இந்தத் திரை உலக வாழ்வில், எனக்குக் கிடைத்த பாடம், படிப்பினை, அனுபவம், அறிவு அனைத்தும், இன்றைக்கு நான் ஏற்றிருக்கும் பொறுப்புக்கு, அடிப்படைகளாகவும், அரண்களாகவும் நிற்கின்றன என்றால், அது மிகையாகாது.

அந்தக் காலகட்டத்தில், எனக்கு ஆதரவு நல்கிய அனைத்துப் பெரியோர்களும், என் மனதில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளார்கள். குறிப்பாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடன் சேர்ந்து நான் நடித்ததும், அவர்களின் நிழலாக நான் நின்றதும், என் மனத்திரையில் நீங்கா நினைவுச் சின்னங்களாகும். எனது ஆசான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு என்னைத் திரை உலகில் வழி நடத்திச் சென்றார்.

அதன்பின் அரசியலுக்கும் வா என்று ஆணையிட்டு, அழைத்துச் சென்றார். இன்றைய எனது இந்த உயர்விற்கு, அன்றே அடித்தளம் அமைத்தார். அவரிடம் அரசியல் பாடம் பயின்ற நான், அவர் சுட்டிக் காட்டிய வழியில், அவரது அடி தொடர்ந்து, இன்றைக்குத் தமிழகத்தை வழிநடத்திச் செல்லுகின்ற, ஒரு மாபெரும் பொறுப்பை ஏற்றுள்ளேன் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

ஏழை எளியோரை இனங்கண்டு, அவர்களுக்கு வேண்டியதை விரைவில் செய்து கொடுக்க, தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசுதான், எங்கள் அரசு. சமுதாயத்தின் பல்வேறு சாரார்களின் குறை களைந்து, நிறை செய்வதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையாகும். இந்தத் தத்துவங்களை உள்ளடக்கிய எங்கள் அரசு, ஆட்சிக் கட்டிலில் ஏறிய உடனேயே சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் அழைத்து, நேரடியாக அவர்தம் குறைகளைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கைகள் எடுத்ததை, நீங்கள் நன்கறிவீர்கள். தொழிலதிபர்களை அழைத்துப் பேசினேன்; தொழிலாளர் குறை கேட்டு அறிந்தேன்; வேளாண் பெருங்குடி மக்களின் வெவ்வேறு கோரிக்கைகளைத் தெரிந்து கொண்டேன். மாணவர்,

ஆசிரியர் பிரச்சினையைக் கேட்டறிந்தேன்; பொதுமக்களை வாரந்தோறும் சந்தித்து வருகிறேன். இதேபோல, நான் திரை உலகப் பிரமுகர்களையும் அழைத்துப் பேசினேன். அதைத் தொடர்ந்து, உங்களின் கோரிக்கைகளை ஆராயுமாறு, தலைமைச் செயலாளருக்கும், உள்துறைச் செயலாளருக்கும், ஆணை பிறப்பித்தேன்.

தமிழகத் திரைப் படத்துறையின் வளர்ச்சியில், மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ள எங்கள் அரசு, விரைவில் சென்னை தரமணியில், ‘Film City’ என்ற திரைப்பட நகரை நிர்மாணிக்கும். அதன் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றதை, நீங்கள் நன்கு அறிவீர்கள். ஓராண்டுக் காலத் திற்குள், இந்தத் திரைப்பட நகரைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உருவாகி வரும் இந்தத் ‘திரைப்பட நகர்’, திரைப்படத் தயாரிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படுகிறது. இந்தத் திரைப் பட நகரில், ஒரு திரைப்படம் எடுப்பதற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, குறிப்பாகப் படப்பிடிப்புத் தளங்கள், பல்வேறு திரைப்படங்களுக்கும் பயன் படுத்தக்கூடிய பொது இடங்களான, ரயில்வே நிலையம், விமான நிலையம், பூங்கா, நீச்சல்குளம், அங்காடிகள், காவல் நிலையம், கோயில்கள்; ஆலயங்கள், மருத்துவமனை, போன்ற அனைத்தையும் தத்ரூபமாகக் காட்டக்கூடிய அமைப்புகளும், மற்றும் படப்பிடிப்பு அரங்கம், மறு ஒலிப்பதிவு - அதாவது Re-recording செய்யும் அரங்கம், வீடியோ அரங்கம், போன்ற அனைத்து வசதிகளும் கொண்டதாய் விளங்கும். சர்வதேச அளவிற்குத் தரம் வாய்ந்த, தேவையான வசதிகளை இந்தத் திரைப்பட நகரில் தருவதே எங்களது குறிக்கோள் என்பதை, உங்களிடையே தெரிவித்துக் கொள்வதில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய திரை, உலகத்தின் மாபெரும் பாதிப்பாக, அச்சுறுத்தலாக, கேபிள் டி.வி., வீடியோ இருந்து வருவதை, திரை உலகம் நன்கறியும், இந்தப் பாதிப்பிலிருந்து திரை உலகத்தைப் பாதுகாக்க, இந்தியாவிலேயே முதன் முறையாக, தமிழகத்தில்தான், கேபிள் டி.வி., வீடியோ மூலம் திரைப்படம் காட்டுவதை ஒழுங்குபடுத்தச் சட்டம் நிறைவேற்றியுள்ளோம் என்பதை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தொழில்களிலேயே திரைப்படத் தொழில் மிக மிக நுண்ணியது; மக்களை ஈர்க்கும் சாதனங்களில் மகத்தானது; வலிமை மிக்கது. இதில் முத்தமிழ் உண்டு; கண்ணுக்கினிய காட்சி உண்டு; காதுக்கினிய கானம் உண்டு; அறிவுக்கினிய கருத்து உண்டு. திரைப்படம் ஒரு அரிய, சிறந்த கலை. உள்ளதை உள்ளபடி சொல்லுவது அறிவியல் - உள்ளதை உணர்ந்தபடி சொல்லுவது கலை. அறிவியல் மூளைக்கு இன்பமூட்டுவது; கலை இதயத்திற்கு இன்பமூட்டுவது. அதனால்தான், கலைக்கு என்றுமே வலிவு அதிகம். திரைப்படக்கலை, எல்லோரையும் எளிதில் சென்றடைவதால், இதில் சொல்லப்பட்ட கருத்து, நீதி, நெறி, படிப்பினை, பலருக்குப் பாடமாக அமைகிறது.

திரைப்படம் ஒன்றினை உருவாக்குவது என்பது, எத்தனைக்கடினமான காரியம் என்பதை நான் அறிவேன். நடிகர்கள், நடிகைகள், இயக்குநர்,

கதாசிரியர், வசனகர்த்தா, இசை அமைப்பாளர், பாடல் ஆசிரியர், ஒளிப் பதிவாளர், ஒலிப்பதிவாளர், எடிட்டர், போன்ற பல்வேறு கலைஞர்களும், தொழில் நுட்ப வல்லுநர்களும், அவர்களது உதவியாளர்கள் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்து, ஒருமுகமாக ஒத்துழைத்தால்தான், ஒரு தயாரிப்பாளர் திரைப்படத்தை முடித்து, வெற்றிகரமாக வெளியிட முடியும். தனிப்பட்ட பலரின் திறமைகளை, ஒன்றாக இணைத்து உருவாகும் திரைப்படம், ஒவ் வொருவரின் முத்திரையைத் தன்னகத்தே கொண்டுதான் வெளி வருகிறது.

எனவே, ஒற்றுமை என்பது, திரைப்படத் துறைக்கு மிகமிக அவசியமானது. திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரைஅரங்கு உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர், அனைவரும் ஒருமுகமாகச் செயல்பட வேண்டும். அவர்களுக்குள் விலகல், விரிசல் கூடாது. ஒருவருக்கு ஒருவர் பனிப்போரில் ஈடுபடக் கூடாது. Conflict of interest என்பதை நீக்கி, Commonality of interest என்பதை வளர்த்துக் கொண்டு, செயல்பட வேண்டும். இது இயலாவிட்டால், ஒருவருக்கொருவர், 'நல்லது செய்தல் ஆற்றீராயினும், அல்லது செய்தல் ஓம்புமின்' என்ற நெறிப் படி, உதவி செய்யா விட்டாலும், உபத்திரமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

திரைப்படத் தொழிலின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், இது மிக மிக அவசியமான ஒன்றாகும்.

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் தலைவரும், மற்றவர்களும், வெவ்வேறு மட்டங்களில் இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல் களையும், ஆபத்துக்களையும், என்னிடத்தில் பல்வேறு சமயங்களில் விளக்கிக் கூறி இருக்கிறார்கள். எழுத்து வடிவத்திலும், கோரிக்கைகளாகக் கொடுத் திருக்கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், திரைப்படத் தயாரிப்பாளர்கள் சார்பாக, விநியோகஸ்தர்கள் சார்பாக, திரையரங்கு உரிமையாளர்கள் சார்பாக, திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்கள் சார்பாக, ஃபெடரேஷன் மூலமாக, அதுவும் 24 கிராஃப்ட்ஸ் (Crafts) தொடர்பாக, எழுப்பப்பட்ட கோரிக்கைகள், பிரச்சினைகள், குறை பாடுகள், இடர்ப்பாடுகள், எல்லாம் அரசு மட்டத்தில் ஆராயப்பட்டன. என்னுடன் நேரடியாக விவாதிக்கப்பட்டன. நீங்கள் கேட்பதை எல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்ற மனம் எனக்கு இருந்தாலும், வரையறுத்த வருவாய்க்கு ஆட்பட்ட அரசிடம், தற்போது போதிய பணம் இல்லாததால், உங்களின் ஏக்கத்தால் ஏற்பட்ட தாக்கத்தை, என்னால் எவ்வளவு தூரம் ஈடேற்றி வைக்க முடியும் என்று தெரியவில்லை. இருப்பினும், எல்லோருக்கும் எல்லாவற்றையும் செய்யத் துடிக்கும் உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த அரசு, உங்களை நிச்சயமாக ஏமாற்றாது.

திரைப்படத் தயாரிப்பில், பெரிய முதலீடு செய்து, பிரபல நடிகர்களை வைத்து, பிரம்மாண்டமான தயாரிப்புகளைச் செய்யும் பெரும் முதலாளி களும்; சிறு முதலீடு செய்து, நிறைய படங்களைத் தயாரிக்கும், சிறு சிறு தயாரிப்பாளர்களும் உண்டு. ஏறத்தாழ 95 சதவிகிதத்திற்குமேல் தயாரிக்கப் படும் திரைப்படங்கள் சிறுசிறு பட முதலாளிகளின் பெரு முயற்சி தான்

என்பதை, நான் நன்கறிவேன். இவர்களை நம்பி, பல இலட்சக்கணக்கான திரைப்படத் தொழிலாளர்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். திரைப் படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள, இச்சிறு முதலாளிகள் தான், திரைப்படத் தொழிலின் இதயத் துடிப்பாக இயங்கி வருகின்றனர். தொழில் ரீதியாகப் பல கஷ்ட நஷ்டங்களை, நாள்தோறும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். படத் தயாரிப்பில் ஏற்படும், அளவுக்கு மீறிய செலவினங்கள், அளவுக்கு மீறிய வட்டி விகிதம் போன்றவற்றால், பொருளாதார மூச்சுத் திணறலில், சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ, அரசு ஏற்கெனவே ஒரு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை, செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் சிறு முதலீட்டுப் படங்கள் ஒவ்வொன்றுக்கும், 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல், இந்த உதவித் தொகையை அரசு, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கும் என்ற நல்ல செய்தியை, உங்களுக்குச் சொல்லு வதில் உவகை அடைகிறேன். மேலும், இந்த ஆண்டு முதல், 50 படங் களுக்குக் குறையாமல், தகுதியின் அடிப்படையில், இவ்வுதவித் தொகை வழங் கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த உதவித் தொகையும், திரைப்படம் திரையிடப்பட்ட 3 மாதங்களுக்குள் வழங்க, தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், மகிழ்ச்சியுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அரசுக்குச் சொந்தமான இடங்களில், வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்க Out-door shooting செய்ய, பல்வேறு துறைகளைத் தனித்தனியே அணுகி, அனுமதி செய்ய தற்போதைய முறையை மாற்றி, Single Window System மூலம், அதாவது, ஒரே இடத்தில் அனைத்துத் துறைகளின் அனுமதி யைப் பெறும் வகையில், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரையரங்கு உரிமையாளர்கள், திரையரங்கு நுழைவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கவேண்டும் என்றும், தற்போதைய சூழ்நிலையில் திரை யரங்கைப் பராமரிப்பதற்கு அதிகச் செலவு ஏற்படுகிறது என்றும், ஒரு சில மாநிலங்களில் இருப்பதைப்போல், ஒரு சிறு தொகையைப் பராமரிப்புக் கெனத் திரையரங்குகள் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்றும், நீண்ட நாட்களாகக் கோரி வருகிறீர்கள். உங்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, குளிர்சாதன வசதியுடைய திரையரங்குகளுக்கு ஒரு டிக்கெட்டிற்கு 25 பைசா வீதமும், பிற திரையரங்குகளுக்கு, ஒரு டிக்கெட்டிற்கு 10 பைசா வீதமும், பராமரிப்புச் செலவுக்கென வசூலித்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று, இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

திரையரங்குகளில் காட்டப்படும் சிலைடுகளுக்குத் தற்போது விதிக்கப் படும் வரியை, நீக்க வேண்டும் என்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையினை ஏற்று இந்த வரியினை நீக்க அரசு விரைவில் ஆணை பிறப்பிக்கும்.

சென்னை நகரை அழகுபடுத்தும் நன்முயற்சியில் ஒத்துழைத்து, அதே நேரத்தில் விளம்பரங்களை ஒட்ட, தனி இடங்களை ஒதுக்கித்தர வேண்டு மென்று கேட்டுள்ளீர்கள். இக்கோரிக்கையையும் ஏற்று, திரைப்பட விளம் பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு, ஒரு சில குறிப்பிட்ட இடங்கள், சென்னை நகரில் விரைவில் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒதுக்கப்படும் என்பதை யும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள, தொழிலாளர் பெருமக்களின் நலன் காக்கும் பொருட்டு, திரைப்படத் தொழிலாளச் சகோதரர்கள், அவர்கள் பணிபுரியும்பொழுது, விபத்தில் சிக்குண்டு இறந்தாலோ, அல்லது காயம் அடைந்தாலோ, அவர்களுக்கு முறையே 10,000 ரூபாய் மற்றும் 5,000 ரூபாய் உதவித் தொகையாக, இனி அரசு வழங்கும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்துபோனவர் குடும்பத்திற்கு 10,000 ரூபாயும், காயமுற்றவர்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும்.

சிறந்த திரைப்படங்கள் மற்றும் சிறந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், தொழிலாளர் பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப் படும். திரைப்பட நகரத்திற்கான ஆலோசனைக் குழுவிலும், அதாவது, Film City Advisory Committee-யிலும், இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க முயற்சிக்கப்படும். இதேபோல், மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலும், Regional Labour Advisory Committee-யிலும், இவர்களுக்கு இடம் அளிக்கப்படும், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இவை தவிர, விற்பனை வரி, கேளிக்கை வரி போன்றவற்றைக் குறைக்க வேண்டும், வேறு சில சலுகைகள் வழங்க வேண்டும், எனக் கேட்டிருக் கிறீர்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி, உங்களுக்கு உதவி செய்ய, அரசிற்கு நிறைய மனம் உண்டு; ஆனால் பணம் தான் இல்லை. உங்களின் கோரிக்கைகள் என் மனதிலே, ஆழமாகப் பதிந்திருக்கின்றன. உரிய நேரத் தில், முடிந்ததை உறுதியாகச் செய்வேன் என்பதை மட்டும், இத்தருணத்தில் கூறிக் கொள்கிறேன்.

உங்களின் சகோதரி என்ற முறையில் நான் உங்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 'உழைப்பே உயர்வு' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாரக மந்திரம், பொதுவாக, வாழ்க்கையில் எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும், என்றாலும், திரைப்படத் துறைக்கு அது மிக மிகப் பொருத்தமானதாகும். திரை உலகில் ஒருவர், தனது உழைப்பால் மட்டும்தான் உயர, வளர, புகழ் பெற முடியும். எனவே, 'உண்மை - உழைப்பு - உறுதி - துணிவு- நேர்மை' என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுங்கள், அது உங்களை உயர்த்தும்; நீங்கள் ஈடுபட்டுள்ள தொழிலை வாழவைக்கும். அதில் வெற்றிகள் பலவற்றை உங்களுக்குத் தேடித் தரும். பிறகு உயர்வுகள் பல தொடர்ந்து உங்களைத் தானாகவே நாடி வரும்.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் விளைவாக, புதிய புதிய தொழில் நுட்பங்களும், புதிய சாதனங்களும் உருவாகி வருகின்றன. இந்த விஞ்ஞான வளர்ச்சியை யாரும் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. இதுபோன்ற

மாற்றங்கள் ஏற்படுவது காலத்தின் கட்டளை. உலக வாழ்க்கையின் இயல்பு. அத்தகைய அறிவியல் மாறுதல்கள் ஏற்படும்பொழுது அவற்றை நாம் வரவேற்பதோடு, அதற்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக்கொண்டு, அவற்றையும் நம் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொண்டால்தான், வெற்றி காண முடியும்.

தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தைத் தட்டி எழுப்பும் பலம் திரைப் படத்திற்கு மட்டுமே உண்டு. செம்மையான கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிந்திட, மக்களிடையே புதுமைக் கருத்துக்களைத் தோற்றுவிக்க, ஒரு புதிய விழிப் புணர்ச்சியை ஏற்படுத்திட, சினிமாவை விட ஒரு சிறந்த் சாதனம் இல்லை என்பதை, என்னால் ஆணித்தரமாகச் சொல்ல முடியும். எனவே, இன்றைய சினிமாத் துறையில் உள்ளவர்கள் அத்தகையதொரு அரிய சமுதாயப் பணியில், தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பதே, எனது விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

அதே நேரத்தில், தனி மனித சுதந்திரத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும், சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் காவலர்களாய், திரைப்படத் துறையினர் திகழ வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, குறிப்பாக - திரைப்படத் துறையில் ஈடுபட்டுள்ள சகோதர, சகோதரிகள் மீது, மக்கள் வைத்திருக்கும் மகத்தான நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும், நல்லெண்ணத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றி உங்கள் வாழ்க்கையில் உயர்ந்திடுவதோடு, இந்த மாநிலத்தையும், இந்த நாட்டையும் உயர்த்திட, சூளுரையேற்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வாழ்த்தி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**(25.7.92 அன்று, திரையுலகம் அளித்த பாராட்டு விழாவில் ஆற்றிய உரை)**

# இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டிச் சூளுரை ஏற்போம்

**பொன்**விழாக் காணும் ஒரு மாபெரும் இந்தியப் புரட்சியை, நன்றி யுணர்வோடு நினைவு கூரும் இந்த நன்னாளில், நமது விடுதலைக்கு உழைத்திட்ட நல்லோரைச் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை - அது எங்கள் உயிர் மூச்சு' என்று முழக்கமிட்டு, எடுத்த காரியத்தை முடிப்பதற்காகத் தியாகத் தழும்பேறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், இந்த அரங்கினில் அமர்ந்திருக் கிறார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய சந்ததி யினருக்குச் சுதந்திரத்தின் பெருமையை எடுத்துச் சொல்லத் தகுதியான பெரியவர், விடுதலைப் போராட்ட வீரர், சிலம்புச் செல்வர் டாக்டர் ம .பொ.சி. அவர்கள், இன்று நம்மிடையே தமிழகத்தில் உள்ள அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களின் பிரதிநிதியாக வீற்றிருக்கிறார்கள். சிலம்புச் செல்வர் அவர்கள், விடுதலைப் போரில் பங்கேற்று, காந்தியடி களின் முன்னணித் தொண்டராக விளங்கியவர். காந்திய நெறிகளால் கவர்ந் திழுக்கப்பட்ட அவர், அன்னை தமிழுக்கும் அருந்தொண்டாற்றி வருகிறார். அவர் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பதில் நமக்குத்தான் பெருமை. அவர் இவ்விழாவில் கலந்து கொண்டு தமது சிறப்புரை மூலம் நினைவு கூர்ந்த, சுதந்திரப் போராட்டக் கால உண்மைகள், நம்மை அந்தக் கால கட்டத்திற்கே அழைத்துச் சென்றன. அவர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தமையை எண்ணி, மகிழ்ச்சி அடைகின்றேன்.

## தனிச்சிறப்பு கொண்டது

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்து விட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டு களிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித்திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவுகூர்கின்றோம். இந்த நினைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமையும், புகழும் உடைய தனிச்சிறப்புக் கொண்டது.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, நம் விடுதலைக்காகப் போராடிய தியாகச் செம்மல்களைப் பாராட்டிப் போற்றுவது, நம் ஒவ்வொருவரின் பிறவிக் கடனாகும். வாழ்நாளெல்லாம் பாராட்டிப் பின்பற்ற வேண்டிய பெரும் கடமையாகும். 50 ஆண்டுகளுக்கு முன்னர், இதே ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாளினை எண்ணிப் பார்க்கின்றேன்! எத்தனையோ அடக்கு முறைகளை, அவிழ்த்துவிட்ட அச்சுறுத்தல்களை நடைமுறையாக்கிச் செயல் படுத்திய, ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, நம் தாய்த் திருநாட்டின் அடிமை விலங்கை அகற்றியே ஆகவேண்டும், என்ற ஒரே சிந்தனையில் செயல்பட்ட தியாக சீலர்களின் நாட்டுப்பற்றை எண்ணி, வியக்கின்றேன்!

அன்றைய தினம், அண்ணல் காந்தியடிகள் ஆற்றிய வீர உரை, இன்றும், அரை நூற்றாண்டுக்குப் பிறகும், உயிர்த்துடிப்புள்ள வாசகமாக, நம் இதயச் சுவர்களில் எதிரொலிக்கின்றது. அதை நினைக்க நினைக்க, நம் நெஞ்சத்தில் விடுதலைக்கனல் கொழுந்துவிட்டு எரிவதை, இன்றும் நம்மால் உணர முடிகிறது.

## செய் அல்லது செத்து மடி!

"Everyone of you should, from this moment onwards, consider yourself a free man or woman, and act as if you are free and are no longer under the heel of imperialism. I am not going to be satisfied, with anything short of complete freedom.

Do or die. We shall either free India or die in the attempt.' என்று அண்ணல் காந்தியடிகள் முழங்கினார்.

வைரம் பாய்ந்த இந்த வார்த்தைகள், இப்போது சொல்லும்போதே நமக்கு இவ்வளவு உணர்ச்சியூட்டுமானால், அன்று அடிமைப்பட்டு, அல்லலுற்றுக் கிடந்த மக்களுக்கு, அது எவ்வளவு ஆவேசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

'வெள்ளையனே வெளியேறு' என்ற வீர முழக்கம், நாடெங்கும் ஒலித்து, அதை அடக்க ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. மக்களோடு இராணுவம் மோதியது. நிராயுதபாணியான மக்களைத் துப்பாக்கியால் இராணுவம் சுட்டுப்பொசுக்கியது.

அன்று பற்றி எரிந்த விடுதலைத் தீ, 5 ஆண்டு காலத்தில் பாரதமாதாவின் விலங்குகளை உடைத்து, விடுதலை தந்தது. அதன் பயனாகத்தான் இன்று, நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட்டு, வல்லமை கொண்டு, வையகம் புகழ வாழுகிறோம்; புதிய வரலாறு படைக்கின்றோம்.

சுதந்திரப் போராட்டமே அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த ஒரு அரசியல் கட்சியும், அந்நியர் ஆட்சிக்கு ஆதரவு தந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு கட்சியும் நமது நாட்டில் விடுதலைக்காகப் பல சோதனைகளை எதிர் கொண்டு போராடியுள்ளது.

## தனி உரிமை கொண்டாட முடியாது!

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ, [illegible]த்தினரோ, மொழியினரோ இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவுகூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையை யும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத்தருணத்தில் திட்ட வட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவு களால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல், தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள், என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றி களை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

## எங்களுக்கு வழிகாட்டட்டும்

இந்த விழா வழங்குகின்ற உத்வேகம், புத்துணர்ச்சி, நம்மிடம் தொடர்ந்து நிலைத்து இருக்க வேண்டியது, தற்போது மிகமிக அவசியம். இலட்சியப் பாதையில் வீறுநடை போட, உங்களது தியாகம் எங்களுக்கு வழிகாட்டட்டும்; உங்களது வீரம், எங்கள் விழிகளுக்குள் ஒளி ஊட்டட்டும் என்று வேண்டுகிறேன்.

எதிர்கால நம் தலைமுறையினருக்கு, இந்த நன்னாளை நினைவூட்டும் முகத்தான், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா ஆண்டு நினைவுத்தூண் ஒன்றை நிறுவிட, அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான அடிக்கல்லினை, இந்தப் புனித வேளையில் நாட்டியதை எண்ணிப் பெருமை அடைகின்றேன்.

நாட்டிற்கு உழைத்த நல்லோரை, என்றென்றும் போற்றிப் புகழும் எங்கள் அரசு, 'வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன்விழா ஆண்டில்', நமது தமிழகத்தில் உள்ள விடுதலை வீரர்களைப் பாராட்டும் முகத்தான், இச்சீரிய விழாவினைச் சென்னையில் எடுத்துள்ளது.

விடுதலைப் போராட்டத் தியாகிகளின் கோரிக்கைகள் பல, நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன, என்பதை நான் அறிவேன். அரசிடம் உதவி

நாடி வரும் மக்களுள், தலையாய இடம் அளிக்கப்பட வேண்டியவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று நான் குறிப்பிட்டால், அதனை மறுக்க முடியாது.

நமது நாட்டின் விடுதலைக்காகத் தங்களை வருத்திக்கொண்டு, சிறையில் வாடிய அத்தியாக சீலர்களுக்கு, அந்நியர் ஆட்சியின் கொடுமைகளால், தாங்கொணாத் துயரமடைந்தும், சிறிதும் மனம் தளராது, தாம் கொண்ட சுதந்திர வேட்கையில் உறுதியாக இருந்த அந்த நல்லவர்களுக்கு, நாம் முன்னுரிமை கொடுப்பதுதான் முறையாகும். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள், அரசாலும் அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், அவர்களுக்கென ஒருசில சிறு உதவிகள் புரிவது, அரசின் கடமை ஆகும். அந்த அடிப்படையில்தான், இந்நன்னாளில் கடமை உணர்வோடு, அவர்கள் பயன்பெறத்தக்க வகையில், ஒருசில அரசு சலுகைகளை அறிவிப்பதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## அரசு அளிக்கும் சலுகைகள்

சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களுக்கு, மத்திய அரசும், மாநில அரசும், ஓய்வூதியம் வழங்கி வருகின்றன. தற்போது, மத்திய அரசு வழங்கும் மாத ஓய்வூதியமாக 750 ரூபாயைத் தமிழகத்திலுள்ள 1,706 தியாகிகள் பெற்றுவருகின்றனர்.

மத்திய அரசு வழங்கும் ஓய்வூதியத்துடன், தமிழக அரசு வழங்கும் மாத ஓய்வூதியமாக 100 ரூபாயையும் சேர்த்து, 850 ரூபாய் பெற்று வரும் தியாகிகள், 4,023 பேர் உள்ளனர்.

மாநில அரசு வழங்கும் மாத ஓய்வூதியமான, 400 ரூபாயை மட்டும் பெற்று வரும் தியாகிகள், 6,681 பேர் இருக்கின்றனர்.

இனி இவர்கள் அனைவரும் மொத்த ஓய்வூதியமாக, ஒவ்வொரு மாதமும், 1,000 ரூபாய் பெறும் வகையில், ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆணையின்படி, இந்த மாதம் முதல், 750 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 250 ரூபாய் கூடுதலாகவும்; 850 ரூபாய் பெற்று வருபவர்களுக்கு 150 ரூபாய் கூடுதலாகவும்;இதுவரை மாநில ஓய்வூதியமாக 400 ரூபாய் பெற்று வந்தவர்களுக்கு, 600 ரூபாய் கூடுதலாகவும் வழங்கப்படும்.

மேலும், சுதந்திரப் போராட்ட விடுதலை வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியமான 400 ரூபாயை - 500 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளேன் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள 15,169 விடுதலை வீரர்களும், அவர்தம் குடும்பத்தினரும், இந்த அறிவிப்புகளைப் பெரிதும் விரும்பி வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன். அரசிற்கு நிதி நெருக்கடியான இந்தச் சூழ்நிலையிலும்,

நாட்டிற்கு உழைத்த நல்லோருக்கு, இந்நன்னாளில் நாம் ஏதாவது உதவ வேண்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான், அரசிற்கு 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், அதனைப் பொருட்படுத்தாது, விடுதலை வீரர்களின் ஓய்வூதியங்களை உயர்த்தி ஆணையிட்டுள்ளேன்.

இதுவரை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய, சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச பஸ் பாஸ் சலுகையை சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, நீண்ட காலமாகவே அரசின் பரிசீலனையில் இருந்துவந்தது.

இந்த நன்னாளில், சுதந்திரப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும், இலவச பஸ் பாஸ் வழங்கலாம் என்ற முடிவை அரசு எடுத்துள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை தவிர, மேலும் பல கோரிக்கைகள் உள்ளன என்பதையும் நான் அறிவேன். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து, விரைவில் உங்களுக்கு நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இவ்விழாவில் கலந்துகொள்ள, அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்துள்ள, ஏறத்தாழ 1000 விடுதலை வீரர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, இவற்றை எடுத்துச் செல்ல, பயணப் பெட்டி ஒன்றையும் அரசு கொடுத்துச் சிறப்பித்துள்ளதை எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

## விடுபட்ட விடுதலை வீரர்கள்

இன்றைய விழாவில், குறிப்பிட்ட ஒரு சில விடுதலை வீரர்களை மட்டும்தான் அழைத்துச் சிறப்பிக்க முடிந்தது. தமிழகத்தில் உள்ள எல்லா விடுதலைப் போராட்ட வீரர்களும், இன்று இவர்கள் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, வருகின்ற ஆகஸ்டுத் திங்கள் 15-ஆம் நாளன்று, நடைபெற இருக்கும் சுதந்திர நாள் விழாவில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் சிறப்பிக்கப்படுவார்கள்.

இன்றைய விழாவில் சிறப்பிக்கப்பட்டதைப் போலவே, ஒவ்வொரு விடுதலைப் போராட்ட வீரருக்கும், பொன்னாடை அணிவித்து, பொன்விழா ஆண்டு நினைவுப் பரிசு வழங்கி, அவற்றை எடுத்துச் செல்ல, பயணப் பெட்டி ஒன்றும், சுதந்திர தினத்தன்று, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்படும், என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சரித்திரப் புகழ் கூறும் இந்நன்னாளில், தமிழகத்தில் வாழும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும், என் அன்பு வாழ்த்துக்களை, மகிழ்ச்சியுடன் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்தியாவைக் காக்கின்ற ஒப்பற்ற பணியில், தங்களை எப்போதும் ஈடுபடுத்திக் கொள்ளவும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரம் நீட்டி, அதற்கு ஆதரவாக என்றென்றும் உறுதுணையாக நிற்கவும், தமிழ் நாடும், தமிழக மக்களும், இந்த விழாவின் மூலம் சூளுரை ஏற்போம்.

**(9.8.92 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கப் பொன்விழாவில் ஆற்றிய உரை)**

# இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும் மாநில உரிமைக்குக் குரல்கொடுப்பதும் முரண்பட்டவையல்ல!

**தா**யகம் விடுதலை பெற்ற இந்தத் தங்கத்திருநாளைத் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் கொண்டாடும் இந்த இனியவேளையில், விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான, என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டொளி வீசிப் பறக்கும் பாரதத் தாயின் மணிக்கொடியை, சரித்திரப் புகழ்மிக்க இந்தக் கோட்டையில் ஏற்றி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி யும் பெருமையும் அடைகிறேன். இந்த மாபெரும் வாய்ப்பை எனக்கு வழங்கி யிருக்கும் தமிழகத்துச் சான்றோர்கள், பெரியோர்கள், தாய்மார்கள் ஆகிய அனைவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்கிக் கொள்ளும் அதே நேரத்தில், எல்லோர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ' என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப, 'பூரண சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமை' எனப் பிரகடனம் செய்து, 'வெள்ளையனே வெளியேறு' என வீர முழக்க மிட்டு, 50 ஆண்டுகள் நிறைவேறியதை நெஞ்சில் பதிக்கும் ஆண்டிலே, வருகின்ற விடுதலைத் திருநாள் என்பதால், இந்த நாளின் வரலாற்றுப் பெருமை இரட்டிப்பாகிறது.

## வரலாற்று நாயகர்கள்

எந்தக் கோட்டை ஆங்கில ஆதிக்கத்தின் அதிகாரக் கோட்டையாக இருந்ததோ, அந்தக் கோட்டையில், பாரதத் தாயின் மணிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதும், அதைப் பெருமிதத்தோடு நாம் பார்ப்பதும், பெருமை யோடு பார்த்துப் பரவசப்படுவதும், எத்தனைச்சிறப்புக்குரியது என எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இந்த மாபெரும் பெருமையை நமக்கு வழங்கிய வீரத்தின் விளை நிலங்களான, வரலாற்று நாயகர்களை, தியாகத்தின் திருவுருவங்களை, நன்றிப் பெருக்கோடு நான் நினைத்துப் பார்க்கிறேன்.

சுதந்திரக் காற்றை, நாம் சுவாசிப்பதற்காகத் தங்களது மூச்சை நிறுத்திக் கொண்டவர்கள், என்றென்றும் நம் இதயத்தில் நிலைத்து நிற்கிறார்கள். அவர்களது வீரத்தையும், தீரத்தையும் எண்ணிப்பார்க்கிற நாளாக, இந்த நாள் விளங்குகிறது.

இந்தத் திருநாளில் அந்தப் பெருந்தகையாளர்களுக்கு, உங்களோடு சேர்ந்து என் வீர வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

இந்த நாள், விடுதலையை வென்றெடுத்த திருநாள் மட்டுமல்ல; நாமெல்லாம் ஒன்றுபட்ட திருநாளும் கூட!

'வாழ்கின்றார் முப்பது கோடி மக்களென்றால், சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்குமே' என்பதுதான் முன்பு இந்தியா இருந்த நிலை! இப்படிப் பிரிந்து பிரிந்து பேதப்பட்டுக் கிடந்த நம்மை, இணைத்துப் பிணைத்த நாள்தான், இந்தப் புனித நாள்.

## நமது தலையாய கடமை

பெற்ற விடுதலையைப் பேணிக்காப்பதும், 'இந்தியா ஒன்றே' என்ற ஒற்றுமை உணர்வை எப்போதும் வளர்ப்பதும், நமது தலையாய கடமை, எனவேதான், நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற தீய உணர்வு தலை தூக்குகிறபோது எல்லாம், அதை வேரோடு கிள்ளியெறியக் கிளர்ந்தெழுந் துள்ளது எங்கள் அரசு.

விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை எய்துவதிலும் எப்போதும் முன்னணியில் இருந்து வந்துள்ளது எங்கள் அரசு.

இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடுவதும், நம் செந்தமிழ் நாட்டின் உரி மைக்குக் குரல் கொடுப்பதும், முரண்பட்டவை அல்ல என்றே கருதுகிறேன்.

## காவிரிப் பிரச்சினை

தாய்த் திருநாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதில், எவருக்கும் முன்னால் நிற்கின்ற நாம், நம் மாநிலத்தின் அடிப்படை உரிமைகளைக் காப்பதிலும், மற்ற எவரைக் காட்டிலும் முன்னால் நிற்கிறோம்.

இந்த இரண்டிலுமே வெற்றி பெறுகிறோம் என்பதுதான் நமது அரசு படைத்திருக்கிற தனிப்பெருமையாகும். இந்த அடிப்படையில் அமைந்ததே காவிரிப் பிரச்சினையில் நாம் அடைந்த வெற்றி ஆகும்.

இந்த மண்ணின் உயிர்ப்பிரச்சினையும், உரிமைப் பிரச்சினையுமாகிய, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு, உச்சநீதிமன்றத் தீர்ப்பு நமக்குக் கிடைத்த தார்மீக வெற்றி! நமது நியாயக் குரலுக்கு நீதி செவிகொடுத்தது. நியாயம் மறந்த சில உள்ளங்கள் அதை மதிக்க மறுக்கின்றன.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையாகிய காவிரிப் பிரச்சினையில், உரிய வெற்றியை அடைந்தே தீருவோம்! நாம் ஈட்டிய வெற்றியின் பலன் கிடைக்கும்வரை இப்பிரச்சினையில் நாம் ஓயமாட்டோம்; ஒதுங்க மாட்டோம் என்கிற உறுதிமொழியே இவ்விடுதலை நாளில் நாம் மேற்கொள்ளும் சபதமாகும்.

## கச்சத் தீவுப் பிரச்சினை

இந்த மண்ணின் ஒரு பகுதியாக இருந்து, இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டுவிட்ட கச்சத்தீவை, மீண்டும் பாரதத்தோடு இணைக்கவேண்டும் என்று, கடந்த ஆண்டு இதே நேரத்தில் இதே இடத்தில் குறிப்பிட்டேன்.

அந்த என் உணர்வினை அரசின் சார்பில் நம் சட்டமன்றப் பேரவையிலேயே தீர்மானமாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். இந்திய நாட்டின் இறையாண்மை கருதியும், தமிழக மீனவரின் உரிமை காக்கவும், நாம் விடுத்திருந்த கோரிக்கைக்கு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அதுபற்றி 'ஆழ்ந்தும் விரிவாகவும் பரிசீலிக்கிறோம்' என ஆறுதல் தரும் பதில் அனுப்பி இருக்கிறார்.

மத்திய அரசோடு சுமுகமான உறவும், நம் உரிமைகளை விட்டுக் கொடுக்காத மரபும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நமக்குக் காட்டிச்சென்ற வரலாற்றுப் பாதைகளாகும். அந்த வெற்றிப்பாதையில், நம் அரசு வீறுநடை போடுகிறது என்பதை, நான் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த தத்துவங்களைச் செயலாக்குவதே இந்த அரசின் இலட்சியம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

சுதந்திரம் என்பது அரசியல் விடுதலையோடு நின்றுவிடுவதன்று, விடுதலை பெற்ற நாடு, ஆண்டாண்டுக் காலம் அந்நியர் ஆட்சியில் இருந்து விடுபட்ட நாடு, தன் பொருளாதார சமூகக் கூட்டமைப்புகளைச் சீர்படுத்திக் கொள்ளச் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது, அதன் தலையாய கடமை ஆகும்.

கடந்த ஓராண்டு காலத்தில் எங்கள் அரசு பல அரிய சாதனைகளை ஆற்றியுள்ளது. பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த பி அண்டு சி ஆலை, எங்களுடைய சீரிய முயற்சியால்தான் மீண்டும் திறக்கப்பட்டு, 8,000 தொழிலாளர்களின் இல்லங்களில் விளக்கேற்றி வைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மற்றும் கே.சி.பி. ஆலைகள், எங்கள் முயற்சியால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

## எந்தப் பிரச்சினையானாலும்...

கிறித்துவக் கல்லூரி பிரச்சினையாகட்டும், அரசு ஊழியர்கள் பிரச்சினையாகட்டும், பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாகட்டும், மக்கள் நலனைப் பாதிக்கின்ற எந்தப் பிரச்சினையானாலும், எங்கள் அரசு உடனடியாக அதில் தலையிட்டு, நேரிடையாகச் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி, அமைதியான வழியில் அப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதை, நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாய் செலவில், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். எங்கள் அரசின் புதிய தொழில் கொள்கை, பெருவாரியாக அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டம், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் வாழும், ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகள், மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, 42 கோடி ரூபாய் செலவில், இலவசமாக சேலை-வேட்டிகளை வழங்கியது எங்கள் அரசு.

நாம் விடுதலை பெற்றதன் நோக்கமே, இவைபோன்ற அடித்தளத்து மக்களுக்கு உதவும் திட்டங்களை மேற்கொள்வதும், அவர்களுக்குச் சேவை செய்வதுமே ஆகும்.

மகளிர் மேம்பாடு, இந்த அரசின் கவனத்தை எந்த அளவுக்கு ஈர்த்திருக் கிறது என்பதற்கு, நமது செயல்பாடுகளும், குறிப்பாக ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு என்னும் திட்டமும், ஏற்ற எடுத்துக்காட்டு களாகும்.

தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள், இவர்கள் நலம் காக்க, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் உயர்ந்து விளங்க, அரசு அரிய பல முயற்சிகளை எடுத்து வருகிறது.

## புதியதோர் புரட்சி

இதுவரை எந்த அரசும் செய்ய முன்வராத புரட்சியாக, ஆதிதிராவிடர் களுக்கென முதன்முறையாக, 200 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற் பேட்டைகளை, கோவை, பெரியார் மாவட்டங்களில் அமைக்க, எங்கள் அரசுதான் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதுபோலவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வளர்ச்சியிலும் அரசு ஆர்வத்தோடு திட்டங்களை வகுத்துச் செயலாற்றி வருகிறது.

மண்டல் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு முழுமையாக நிறை வேற்ற வேண்டுமென்றும், பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 27 சதவிகிதம் என்ற அளவோடு இல்லாது, தமிழகத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது போல், 50 சதவிகிதம் அளவுக்கு இருக்க வேண்டும் என்றும், வற்புறுத்தி, சட்டப்பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.

இதுபோன்ற சமூகத்தின் நலிந்த தரப்பினரின் நலம் காப்பதில், எங்கள் அரசு முன் நிற்கிறது.

மருத்துவ வசதிகள், தமிழகத்தின் மூலை முடுக்குகளில் வாழும் எல்லா ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக, சிறப்பு மருத்துவ நலத்திட்டத்தின்கீழ், ஊர்ஊராக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருவதை, நீங்கள் அறிவீர்கள்.

மருத்துவரைப் பார்க்க மக்கள் வருவதைவிட, மக்களிடம் மருத்துவர் செல்ல வேண்டும் என்னும் நம் விருப்பத்தின் செயற்பாடாக, இன்று, இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இன்றைக்கு ஆலயங்களிலே திருப்பணிகள், ஓர் அமைதியான ஆன்மீகப் புரட்சிக்கு அடிப்படை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

அண்டை மாநிலமான கர்நாடகம், உச்ச நீதிமன்ற ஆணையினை மதித்துக் காவிரி நீர் தர மறுத்தாலும், இயற்கை அன்னை, நம் நியாயமான உரிமைகளைக் காக்கும் வகையில் கை கொடுத்து உதவியுள்ளது. தமிழகத்தில், தானிய விளைச்சல் இந்த ஆண்டு, 90.7 இலட்சம் டன் என்று, இதுவரை அடையாத உயர்ந்த நிலையை எய்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சமுதாய முன்னேற்றம்:

- இந்நிலை, வள்ளுவப் பெருந்தகையின்
  'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
  மடிதற்றுத் தான்முந் துறும்'

  - என்ற குறள் வரிகளை மெய்ப்பித்துள்ளது.

சமுதாய முன்னேற்றத்துக்காக நாம் எடுத்துவரும் முயற்சிகள் பல. எந்த மாறுதலும் அடிப்படையிலிருந்து தொடங்கவேண்டும். எனவேதான் 'அடித்தள' மக்களுக்குத் தன்னிறைவு அளிக்கின்ற திட்டங்களை, நாம் செயல்படுத்தி வருகின்றோம்.

திங்கட்கிழமைதோறும், மாவட்ட வாரியாக மக்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, உரிய கவனத்தோடு அவற்றைப் பரிசீலித்து, விரைந்து உரிய நடவடிக்கைகளையும், உதவிகளையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

## புகழ்க்கொடை வழங்கப்படும்

கடந்த சில நாட்களுக்கு முன்னர், பெங்களூரில் உள்ள பயிற்சி நிறுவன விமானப்படைத் தளபதி என்னைச் சந்தித்தபொழுது, முப்படையும் சார்ந்த விருதுபெற்ற படை வீரர்களின் சார்பாக ஒரு கோரிக்கையை முன் வைத்தார். முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் அவர்கள் புரிந்த வீரசாகசச் செயலுக்காக வீரப்பதக்கங்களும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காக, சேவா பதக்கங்களும் மத்திய அரசு வழங்கி வருகிறது.

அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், சில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர் களுக்கு மட்டும் மாநில அரசு புகழ்க்கொடையாகப் பண முடிப்பு வழங்கி வந்தது. புகழ்க்கொடை பெறத்தகுதியான விருதுகள் பெறும் பட்டியல் 1990-ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டதுடன், பரிசுத் தொகையும் உயர்த்தப் பட்டது.

இந்த ஆணை 1990-ஆம் ஆண்டு முதல் விருது பெறும் வீரர்களுக்கு மட்டுமே பொருந்துவதாக இருந்தது. இதனை நாடு சுதந்திரம் அடைந்த நாளான ஆகஸ்ட் 15, 1947 முதல் அமல்படுத்தினால் 1990- க்கு முன்னர் விருதுபெற்ற முப்படை வீரர்களும் பயன் பெறுவர் என்றும், இக்கோரிக் கையைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். முப்படை வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அனைவரும் பயன்பெறத்தக்க வகை யிலும் இந்தக் கோரிக்கையை ஏற்று, அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்பு வழங்குவது 1947-ஆம் ஆண்டு முதலே செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1990-ஆம் ஆண்டுக்கு முன்னர் விருதுபெற்ற 207 முப்படை வீரர்களுக்கு அரசு 5 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாயைப் புகழ்க்கொடையாக விரைவில் வழங்கும்.

விடுதலை வீரர்களை நினைவுகூர்வதிலும், இன்று நம்மிடையே வாழும் அந்தத் தியாக சீலர்களைக் கௌரவிப்பதிலும், சிறப்புச் செய்வதிலும், நம் அரசு முன் நிற்கிறது. கடந்த 9-ஆம் தேதியன்று ‘வெள்ளையனே வெளியேறு’ என்னும் வீர இயக்கத்தின் பொன் விழா நாளை முன்னிட்டு, நம் அரசு நடத்திய விழாவில் தியாகிகளுக்கெல்லாம், விடுதலைப் போராட்ட வீரர்களுக் கெல்லாம், பாராட்டு நடத்தியதோடு, அவர்களது ஓய்வூதியத்தை வேறு பாடின்றி அனைவர்க்கும் ஒரே சீராக ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன். அது மட்டுமல்லாமல், நமது அரசுப் பேருந்து களில் இலவசமாகப் பயணம் செய்ய, அனைவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறேன்.

வசதி இல்லாதவர்களுக்கு இருதய அறுவைச்சிகிச்சை செய்ய, 20 ஆயிரம் ரூபாய் உதவி, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரந்தோறும் இலவச அரிசி, இறந்த நெசவாளர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் என்று, சமுதாயத்தின் சகல தரப்பினருக்கும் உதவிகளை அள்ளித்தந்து, சாதனைகளைப் படைத்து வருகின்றது எங்கள் அரசு என்றால் அது மிகையாகாது.

## சாதிமதங்களைப் பாரோம்:

நமது ஒற்றுமை உறுதிப்பட வேண்டுமானால், வளர்ச்சிப் பாதையில் நாம் ஏறுநடைபோட வேண்டுமானால், சாதிகளையும், மதங்களையும் அரசிய லாக்கும் சக்திகள், தோற்கடிக்கப்பட வேண்டும்.

சாதி அடிப்படையில் அரசியல் அமைப்புகள் உருவாவது, நம்மை - நம் வளர்ச்சியைப் பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளும் பிற்போக்கு நடவடிக்கைகளாகும்.

இன்னுமொரு செய்தியையும் இந்தப் புனித வேளையில், பொறுப்புமிக்க நம் மக்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது என் கடமையாகும்.

நாம் எடுக்கின்ற தீர்மானங்கள், தீட்டிவரும் திட்டங்கள் செயலாக்கி வரும் சாதனைகள், இவற்றில் மக்களின் பங்கு மகத்தானது. திட்டங்களின் பயன்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், ஜனநாயகம் வெற்றி பெறத் தங்களது பங்கேற்பு எவ்வளவு அவசியமானது என்பதை, மக்கள் உணர வேண்டும்.

எனவே அரசின் பணிகளில் தோளோடு தோள் நின்று, ஊக்கம் தர வேண்டியது, உங்கள் கடமை என்பதை, இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று நாம் நாமாக இருப்பதற்கு யார் காரணமோ, அவர்களை எல்லாம் நன்றிப் பெருக்கோடு நினைவுகூர்கிறேன்.

இந்த அரசு, தந்தை பெரியாரின் அரசு, பேரறிஞர் அண்ணாவின் அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் அரசு; சுருங்கக்கூறின், இது உங்களின் அரசு என்பதை, மட்டற்ற மகிழ்வோடும், பெருமிதத்தோடும் கூறிக்கொண்டு,

'பாரத பூமி பழம் பெரும் பூமி
நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்'

என்று எல்லோரையும் வேண்டிக்கொண்டு, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**(15.8.92 அன்று, சென்னை கோட்டையில் நடந்த விடுதலை நாள் விழாவில் ஆற்றிய உரை)**

# பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனி புரட்சித்தலைவர் நெறிநின்று மது அரக்கனை ஒழிப்போம்

இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மனித சமுதாயத்தில் மிகக் கொடுமையான கேடு எனக் கருதப்படும் மது அரக்கனை, வேரோடு வீழ்த்திடும் முயற்சி, பன்னெடுங்காலமாகவே பண்பாளர்கள் பலராலும் தொடரப்பட்டு வருகிறது. ''இது ஓர் சமுதாயக் கொடுமை; இதனை விரட்டுவது என்பது, வெள்ளையர்களை விரட்டுவதைவிட வேகமாக நடக்க வேண்டியது'', என அண்ணல் காந்தி அடிகள் விரும்பினார். மதுப்ப்ழக்கம் அறவே அற்ற நாடென்ற பேற்றினை, இந்திய நாடு முழுமையாகப் பெற வேண்டும் எனக் கனவு கண்டார். அதுவே அவரது இலட்சிய ராமராஜ்யம் என்ற நோக்கத்தோடு, இடையறாத மது விலக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

''உண்ணற்க கள்ளை.....'' எனக் கறாராகக் 'கள்ளுண்ணாமை' அதிகாரம் தந்த வள்ளுவர் பிறந்த மண், நம் தமிழ் மண் என்கிற காரணத்தால், மற்றெந்த மாநிலங்களை எல்லாம் விட, நம் தாயகமாம் தமிழகத்தில், 'மதுவிலக்கு' பரிபூரணமாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. மது போதையோடு தள்ளாடுபவன், மனிதனாகக் கருதப்படவே கூடாதவன் என்னும் அளவுக்கு, மதுப்பழக்கம் வெறுக்கப்பட்டு வந்தது.

எனவே தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967-இல் ஆட்சிப் பொறுப்பேற்ற தருணத்தில், மதுவிலக்கு காரணமாக அரசுக்கு ஏற்பட்டு வந்த நிதி இழப்பைச் சுட்டிக்காட்டியபோது, ''எத்தனைக் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அதன் காரணமாக மதுவிலக்கைக் கைவிட மாட்டேன்'' எனத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அண்ணாவின் வழித்தோன்றலும் அவரது இதயக்கனியுமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், அந்த நெறியிலிருந்து மாறுபாடின்றி, கடுமை காட்டி வந்தார். அவருடைய அரசியல் வாரிசென, உங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, உங்கள் சகோதரியான நானும், அந்நன்னெறி வழியினின்று, துளியும் பிறழா நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறேன்.

மது மயக்கம் என்பது இம்மியும் இல்லா, பரிபூரண மதுவிலக்கு மாநிலமாகத் தமிழகத்தை மாற்றிடும் இலக்கினைக் கொண்டே, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். பரிபூரண மதுவிலக்குக் கொள்கையில், அழுத்தமான பிடிப்பினைக் கொண்டிருந்த, இத்தனை தலைவர்கள் தோன்றி, இக் கொள்கைக்கெனக் குரல் கொடுத்து வந்தும் கூட, இன்றைக்கு மதுவினை முழுமையாக ஒழிக்க முடியாமைக்கு, அடிப்படைக் காரணம் என்னவென்பதைப் பலரும் அறிந்திருக்கிறீர்கள்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்ட வரை, மதுவென்பது என்னவென்றே அறியாதிருந்த ஒரு தலைமுறைக்கு மதுவை அறிமுகப்படுத்தி - சாராயம், கள், பிராந்தி, விஸ்கி - என என்னென்ன தீமைகள் இருந்ததோ, அத்தனை போதைப் பொருள்களையும்

தங்கு தடையின்றி விற்பனை செய்து, இத் தலைமுறையினையே கெடுத்து நாசமாக்கிய பெருமை, அண்ணாவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த கருணாநிதியையே சாரும். அவரால் புகுத்தப்பட்டு, கெடுத்து நாசமாக்கப்பட்ட, ஓர் சமுதாய அமைப்பைச் சீர்திருத்த, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, எவ்வளவு சிரமமாய் இருந்தது என்பதையும் அனைவரும் அறிவீர்கள்.

மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாக்கிய அவரே, அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையை எதிர்நோக்கினார். எனவே, சிறிது காலம், தற்காலிகமாய் மதுவிலக்கைத் தளர்த்தி, பின்னர், படிப்படியாக நடைமுறைப் படுத்தும் நோக்கில், முதலில் கள், சாராயக் கடைகளை அடியோடு மூடினார்.

ஆனால் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதைபோல், புரட்சித் தலைவருக்குப் பின்னர், ஒரு தலைமுறையையே கெடுத்த கருணாநிதி, மீண்டும் ஆட்சிக்கு வந்த காரணத்தால், தன் பழைய பாணியை விட, கொஞ்சம் கூடுதலாகவே மது அரக்கனை ஆரத் தழுவத் தொடங்கினார். முன் எப்போதும் இல்லாத அளவுக்குத் தமிழகத்தில், மலிவு விலை மதுக் கடைகளைக் காண நேரிட்டது.

சென்ற பொதுத் தேர்தலின் போது, தமிழகம் எங்கும் நான் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, ஆங்காங்கு தாய்மார்கள் கண்ணீரும் கம்பலையோடும், என்னிடம் முறையிட்ட முதல் கோரிக்கையே, ''அம்மா; இந்தப் பாவிகள் திறந்த சாராயக் கடைகளை நீங்கள் தான் மூட வேண்டும்'' என்ற கோரிக்கை ஆகும். எனவே தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்த உடன், நான் போட்ட முதல் கையெழுத்தே, கருணாநிதியின் மலிவு விலை மதுக்கடைகளை மூடும் கையெழுத்துதான் என்பதைத் தமிழகமே அறியும்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடியவுடன் எல்லோரும் நினைத்தது, கள்ளச்சாராயம் ( )பெருக்கெடுத்து ஓடும் என்பதாகும். ஆனால் அதனைத் தடுக்கவும் ஓர் வழி கண்டுபிடித்து, மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்ட அதே வேளையில், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் - விற்போர் - கடத்துவோர் அனைவரையும் கண்காணித்துத் தடுக்கும் பொறுப்பு, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுடையதாகும் - மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து, தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டதையும் அறிவீர்கள்.

இத்தனை நடவடிக்கைகளுக்குப் பின்னரும் கூட, பூரண மதுவிலக்கு என்ற நம் இலக்கை எய்த முடியவில்லையே என்ற ஏக்கம், எனக்கு இல்லாமல் இல்லை. என் ஒரே கையெழுத்தால், கருணாநிதி புகுத்திய மலிவு விலை மதுக்கடைகளைத் துரத்த முடிந்தது. ஆனால் கருணாநிதியால் கெடுக்கப் பட்ட, மது என்பதையே என்னவென்று அறியாதிருந்த ஓர். இளம் தலைமுறையினையே திருத்தி, மதுப்பழக்கத்தில் இருந்து விடுபடச் செய்வது என்பது, ஒரு கையெழுத்தால், அல்லது ஓர் அரசாங்கச் சட்டத்தால்,

முடியாதென்றே கருதுகிறேன். சட்டத்தால் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டா லும், அதன் பாதிப்பு, ஏழை எளியோர் மற்றும் அப்பாவி மக்கள் மீது, மிக அதிகமாய் இருந்திடும் என்றும் கருதுகிறேன். எனவே, இன்றைக்கு மலிவு விலை மதுக்கடைகளை மூடிய கையோடு, மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விட்ட ஓர் சமுதாயத்தையே திருத்தி, அதிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

என் தலைமையில் அமைக்கப்பட்டு - பல்வேறு சான்றோர்கள், கல்வி மான்கள், சமூக சேவகர்கள், கலை உலகத்தினர் ஆகியோர் இடம் பெற்றுள்ள மதுவிலக்குப் பிரச்சார உயர் மட்டக்குழு, ஏற்கெனவே பல முடிவுகள் மேற்கொண்டு, நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அரசின் மூலம் 'வெளிச்சம்' என்னும் நாடகம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 'நீங்க நல்லா இருக்கணும்' என்னும் திரைப்படமும், மதுவிலக்குப் பிரச்சாரத் திற்கெனத் தயாராகி வருவதையும், அது தமிழக மக்களின் கவனத்தை விரைவில் கவர்ந்து, ஓர் நல்வழிப் பாதையில் அவர்களை நடத்திச் செல்ல உள்ளது என்பதையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவின் கொடுமைகளை, தீமைகளை, மக்களுக்கு எடுத்து விளக்கி, மது என்பது உடலுக்கும், உள்ளத்திற்கும் தீங்கு விளைவிப்பது மட்டுமல்லாமல், ஓர் சமுதாயத்தையே நாசப்படுத்தும் அளவுக்கு, வீட்டுக்கு வீடு தீங்கு விளைவிப்பதாகும் என்ற கருத்தை, மக்கள் மனதில் வேரூன்றச் செய்யும் முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வழியில் சிறந்த சிந்தனை யாளரும், சீர்திருத்த நோக்கம் கொண்டவருமான, கல்வி அமைச்சர் டாக்டர் அரங்கநாயகம் அவர்கள் எழுதித் தயாரித்துள்ள, 'வாழ வைத்த தெய்வங்களே, வாழ்க' என்னும் இப்பிரச்சார கேசட், இப்போது வெளியிடப்பட்டது.

இத்தகைய பிரச்சாரங்கள் மூலம், மதுப்பழக்கத்திற்கு ஆளானோர் மனதில், ஓர் மாற்றத்தை உருவாக்க முடியும்; மதுவை அடியோடு கண் ணுக்குத் தெரியாத தூரம் வரை, துரத்த முடியும் என்ற நம்பிக்கையோடு, இம்முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்.

எங்கள் நம்பிக்கை ஈடேறும்; இதில் வெற்றி காண்போம் என்ற உறுதி எங்களுக்கு உண்டு. 'மது அரக்கனை வீழ்த்தி - பூரண மதுவிலக்கை நடை முறைப்படுத்தினோம்', என்ற திக்கு நோக்கி, விரைந்து செல்லும் நம் பயணத்தில், ஓர் மைல் கல்லாக அமையும் இக்கேசட்டை, மெத்த மன ஆறுதலுடன் வெளியிடுகிறேன்.

இந்தச் சிறப்புக் கேசட்டை வெளிக்கொணர்ந்துள்ள கல்வி அமைச்சர் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கு இடையே, எப்படி இந்த மதுவிலக்குப் பிரச்சாரக் கேசட்டை எழுதித் தயாரித்தார், என்பதை எண்ணிப் பார்த்து வியக்கின்றேன். மதுரை வெற்றி மாநாட்டிற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் என்னைச் சந்தித்த

பொழுது, தான் உருவாக்கும் 'திராவிட சக்தி' என்ற நாட்டிய நாடகத்தை, மாநாட்டில் அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நானும் முடிந்தால் அரங்கேற்றலாம் என்று சொன்னேன். இந்த நாட்டிய நாடகத்தை, எப்படியும் மாநாட்டில் சிறப்பாக அரங்கேற்ற வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன், இரவு பகல் என்று பாராது, தான் விமானத்தில் பயணம் செய்யும்பொழுதும், இடைவிடாது எழுதி முடித்து, சிறப்பாக அதனைத் தயாரித்து, மதுரை மாநாட்டிலேயே அவர் அரங்கேற்றினார்.

பத்தே நாட்களில் இந்த நாட்டிய நாடகம் தயாரிக்கப்பட்டது. இந்த வேகத்திற்கு ஈடு கொடுப்பது போல, மிகக்குறுகிய கால அவகாசத்தில், சிறப்பாக இசை அமைத்துக் கொடுத்த, திரு எல். வைத்தியநாதன் அவர்களையும், நடனம் அமைத்துக் கொடுத்த திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்களையும், எவ்வளவு பாராட்டினாலும் தகும். அது மட்டுமல்ல, இதிலுள்ள மற்றொரு சிறப்பிற்குரிய அம்சம் என்னவென்றால், இந்த நாட்டிய நாடகத்தில் பங்கு பெற்ற அத்தனை நடனமணிகளும், கல்வி பயின்றுவரும் மாணவிகள் ஆவர்

இந்த இளம் மாணவிகள், மிகுந்த ஈடுபாட்டுடன், இரவு பகல் என்று பாராது, பயிற்சி பெற்று, ஒரு சில நாட்களில் இந்த நாட்டிய நாடகத்தைச் சிறப்புற, வெற்றிகரமாக நடத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய கலை ஆர்வத்திற்கும், நினைவாற்றலுக்கும், நம் இயக்கத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் பிடிப்பிற்கும், மதிப்பிற்கும், அவர்களுடைய இந்தக் கடும் உழைப்பே சிறந்த எடுத்துக் காட்டாகும். எனவே, தங்களது குடும்ப நிகழ்ச்சி போல் எண்ணி, இவ்வளவு ஆர்வத்துடன் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியையும், மனமுவந்த பாராட்டுக்களையும் வழங்குவதோடு, அவர்களது எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டும் என்பதற்கான என் வாழ்த்துக்களையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர் அன்பு அண்ணன் டாக்டர் செ. அரங்கநாயகம் அவர்கள் ஒரு அமைச்சர் மட்டுமல்ல; ஒரு அரசியல்வாதி மட்டுமல்ல; அவர் ஒரு தலை சிறந்த கலைஞர்; புலமை மிக்க கவிஞரும் கூட. இதனை நாம் இப்போது கண்டுகளித்த 'திராவிட சக்தி' நாட்டிய நாடகத்திலிருந்து, உணர்ந்து கொள்ள முடியும். தம்முடைய திறமையையும், அறிவையும், நாட்டு மக்களின் நலனுக்காகவும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும், அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவரை, நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது இச்சீரிய முயற்சிகளுக்கு என் சார்பாகவும், கழக உடன் பிறப்புகள் சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எல்லா வளமும் பெற வேண்டும்; இதுபோன்ற அவரது முயற்சிகள் மேலும் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**(25.8.92 அன்று, மதுவிலக்கு பற்றி தயாரிக்கப்பட்ட, வீடியோ கேசட் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை)**

# தேசிய மக்கள் தொகைக் கொள்கையை நவீனப்படுத்தவேண்டும்

மக்கள் தொகை மற்றும் குடும்ப நலம் பற்றிய தேசிய வளர்ச்சிக் கவுன்சில் துணைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழக முதல் அமைச்சரை இந்தத் துணைக் குழுவுக்கு நியமித்து இருப்பதை, குடும்ப நலத் திட்டங்களை வெற்றிகரமாக அமல் நடத்திவரும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுக் கொள்கைகளுக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

நமது எல்லா வளர்ச்சித் திட்டங்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள்தான் மையமாக அமைய வேண்டும். கட்டுப்பாடு இல்லாத மக்கள் தொகைப் பெருக்கம் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. வேகமாக வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, திருப்திகரமான பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித்தர நமது பொருளாதாரம் இடம் தரவில்லை. இப்போதுள்ள மக்கள் தொகை மட்டும் அல்ல, எதிர்காலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி மதிப்பீடு நமது பொருளாதார வளத்திற்குப் பெரும் சுமையாகவே இருக்கும். உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் மூலம் அடையும் பொருளாதார வளர்ச்சியின் சிறு பலன்களைக் கூட ஆண்டுதோறும் பெருகிக் கொண்டே போகும் மக்கள் தொகை வளர்ச்சி மூலம் நாம் இழக்க நேரிடுகிறது.

கடந்த 1976-ஆம் ஆண்டில், மத்திய அரசு தனது மக்கள் தொகைக் கொள்கையைப் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், குழந்தை பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டியதன் கட்டாயத்தையும் அது வலியுறுத்தியது.

5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1,000 பேருக்கு 35 ஆக இருந்த குழந்தை பிறப்பு விகிதத்தை 6-வது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் (1980-இல்) 25 ஆகக் குறைத்திடவும் மத்திய அரசு கொள்கை அளவில் திட்டம் வகுத்து இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, குழந்தைப் பிறப்பு விகிதம் 1990-இல் 1,000 பேருக்கு 29.1 ஆகவே இருந்துள்ளது.

எட்டாவது திட்டகால இறுதியில், அதாவது 1997-ஆம் ஆண்டில், பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 26.7 ஆக இருக்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கு கூட நமக்கெல்லாம் பெரிய சவாலாகவே இருக்கிறது.

நமது மக்கள் தொகைக் கொள்கை, நம் குறிக்கோள்களை வெளிப்படுத்துவதாகவே மட்டுமே இருக்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன். இந்த இயக்கம் தேசிய, கிராம அளவில் அனைத்துத் துறைகளில் உள்ளவரையும் சாதி மத பேதமற்று அனைத்து மக்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பெருகி வரும் மக்கள் பெருக்கத்தால் நிலைமை மோசமாகத்தான் உள்ளது என்றாலும் நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். மக்கள் தொகைத் திட்டங்களை நாம் வெற்றிகரமாக அமல் நடத்தி வருவதே இதற்குக் காரணம்.

சில மாநிலங்கள் இதில் குறிப்படத்தகுந்த சாதனைகளை நிகழ்த்தி உள்ளன.

கேரளாவில் பிறப்பு விகிதத்தை 1990-ல் 1,000 பேருக்கு 19 ஆகவும தமிழ்நாட்டில் 22.4 ஆகவும், ஆந்திராவில் 25.6 ஆகவும் குறைத்து இருப்பது குறிப்பிடத்தக்கது. குடும்பக் கட்டுப்பாட்டில் உள்ள பிரச்சினைகளைக் கருதும் போது இது ஒரு சாதனையே ஆகும்.

உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 30 பேராக உள்ளது. இதில் உத்திரப்பிரதேசம் 1,000 பேருக்கு 35.7 பேர் என முதலிடத்தை வகிக்கிறது. இதை நன்கு உணர்ந்த மைய அரசு 1,000 பேருக்கு 40 பேர் பிறப்பு விகிதம் உள்ள 90 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு பிறப்பு விகிதத்தைக் குறைக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

எது எப்படி இருந்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஒருங்கிணைந்த திட்டம் அமல் நடத்தப்படவேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இதுதான் இப்போதைய நமது தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு, குடும்ப நலத் தகவல்கள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த உறுதியான திட்டமும், செயல் அளவிலான நடவடிக்கைகளும் தேவை. தேசிய மக்கள் தொகைக் கொள்கையை இதற்காகப் புதுப்பிக்க வேண்டும்.

தேசிய அளவில் இது குறித்து அனைத்துத் தரப்பினரும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும். மத்திய மாநில அரசுகள் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

எங்கள் சொந்த மாநிலத்தில் இந்தப் பணி குறித்து ஆய்வு நடத்தினோம். தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தில் கடந்த 1990-ல் மிகக் குறைந்த அளவு பிறப்பு விகிதம் 1,000 பேருக்கு 15.7 ஆக இருந்தது. கோவை மாவட்டத்தில் 17 ஆகவும், தர்மபுரி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பிறப்பு விகிதம் அதிக அளவிலான 1,000 பேருக்கு 23.6 ஆகவும் இருந்தது. தேசிய அளவைக் காட்டிலும் இது குறைவுதான்.

பெரியார் கோவை மாவட்டங்களில் வாழும் மக்களின் முன்னேறிய 'பொருளாதார நிலையும் பிறப்பு விகிதக் குறைவுக்குக் காரணமாக அமைந்துள்ளன. பெரும்பாலும் விவசாய மாவட்டங்களாக விளங்கும் தர்மபுரி, வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டங்களின் பிறப்பு விகிதம் அதிகமாக உள்ளன. அவை பின்தங்கிய மாவட்டங்களாகும். வளமான பொருளாதார நிலைமை, குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. அது சிறு

குடும்பத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. குறுகிய கால கட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் பலன் தரும் என்றாலும் தொலைநோக்குப் பார்வையுடன் நாம் அணுகினால் நல்ல கல்வி, நல்ல பொருளாதார வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் வசதிகளைப் பெருக்குவது போன்றவைதான் சிறந்த பலன்களைத் தரும் என்பதையே இது காட்டுகிறது.

இது தொடர்பான வேறு சில விஷயங்களை இந்தக் குழுவின் கவனத் திற்குக் கொண்டுவர விழைகிறேன். 1992 மே மாதம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசும்போது, குடும்பக் கட்டுப்பாட்டு முயற்சியில் தமிழ்நாடு அடைந்துள்ள வெற்றிக்குப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, கட்டுப்பாடுள்ள மூலதனப் பொருட்களை வழங்குவது மறுக்கப்படுகிறது. மாற்றியமைக்கப்பட்ட காட்கில் திட்டப்படி தேசிய சராசரிக்குக் கீழ், தனிநபர் வருமானம் பெறும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதி ஒதுக்கீடு செய்யும்பொழுதும், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகையையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் சாதனைகள் புரிந்த மாநிலங் களுக்குச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். துரதிஷ்டவசமாக 8-வது திட்ட மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பநலத்திற்கான செயற்குழு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, சமுதாய பங்கேற்பினையே அது வலியுறுத்துகிறது. நாம் எதிர்பார்க்கும் பலன்களை அடைய தனிநபர் பங் கேற்பு மிகவும் முக்கியம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்திற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகைகள் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், ஊக்கப் பரிசுகளுக்காக திட்டங்களை வகுத்துச் செயல்படலாம். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கே ஊக்கப் பரிசும், விருதும் போய்ச் சேரும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும். சமூகம் முழுமைக்கும் பயன்படும் வகையில் இந்த ஊக்கப் பரிசு அமைய வேண்டும்.

குடும்ப நலத்திட்டத்தில் குறிப்பிட்ட இலக்கை எட்டும் மாநிலங்களுக்குச் சிறப்புப் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்ப நலத்திட்டத்தில் சமூகத்தின் அனைத்துத் தரப்புத் தலைவர்களை யும் ஈடுபடுத்த வேண்டியது அவசியம் ஆகும். குடும்ப நலத் திட்டத்துக்கு ஆதரவாக மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதற்காகக் கட்டாயக் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை.

ஒவ்வொரு தனி மனிதனையும் சந்தித்துச் சிறிய குடும்பத்தின் தன்மை களை எடுத்துக்கூறி அதனால் வீட்டுக்கும், நாட்டுக்கும் என்ன பயன் என் பதை எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்காக வீடு வீடாகச் சென்று பிரச் சாரம் செய்ய வேண்டும்.

முழு எழுத்தறிவு இயக்கத்தின் வெற்றியை நாம் முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும். முழு எழுத்தறிவு இயக்கத்தில் சமுதாயம் மொத்தமும், ஈடுபடுத்தப்படுவதைப்போல, அரசு மற்றும் தனியார் துறையில் உள்ள நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நாடு முழுவதும் குடும்ப நலத்திட்டத்துக்கான இயக்கம் தொடங்கப்பட வேண்டும். அதில் தனி நபர்களும் சமுதாய மொத்தமும் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதுபோன்ற இயக்கம்தான் மக்கள் பெருக்க ஆபத்தை வெற்றிகரமாகச் சமாளிக்க உதவும்.

இது தொடர்பாக நான் தமிழ்நாட்டில் முழு நல்வாழ்வுக்கான செயல் திட்டத்தின் வெற்றிக் கதையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த 6 மாதங்களில் 10 ஆயிரம் நல வாழ்வு முகாம்களை ஒவ்வொரு வாரமும் கிராம அளவில் நடத்தினோம். அப்போது டெட்டனஸ் தடுப்பு ஊசி போடுவது, முத்தடுப்பு ஊசி போடுவது, வைட்டமின் மாத்திரைகள் வழங்குவது போன்ற சேவைகள் இந்த முகாம் மூலம் வழங்கப்பட்டன. இந்த முகாம்களில் கலந்து கொண்டவர்களிடம் சிறு குடும்பங்களின் அவசியம் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

இந்த முகாம்களில் கலந்து கொள்வதற்கு மக்களிடையே பெரும் ஆர்வம் காணப்பட்டது. இந்த முகாம்களின் மூலம் சமுதாயத்துக்கு மிகுந்த பயன் கிடைத்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையின்கீழ், மாவட்ட நிர்வாகம் குடும்பநலத் திட்டங்களைச்செயல்படுத்துவதில் முக்கியப்பங்கு வகிக்கலாம்.

5 ஆயிரம் பேருக்கு ஒரு சமூக சேவகர் அல்லது செவிலியர் உள்ளனர்.

பலநோக்க சமூக சேவகர் பெரும் பங்காற்ற வேண்டி இருக்கும். சமூக சேவகர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

சமூக சேவகர்கள், மக்களின் சாதாரண நோய்களுக்கு மருந்துகளை இலவசமாக வழங்கப் போதுமான நிதியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும். இதன் பலனாகக் குடும்ப நலத் திட்டத்தில் மக்களை அதிக அளவில் ஈடுபடுத்தலாம்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒரு முழுமையான குடும்ப நலத் திட்டமாக (Total Family Welfare Programme) விளங்க வேண்டும். அது பல்வேறு உடல் அம்சங்களைப் பற்றிய கல்வியைப் போதிக்க வேண்டும். நல்ல பொருளாதார வளர்ச்சிக்கும் குடும்ப நலத்திற்கும் உள்ள தொடர்பினை அனைத்து மக்களும் அறியும் வகையில் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய வேண்டும்.

தேசிய மக்கள் தொகைக் கொள்கையை மாற்றி அமைத்து நவீனப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டு வசதியான வாழ்க்கை வாழ வழி வகுக்கும்படி இந்தக் கொள்கை மாற்றி அமைக்கப்பட வேண்டும். எனவே, அனைத்து மட்டங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு ஊக்கப் பரிசுகள் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்ட அளவில் எல்லா அரசுத்துறை நிறுவனங்களையும் சம்பந்தப் படுத்தி மக்கள் இயக்கம் நடத்தப்பட வேண்டும். அதன் தலைவராக மாவட்ட ஆட்சித்தலைவர் இருக்க வேண்டும்.

குடும்ப நலத்திட்டம் பற்றிய தேசிய அளவில் அனைத்து மட்டத் தலைவர் களையும் ஈடுபடுத்தி விவாதம் நடத்தப்பட வேண்டும். அதில் மக்கள் நல் வாழ்வு அலுவலர்கள் தங்களுடைய பணியைச் சிறப்பாக ஆற்றிடப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

என் ஆலோசனைகள் மீது இந்தத் துணைக்குழு தக்க பரிசீலனை நடத்தும் என்று நான் நம்புகிறேன்.

**(27.8.92 அன்று, புது டெல்லியில் மக்கள் தொகை பற்றிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**

# நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே நேரத்தைச் செலவிடுங்கள்

**தூய** இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். காரணம், இந்தப் பள்ளிக்கூடம், எனது 'தாய் வீடு' போன்றது. எனது வாழ்வில் மகிழ்ச்சியான நாட்கள் பலவற்றை, நான் இங்கு கழித்திருக்கிறேன்.

அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது 1964-ஆம் ஆண்டு நடந்த விளையாட்டு விழா. அதில் நான் ஒரு மாணவியாகக் கலந்துகொண்டேன். அத்துடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவிகளில், ''சிறந்த மாணவி''க்கான சுழற்கேடயத்தையும் நான் பெற்றேன்.

சுமார் 28 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட போதிலும், அந்த இனிமையான நிகழ்ச்சி எனது நெஞ்சில் பசுமையாக உள்ளது.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் உயர் கல்வி பயிலப் பெரிதும் விரும்பினேன். ஒரு கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால், அந்த இளமையான வயதில் எனது குடும்பத்திற்குத் துணைபுரிய வேண்டிய பொறுப்பு எனது தோளில் விழுந்தது. அதனால், தொடர்ந்து படிக்க இயலவில்லை. இப்போது, முதலமைச்சர் என்ற முறையில், தமிழகத்தின் நிர்வாகத்தை நடத்திச் செல்லும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றுள்ளேன்.

நாங்கள் படிக்கும்போது டெலிவிஷன், வீடியோ போன்ற மாணவ மாணவிகளின் கவனத்தைத் திசை திருப்பும் சாதனங்கள் இல்லை. இப்போது இதுபோன்ற ஏராளமான பொழுதுபோக்குச் சாதனங்கள் வந்துவிட்டன. இவற்றுக்கு மத்தியில் மாணவ-மாணவிகள் மணிக்கணக்கில் டெலிவிஷன், வீடியோவின் முன்பு உட்கார்ந்திருப்பதை அறிகிறேன். இது அவர்களின் உடலுக்கும், மனதுக்கும் கேடு விளைவிக்கும்.

எனவே, உங்களது நேரத்தை, அதிகபட்சம் நல்ல புத்தகங்களைப் படிப்பதிலேயே செலவிடுங்கள். மாணவப் பருவத்தில் படிப்பவைதான் மனதில் நிறையும். அது, உங்கள் வாழ்வின் இறுதிவரை துணை நிற்கும். நான், இன்று வரையில் ஒவ்வொரு இரவிலும் படிப்பதற்காகச் சிறிது நேரத்தை ஒதுக்கி வருகிறேன்.

கடந்த 1964-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆம் தேதி எனக்கு இந்தப் பள்ளிக்கூடத்தின் சார்பில் சுழற்கேடயம் வழங்கப்பட்டது. ஆங்கிலத்திறமை, பொது அறிவு, விளையாட்டு, கலைநிகழ்ச்சி போன்றவற்றுக்காக அந்தக் கேடயத்தை நான் பெற்றேன்.

இப்படி ஒட்டுமொத்தத்திறமைக்கான பரிசைப் பெற்ற கடைசி மாணவி நான்தான் என அறிகிறேன். இதற்கான காரணம், இதுபோல் எல்லாத் திறமையும் ஒருங்கிணைந்த மாணவியாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

இதுபோன்ற சிறந்த மாணவிகளை உருவாக்கி, அவர்கள் படிப்பை முடித்து வெளியேறும்போது, சுழற்கேடயம் வழங்கும் முறையை மீண்டும் கொண்டுவந்தால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இதற்கான கேடயத்தை நானே வழங்குகிறேன்.

அத்துடன், எனது சொந்தப் பணத்தில் இருந்து ஒரு இலட்ச ரூபாயைப் பள்ளிக்கூடத்திற்காக வழங்குகிறேன்.''

**(29.8.92 அன்று, தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விளையாட்டு விழாவில் ஆற்றிய உரை)**

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா

**எ**ந்த மாமனிதரின் காலடிச் சுவடுகளை, நாம் காலம் தோறும் பின்பற்ற வேண்டுமோ, எந்த தவப் புதல்வரின் கருத்துகளை, நாம் காலகாலத்திற்கும் செயல்படுத்த வேண்டுமோ, அந்த மாமனிதரான பேரறிஞர் அண்ணாவின் பிறந்த பொன்னாளை, இன்று மகிழ்ச்சியோடு கொண்டாடிக் கொண்டிருக் கிறோம்.

இந்த நாள், இன்றைய காலகட்டத்தில், ஒவ்வொரு தமிழனும் தன்னையும், தனது இலக்கையும் அறிந்துகொள்ள வேண்டிய நன்னாள்.

நாம் அறிஞர்களுக்கும், சான்றோர்களுக்கும் இப்படி விழா நடத்துவது, அவர்கள் நினைவைப் போற்றுவதற்காக மட்டுமல்ல, அவர்கள் வகுத்துத் தந்துள்ள பாதையில், நாம் சரியாக நடைபோடுகிறோமா, என்பதைத் தெரிந்துகொள்ளவும் தான்!

சிலர் - பிறந்த தாயகத்துக்காக மட்டும் போராடுவார்கள்.
சிலர் - பேசும் தாய்மொழிக்காக மட்டும் போராடுவார்கள்.

ஆனால், தாயகத்துக்காகவும், தாய்மொழிக்காகவும், காலமெல்லாம் போராடி, வெற்றிமேல் வெற்றி கண்ட தலைவர்களில், முன்வரிசையில் முன்னணித் தளபதியாய், தளநாயகராய்த் திகழ்பவர், நம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

'வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்' என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார். அந்த எழுச்சியைத் தமிழகத்துக்கு மட்டுமல்ல; தமிழுக்கும் உருவாக்கித் தந்தவர் பேரறிஞர் அண்ணா.

'போர் வீரர்கள் செல்வதற்கு முன் பாதை போடுவோர், கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டு, முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல, நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும், ஊழல்களையும் அறவே ஒழித்து, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்துவிட்டுச் செல்வது, நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்', - என ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

சமுதாயச் சாலையைச் செப்பனிடுவது ஒன்று; அந்தச் சாலையில் நடைபோடும் போர் வீரனாக விளங்குவது, வேறொன்று. ஆனால், இந்த இரண்டு சாதனைகளின் அருமையான தொகுப்புதான், பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள் பாதையை உருவாக்கிய தொண்டர் மட்டுமல்ல; அந்தப் பாதையில், ஏறுநடை போடும் வீரர்கள் பலரை உருவாக்கிய தீரர்.

நல்ல நாற்றங்காலையும் உருவாக்கி, அதில் நல்ல பயிர்களையும் வளர்த்துத் தந்த, சொல்லேர் உழவர் ஆவார் நம் அண்ணா. அவரது இந்த முயற்சிகளின் நன்கொடை தான், இன்று நாம் காண்கின்ற, உலகம் வியந்து பாராட்டுகின்ற தமிழ்ச் சமுதாயம்; இன்று நாம் அமைத்திருக்கும் இந்த அரசு! எனவே தான் ஆண்டுதோறும் எழுச்சியோடு, அண்ணாவின் பிறந்த நாளைக் கொண்டாடு வதில், நாம் பெருமிதம் கொள்கிறோம்; பெருமகிழ்ச்சியடைகிறோம்; பெருமைப்படுகிறோம்!!

அண்ணா அவர்களால் ஈர்க்கப்படாத எழுத்தாளரில்லை, பேச்சாளரில்லை, கலைஞர்களில்லை, அரசியல் நிபுணர்களில்லை, பகுத் தறிவுச் செம்மல்களில்லை, போராட்ட வீரர்களில்லை - குழந்தைகளுக்குக் கூடத் தெரியும்!

ஆகவே தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள்; - ''அண்ணா என்கிற இந்தப் பெயர், இன்று இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரு மகத்தான சக்தி! அந்தச் சக்தி வெளிக்கொணர்ந்த வரலாறுதான், தமிழர்களின் தன்மான வரலாறு!''

ஒரு காலத்தில் இரும்புத் திரைபோட்டு, மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த, அந்தக்காந்த சக்தி, மறைக்க முடியாத ஆற்றல்மிக்க சக்தியாக, மாந்தருள் ஓர் மாணிக்கமாய், இமயமாய் உயர்ந்தது.

அவரைப் பார்த்து எள்ளி நகைத்தோர், ஏகடியம் பேசியவர்கள் எல்லாம், அண்ணாவின் புகழ்பாடும் நிலைமைக்குச் சரித்திரம் அவர்களை ஆளாக்கியது.

ஏனென்றால், மாற்றாரை மதிக்கும் மனப்பக்குவம், அவரைப் போல எவருக்கும் இருந்ததில்லை. அண்ணாவின் உள்ளம், அன்பு உள்ளம் - தொண்டு உள்ளம்.

'தூய உள்ளம், அன்புள்ளம் பெரிய உள்ளம்,
தொல்லுலக மக்கள் எல்லாம்
ஒன்றே என்னும் தாயுள்ளம்'.
அந்தத் தன்னிகரற்ற தலைவரின் உள்ளம்.

இந்தியத் துணைக் கண்டத்து அரசியலில், ஜனநாயகத்தை, அண்ணா வைப் போல வளர்த்தவர்கள் இல்லை. வன்முறை அவர் அறியாதது. வஞ்சகம் அவருக்குத் தெரியாதது. ஆகவேதான், ''தென்னாட்டுக்காந்தி'', என்று அவர் அழைக்கப்பட்டார்.

அண்ணாவின் நினைவு வரும்போதெல்லாம், எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் ஒன்றும் நினைவுக்கு வரும்:

''தமிழுக்குத் தொண்டுசெய்து
சிறைக்குச் சென்றோன்;
தலைசிறந்த பேச்சுவல்லோன்;

தமிழ வீரன்;
தமர் என்றும் தான் என்றும்
நினைப்பதன்றித்
'தமிழ்நாட்டின் நலத்தினுக்கே
உயிர் உடல்கள்
அமைக' என இரவு பகல்
உழைக்கும் மேலோன்'.

- என்னும் இந்தப் பாடல், அண்ணாவை நாம் எப்படி நினைவு கூர வேண்டுமோ, அப்படி நினைவு கூர்கின்ற பாடலாக அமைந்திருக்கிறது.

அண்ணாவின் கனவுகள் அன்று புரட்சித் தலைவரால், இன்று அவரது பாதையில் வீறு நடைபோடும் உங்கள் அரசால், உங்கள் சகோதரியின் தலைமையில் நிறைவேற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் மேம்பாட்டுக்காகச் செயல்படும் அரசு, இந்த அரசு. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணாவின் எண்ணங்களுக்கு, உருக்கொடுக்கும் அரசு; அவரது கொள்கைகளை நெஞ்சில் சுமந்து செயலாற்றும் அரசு.

அந்தப் பேரறிஞர் பெருந்தகையின் 84-ஆம் பிறந்த நாளாகிய இன்று, அண்ணாவின் பெண்ணுரிமைக் கனவுகள், நனவாக்கப்பட்டதை எண்ணி மகிழ்கிறேன். திராவிட இயக்கத்தின் இலட்சிய விளக்கு, ஒரு பெண்ணாகிய என் கையில் இன்று ஒப்படைக்கப்பட்டிருப்பதற்குக் கால இயற்கைக்கும், தமிழக மக்களுக்கும், என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்! பேரறிஞர் அண்ணாவின் புகழையும், பெருமையையும், என்றென்றும் காப்போம் என்று உறுதி பூண்டு; தானே தமிழாகவும், தமிழகமாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த வரலாற்று நாயகரை வணங்கி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**(15.2.92 அன்று, சென்னையில் நடைபெற்ற அறிஞர் அண்ணா அவர்களின் 84-வது பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை)**

# நாடகக் கலைஞர்களுக்கு நலம் சேர்க்கும் சலுகைகள்

'தமிழ் நாடக உலகில், தனது சிறந்த நகைச்சுவை நாடகங்களின் மூலம், தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்து, அனைவருக்கும் அறிமுகமான நல்ல கலைஞர், எஸ்.வி. சேகர் அவர்கள், கடந்த 18 ஆண்டுகளாக 'நாடகப் பிரியா' என்னும் நாடகக் குழுவை வெற்றிகரமாக நடத்தியதோடு, '3000-ஆவது முறையாகத் தன்னுடைய குழுவினரோடு நாடகங்களை நடத்தும், சாதனையைப் பாராட்டும் வகையில் நடத்தப்படும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், அவரது 'பெரிய தம்பி' என்னும் நாடகத்தைக் கண்டுகளிக்கும் வாய்ப்பினையும் அளித்துள்ளமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## புகழ் பெற்ற நாடகக் குழுக்கள்

தொன்றுதொட்டு, அந்தக் காலத்திலிருந்தே நாடகம், தமிழர்களின் வாழ்வில் உண்டு பண்ணியுள்ள ஊக்கம், அளவிட முடியாதது. திரைப்படக் கலை வளர்ச்சி அடைவதற்கு முன்னர், மேடை நாடகங்களை நடத்தியதில், புகழும், பெருமையும் கொண்ட பல நாடகக் குழுக்கள், தமிழ்நாட்டில் இயங்கி வந்திருக்கின்றன. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் ராஜமாணிக்கம், டி.கே.எஸ். சகோதரர்கள், மற்றும் நாடகக் காவலர் ஆர்.எஸ். மனோகர் போன்ற அறிஞர்கள், நாடகக் கலையின் வளர்ச்சிக்காக, அருந்தொண்டாற்றி இருக்கிறார்கள் என்பது, நம் அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். சமூக நாடகங்களும், புராண நாடகங்களும், மக்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய சுதந்திரத்திற்கும் எழுச்சி ஊட்டிய வரலாறு நம்மிடம் உண்டு. அந்த வகையில், இன்றைய கால கட்டத்தில், நகைச்சுவை நாடகங்களைப் படைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு, அந்த முயற்சியில் மகத்தான வெற்றி பெற்ற நாடகங்களை நடத்தி வருபவர் தான், எஸ்.வி. சேகர் அவர்கள். நகைச்சுவை நடிப்புக்குச் சில சிறப்புத் தகுதிகள் உண்டு. நடிகர் ஒருவர் தனது நடிப்பால் காண்போரை அழ வைப்பது எளிது. ஆனால், அதே நேரத்தில், தமது நடிப்பால் சிரிக்க வைப்பது என்பது, மிகமிகக் கடினம்.

இத்தகைய நகைச்சுவைப் பின்னணி கொண்ட துறையில் தற்போது நகைச்சுவை நாடகங்கள் என்றால், அது எஸ்.வி. சேகருடைய நாடகங்கள் தான் என்ற ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார் சகோதரர் எஸ்.வி. சேகர் அவர்கள்.

நாடகக் கலையினை வெற்றிகரமாக நடத்துவதில், சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. நாடகங்கள் ஒவ்வொரு முறையும் நடத்தப்படும்போது, புதிதாக ஒரு நாடகம் அரங்கேற்றுவதைப் போன்ற நிலையை உண்டு பண்ணுவதற்கு, அசாத்தியத் திறமை வேண்டும். நாடகத்தைப் பார்க்கின்ற ரசிகர்கள்,

நாடக நடிகர்களின் நடிப்பின் நுணுக்கங்களை, நேரடியாக ரசித்து, தங்கள் கருத்துக்களையும் பாராட்டுகளையும் வெளிப்படுத்துகிற வாய்ப்பு, நாடகத்திற்கு மட்டுமே உண்டு. எனவே, நடிகர்கள் சரிவர நாடகக் காட்சிக்கு ஏற்றாற் போல், உணர்ச்சிகளைக் காட்டத் தவறினால், நாடகம் வெற்றி அடைய இயலாது; நடிகர்கள் பாராட்டுப் பெற முடியாது. அதிலும் குறிப்பாக நகைச்சுவை மேடை நாடகங்களில், நடிகர்கள் நகைச்சுவை ததும்ப வசனங்களை உச்சரிக்கும் முறையிலும், குரலின் ஏற்ற இறக்கத்திலும், உடலின் அசைவிலும் தான், நகைச்சுவை உணர்வினை வெளிப்படுத்த முடியும்.

"A sense of timing and ability to deliver the punch lines effectively and the ability to create ripples of laughter through appropriate bodily gestures, are the important assets of a comedy artiste"

என்று கூறுவார்கள்.

## சிறந்த நடிகர்

ஒரு நகைச்சுவை நடிகருக்கு உரித்தான அத்தனை அம்சங்களும் அமையப் பெற்ற சிறந்த நடிகர், நமது எஸ்.வி. சேகர் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

ரசிகர்களைச் சிரிக்க வைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு திகழும் எஸ்.வி. சேகர் ஒரு நாடகக் குழுவைத் தொடர்ந்து நடத்தி வருவதோடு திரை உலகிலும் அறிமுகமாகி, இதுவரை 68 திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

இவரது நாடகங்கள், தொலைக்காட்சியிலும் தொடர் நாடகங்களாக ஒளிபரப்பப்பட்டு, மக்கள் மனதைக் கவர்ந்திருக்கின்றன என்பதெல்லாம், நமக்குத் தெரிந்த செய்திதான். ஆனால், இவரது நாடகக்குழு, பல்வேறு சமுதாயப் பணிகளையும் ஆற்றியிருக்கிறது என்று அறியும்போது, மிகுந்த மகிழ்ச்சியை எனக்கு ஏற்படுத்துகிறது.

அரிமா சங்கம், சுழற் சங்கம் போன்ற சமூக சேவை நிறுவனங்களின் நிதிக்காக, இவர்களது குழு நாடகங்களை நடத்தியோடு, மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, சீருடை வழங்குதல் போன்ற அரும்பணிகளையும் ஆற்றியிருக்கிறது. இந்த வகையில் கண் தானம், இரத்த தானம், ஆகியவற்றைப் பற்றி, 'நம் குடும்பங்கள்' என்ற தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சி ஒன்றையும், இவர்கள் படைத்திருக்கிறார்கள். இத்தனைப் பெருமைகளையும் பெற்ற எஸ்.வி. சேகருக்கும், அவரது நாடகக் குழுவைச் சேர்ந்த நடிக நடிகையர்களுக்கும், மற்றவர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர்களெல்லாம் விருப்பத்தோடு பங்கேற்றுள்ள இந்த நாடகத்துறை, இன்று எப்படி வளர்ந்து வருகிறது என்பதையும், நாம் எண்ணிப் பார்க்க

வேண்டும். இன்றைய விஞ்ஞான முன்னேற்ற காலத்தில், புதிய புதிய விளம்பரச் சாதனங்கள், தொலைக்காட்சி, வீடியோ என்று தோன்றிவிட்ட பிறகு, பலர் வீட்டைவிட்டு வெளியே செல்வதே இல்லை. பரபரப்பான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டுப்போன மக்களுக்கு, ஒரு சில மணி நேரம் நாடக அரங்கில், அமர்ந்து நாடகங்களைக் கண்டுகளிக்கிற வாய்ப்பு, வெகுவாகக் குறைந்துவிட்டது.

## சிரஞ்சீவி நாடகங்கள்

அத்தகைய பின்னணியிலும், தொழில் நுட்ப யுகத்தின் வளர்ச்சியால் பாதிக்கப்படாமல், கால வெள்ளத்தால் அழிக்கப்படாமல், இன்னமும் ஒருசில நாடகக் குழுக்கள் தான் இயங்கி வருகின்றன.

நாடகக் கலையினைத் தொடர்ந்து காத்து வருகின்றன. தொலைக்காட்சி, வீடியோ ஆகியவற்றினால், திரைப்படத் தொழிலே பாதிக்கப்பட்டிருக்கும் போது, நாடகத்தின் நிலை என்னவாகும் என்கிற கேள்விக்குறி எழுகிறது. இத்தகைய காலகட்டத்தில் சிறந்த நாடகங்கள் என்றுமே சிரஞ்சீவி நாடகங்கள் தான், என்பதை மெய்ப்பிக்கும் வகையில், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் அவர்கள் புராண நாடகங்களையும், திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் நகைச்சுவை நாடகங்களையும், வெற்றிகரமாக நடத்தி, நாடகத்தின் தனித்தன் மையை நிலை நாட்டியுள்ளனர்.

அதற்காக நாம் அவர்களுக்கு, நமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். நாடகமென்பது தொன்றுதொட்டு, தலைமுறை தலைமுறையாக, நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற, ஒரு அரிய கலையாகும். இதனை நாம் அழிய விடக்கூடாது.

இன்றைய நாளில், சினிமா, தொலைக்காட்சி என்ற தொழிலுக்குச் செல்லவே அனைவரும் விரும்பும் காலகட்டத்தில், நாடகக் கலையில் முழுமையான ஈடுபாட்டைக் காட்டி, அக்கலை நசிந்துவிடாமல் காக்கின்ற முயற்சியில், ஈடுபட்டுள்ளவர்களை, பாராட்டுவதோடு மட்டுமன்றி, அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருந்து உதவ வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## கலைவாணர் அரங்கில் சலுகைக் கட்டணம்

எஸ்.வி. சேகர் இங்கே பேசும்போது 2 கோரிக்கைகளைச் சொன்னார். ‘நாடகக் குழு ரெயிலில் பயணம் செய்யும்போது சலுகைக் கட்டணம் வழங்கப்படுவது போல, அரசாங்க பஸ்களில் பயணம் செய்யச் சலுகைக் கட்டணம் கொடுக்கவேண்டும்’ என்று கேட்டுக் கொண்டார்.

இது மிகவும் நியாயமான கோரிக்கை, அதிகாரிகளுடன் கலந்துபேசி பரிசீலித்து விரைவில் நல்ல முடிவை அறிவிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்த கோரிக்கை சென்னை, கலைவாணர் அரங்கில் நாடகங்கள் நடத்த சலுகைக் கட்டணம் வழங்க வேண்டும் என்பது.

நாடகக் கலை அழிந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவள் நான். அந்த வகையில் இதற்கு விரைவில் ஆவன செய்யப் படும். இன்னும் சொல்லப் போனால் உடனடியாகச் செய்யப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக நான் அரசியலுக்கு வந்தபின், கடந்த 12 ஆண்டுகளாக, அதிலும் குறிப்பாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, நான் ஆற்றிக் கொண்டிருக்கிற பணியில் உள்ள பளுவின் காரணமாக, எந்தவொரு திரைப்படத்தையும் முழுமையாகக் கண்டு களித்ததில்லை. பார்ப்பதற்கு நேரமும் இல்லை. ஆனால், சில நாட்களுக்கு முன்பு, திரு. விசு அவர்கள் இயக்கிய 'சிதம்பர ரகசியம்' என்ற ஒரு நல்ல திரைப்படத்தை, தொலைக் காட்சியில் பார்க்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதில் நகைச்சுவை நயத்தோடு திரு. எஸ்.வி. சேகர் அவர்கள் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். அவருடைய அப்பாவித்தனமான, குழந்தைத் தனமான நடிப்பையும், நகைச் சுவையையும், நான் மிகவும் ரசித்தேன். இன்று தான் கடந்த 12 ஆண்டு களுக்குப் பிறகு 'பெரிய தம்பி' என்னும் அவரது நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

இந்த விழாவில் தமிழகத்தின் தலை சிறந்த திரைப்பட இயக்குநர், திரு. கே. பாலசந்தர், அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து இருக்கிறார்கள்.

திரைப்படத் துறையின் ஜாம்பவானாகத் திகழும் அவர், சமூக நாடகங் களின் மறுமலர்ச்சிக்கு, ஒரு கால கட்டத்தில் வித்திட்டவர் என்றால், அது மிகையாகாது. அவரது அற்புதமான நாடகங்கள், வெற்றிகரமான திரைப் படங்களாக, வெள்ளித் திரையில் மிளிர்ந்ததற்குக் காரணம், அவர் இந்த இரண்டு துறைகளிலும், தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றவர் என்பதால்தான். அவரது மிகச் சிறந்த திரைப்படங்களில் ஒன்றான 'மேஜர் சந்திரகாந்த்'-தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். அதன்பின், அவரது அடுத்த திரைப்படங்களான 'பாமா விஜயம்' மற்றும் 'வெள்ளி விழா' ஆகிய படங்களிலும், என்னை நடிக்க அவர் அன்புடன் அழைத்தார்.

ஆனால், அப்பொழுது நான் நிறைய திரைப்படங்களில் ஒரே நேரத்தில் நடித்துக் கொண்டிருந்த காரணத்தால், அவரது அழைப்பினை ஏற்று, அந்தப் படங்களில் நடிக்க இயலவில்லை. திரைப்படத் துறையில் தனக்கென ஓர் உயர்ந்த இடத்தை, தன் சிந்தனையாலும், உழைப்பாலும், திறமையாலும், நிரந்தரமாகப் பிடித்திருக்கும் திரு. கே. பாலசந்தர், அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டுவதை, எனது கடமையாகக் கருதுகிறேன். திரையுலகிலும்,

நாடக உலகிலும் சேர்ந்தாற்போல் சாதனை படைத்திருக்கும் திரு. எஸ்.வி. சேகர் அவர்களை வாழ்த்திப் பேசிய, பிரபல திரைப்பட இயக்குநர் திரு. விசு அவர்கள், நாடக உலகத்திலே மிகுந்த அனுபவம் பெற்றவர்.

திரையுலகில் தனக்கென ஒரு பாணியைக் கையாண்டு தனி முத்திரையைப் பதித்து வருபவர்.

'In Tamil Nadu, the very name Visu, has become a byword today, for good, clean, wholesome entertainment, which can be enjoyed by the entire family'.

அவர் இயக்கி வெளிவந்துள்ள 'திருமதி ஒரு வெகுமதி' என்ற திரைப் படத்தை நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன். எனக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுது, இவரது திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்று நினைத்தேன். அந்த நல்ல சந்தர்ப்பம் மிக விரைவிலேயே வந்தது. தமிழக அரசு தயாரித்து வரும், மதுவிலக்குப் பிரச்சாரப் படமான, 'நீங்க நல்ல இருக்கணும்' என்ற திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பை அவருக்கு அளித்தேன். அவரது திறமை யையும், கைவண்ணத்தையும், நீங்கள் அந்தத் திரைப்படத்தில் நிச்சயமாகக் காணலாம்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர், திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், வயலின் என்றாலே குன்னக்குடி என்று கூறும் அளவிற்கு, இசை உலகில் உயர்ந்து நின்ற போதிலும், இன்றும் தன் கலைப் பணியினைப் பக்தியுடனும், இதய சுத்தியுடனும், தொடர்ந்து செய்து வருகிறார். அவர் அறிமுகம் தேவையில்லாதவர்; அனைவருக்கும் தெரிந்த இசை வல்லுநர்.

சென்னை சபாக்கள் கூட்டமைப்பின் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், தன்னுடைய கலை ஆர்வத்தாலும், கலைஞர்களுக்கு வழங்குகிற ஆதரவாலும் நாடகக் கலையையும், நாடகக் கலைஞர்களையும் பாதுகாத்து வருகிறார். அந்த வகையில் அவர் நமது பாராட்டுக்கு மட்டுமல்ல, நமது அன்பிற்கும் பாத்திரமானவர் ஆகிறார்.

பெருமைக்குரியவர்களால் இன்று பெரிதும் பாராட்டப்பெற்ற திரு. எஸ்.வி. சேகர் அவர்கள், இந்தப் பாராட்டுக்களுக்கு முற்றிலும் தகுதி உடையவர்.

## மனதாரப் பாராட்டுகிறேன்

பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, இன்று நம் அனைவரின் பாராட்டுக் களையும் பெற்று ஒரு சாதனையாளராகத் திகழும் எஸ்.வி. சேகர் அவர் களுடைய தந்தையும், 'நாடகப்பிரியா' குழுவின் தலைவருமான திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்கள், தனது மகனின் இந்த மாபெரும் வெற்றிக்கு மூல காரணமானவர் என்பது, ஒரு சிலருக்கே தெரியும். தன் மகனை கலைச் சேவைக்காக அர்ப்பணித்து, அதில் முழு வெற்றி அடைவதற்குத் தேவையான, ஊக்கத்தையும் உதவிகளையும் வழங்கி, உறுதுணையாக இருந்து, தன் மகன்

இந்த உயர்ந்த நிலையை அடைவதற்கு மூல காரணமாகத் திகழ்ந்து, இன்று நம்மிடையே வீற்றிருக்கும் திரு. எஸ்.வி. வெங்கட்ராமன் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

3000 தடவை தங்களது நாடகங்களை நடத்தி மாபெரும் சாதனை புரிந்துள்ள எஸ்.வி. சேகர் அவர்களுக்கும், அவரது தந்தையார் அவர் களுக்கும் 'நாடகப் பிரியா' குழுவில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.வி. சேகரை நான் கேட்டுக் கொள்கிறேன் – கடைசி வரை நாடகக் கலையை மறந்து விடாதீர்கள். இதை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

உலக அளவில் தரமான நாடகங்களைத் தயாரித்து, நடத்திப் பெயரும் புகழும் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''

**(26.9.92 அன்று, ''நாடகப் பிரியா'' என்ற அமைப்பின் 3000-ஆவது நாடக விழாவுக்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரை)**

# பல்கலைக்கழகங்கள், மனிதப் பண்புகளை வலியுறுத்தி மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டும்

என் வழிகாட்டியான புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் செயல்படும் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் சிறப்புரையாற்ற எனக்கு அழைப்பு விடுத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன். இவ்வழைப்பினை ஏற்பதன் மூலம் என்னுடைய வழிகாட்டியான டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பாகவே இதைக் கருதுகிறேன். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலங்களை எல்லாம் கடந்ததொரு பார்வையையும் உண்மைகளை ஒட்டு மொத்தமாக உணரக்கூடிய மனப்பக்குவத்தையும் தேவையுள்ளவர்களுக்கெல்லாம் உதவிடும் இதயத்தையும் பெற்றிருந்தார்.

மனித வளத்தை மேம்படுத்துவதுதான் மக்களின் மகிழ்ச்சிக்கு ஆதாரம் எனக் கருதிய அவர், தன்னுடைய சிறப்பான கவனத்துக்குரிய துறையாகக் கல்வியைத் தேர்ந்தெடுத்தார். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் தமிழகக் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் மதிய சத்துணவுத் திட்டத்தை வழங்கினார். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உயர் கல்வியே திறவுகோல் என்பதை உணர்ந்த அவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் மற்றும் மருத்துவப் பல்கலைக் கழகம் ஆகியவற்றை நிர்மாணித்தார். நமது மாநிலத்தில் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் நீண்டகால நன்மைகளை வழங்கும் கல்வியின் முன்னேற்றத்திற்கான உறுதியான அடித்தளத்தை (Foundation) அமைத்தார்-

பெரும் வள்ளலாகத் திகழ்ந்த ஜான். டி. ராக்ஃபெல்லர் ஒரு முறை எழுதியதாவது:

அதிகபட்ச நன்மைகளைச் செய்வதற்கும் குறைந்த பட்சத் தவறுகளைப் புரிவதற்கும் நாகரீகத்தை வேரிலிருந்து பேணி வளர்ப்பதற்கும் உடல் நலம், நன்மை, மகிழ்ச்சி ஆகியவற்றை எங்கும் பரப்புவதற்கும் செய்யப்படும் உதவியே உன்னதமான தத்துவமாகும். பெற்றிருக்கும் வளங்களை மேம்படுத்தவும் வளர்க்கவும் இதுவரை இல்லாத இடங்களில் முற்போக்கான, ஆரோக்கியமான உழைப்புக்கு வாய்ப்பளிக்கவும் முயற்சி, காலம், பொருள் ஆகியவற்றை முதலீடு செய்வதே உன்னதத் தத்துவமாகும். அனைத்து உதவிகளிலும் அடிப்படையாக விளங்குவது கல்வியே ஆகும்.

- புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஜான் டி. ராக்ஃபெல்லர் அவர்களும் ஒரே இலட்சியத்தையும் ஒரே எண்ணத்தையும் கொண்டிருந்தார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை ஓரளவு நிறைவேற்றியுள்ளோம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம், மருத்துவக் கல்வியின் தரத்தையும் உயர்த்தியுள்ளது. மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்தவும், சமுதாயத்தின்

ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தொடர்புடைய மருத்துவப் பாடத்திட்டம் உருவாக்கவும் ஒரு மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென்று உலக அளவில் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். நமது நாட்டில் பசுமைப் புரட்சியில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தலையாய பங்கினை ஆற்றிய அனுபவமும் உள்ளது. 1982-ல் மாநில அரசு அமைத்த குழுவின் பரிந்துரையின் பேரில், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் ஒரு சிறப்பான குறிக்கோளுடன் கூடிய ஒரு பல்கலைக் கழகமாகும். நவீன சமுதாயத்திற்கு அறிவினை வழங்கக்கூடிய திறவு கோலாக இப்பல்கலைக் கழகம் விளங்குகிறது. நமது சமுதாயம் அதிக அளவில் பயன்படுத்தும் புத்தக அறிவினை இது உருவாக்கு கிறது. நமது சமுதாயத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் அறிவு ஜீவிகளின் தாயகமாக இது விளங்குகிறது. தொழில்நுட்ப அறிவை வழங்கும் திறமை, அனுபவம் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும் பாதுகாக்கவும் உறுதியான கருவி யாக இது விளங்குகிறது. விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் உயர்மட்டக் கல்வியை மக்கள் பெறும் வகையில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ கல்வி போதிக்கும் முக்கிய நிறுவனமாக இது விளங்குகிறது.

'அப்ரஹாம் ஃப்ளாக்ஸெனர்' - அவர்களுடைய வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் பல்கலைக் கழகமென்பது 'ஒரு காலத்தின் கண்ணாடி'. புத்தக வடிவிலும் செயல்முறை வடிவிலும் அடங்கியிருக்கும் தொடர்ச்சியான அறிவியல் - தொழில்நுட்ப சாதனைகளின் களஞ்சியமாகப் பல்கலைக் கழகம் விளங்கி, மாணவர்களுக்குப் பயன்படுகிறது. இன்று உலகமெங்கும் அமைந் துள்ள பல்கலைக் கழகங்கள், பொருளாதார முன்னேற்றத்திற்கும், உடல், மன ஆரோக்கியத்திற்கும் சமூக நீதிக்கும் சக்திமிக்க, நேரடிப் பங்கினை வழங்கக்கூடிய நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.

மனித சிந்தனைகளில் பெரிய முன்னேற்றங்கள் பல்கலைக் கழகங்கள் மூலம் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞானங்களிலும் அதன் பல்வேறு கிளைகளிலும் புதிய ஆராய்ச்சிகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்கலைக் கழகங்கள் மூலமாக நடைபெற்று விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பல்கலைக் கழகத்திலிருந்துதான் தொடங்கியிருக்கின்றன.

கற்றுக் கொடுப்பதும், தகவல்களைத் தருவதும் சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள சிறப்பான திறமைகளை யும் அறிவாற்றல்களையும் மாணவர்க்கு வழங்குவதும் மட்டும் பல்கலைக் கழகத்தின் நோக்கமல்ல. மாறிவரும் மக்களின் தேவைகளுக்கேற்ற அம்சங் களைக் கல்வி முறை கொண்டிருக்க வேண்டுமென்பது உண்மைதான். ஆனாலும் பல்கலைக் கழகங்கள் மனிதப் பண்புகளை வலியுறுத்தி, மனித நலத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதே என் கருத்து. பல்கலைக் கழக மாணவர்கள் பாடத்தை மட்டும் படிப்பதில்லை. தன் வாழ்க்கையில் என்றும் நினைவுகூரத்தக்க பருவத்தில், உயரிய, உன்னதப் பண்புகளால் கவரப்பட்டு மாணவர் குறிப்பிடத்தக்க ஒருவராகிறார். மனித அறிவு வளர்ச்சியையும், சிந்தனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்

கொள்ளுவதன் மூலமும் 'உள்ளத்தோடு உள்ளம் உராய்ந்து கருத்துப் பரிவர்த்தனை செய்துகொள்ளுவதன் மூலமும் பக்குவம் பெற்ற மனிதராக உருவாக மாணவரிடத்தில் இப்பண்புகள் கிரியா ஊக்கியாகச் செயல்படு கின்றன. பல்கலைக் கழகம் ஆன்மாக்களின் நட்புக்கூடமாக - சத்தியத்தை நாடுவோரின் சங்கமாக அமைய வேண்டும். தற்கால வாழ்க்கைச் சூழ்நிலை யில் எவ்வளவுதான் அவசியமாக இருந்தாலும் பொருளைப் பெறுவதையும் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதையும்விட மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் வாழ்க்கையில் இருக்கின்றன என்பதை நம்புபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அகிலத்துத் தீமைகளை அகற்ற அளவில்லாத ஆவல், பெருந்தன்மைமிக்க ஒரு நெஞ்சம், பரந்துபட்ட பார்வை இவற்றைப் பெறவும் தன்னலமற்ற, ஒருபால் கோடாத வழியிலே இலட்சியங்களைத் தொடரவும் பல்கலைக் கழகம் மாணவருக்கு உதவ வேண்டும்.

இம்மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பணி மகத்தானது. இங்கு மருத்துவர் களையும் - அறுவை சிகிச்சை நிபுணர்களையும் உருவாக்கும் பணி நடந்து வருகிறது. உடல், மன நோய்களை எதிர்த்துப் போராடும் சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளைப் புரியும் பொறுப்பு இந்த இளைஞர்களுக்கு உண்டு. வளர்ந்து கொண்டே வரும் மருத்துவச் செய்திகளை ஒரு மருத்துவ மாணவன் தொடர்ந்து படித்து வருவது மிகவும் கட்டாயமானது. இந்த அறிவு வளர வளர, கூடவே தனித்துறைப் புலமையும் வளருவதால் சிறிய, மிகச் சிறிய பிரிவுகளில் கூரிய - மிகக் கூரிய கவனம் செலுத்த வேண்டியது ஒரு மருத்துவ மாணவருக்குக் கட்டாயமாகின்றது. மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும் தங்களது அறிவைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். நோயின் தன்மையைப் புரிந்து கொள்ளும் திறமையைக் கூர்மைப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். நோய்க்கேற்ற சிகிச்சையை நோயாளிகளுக்கு வழங்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில், குறிப்பாக இந்நூற்றாண்டின் இறுதியில், குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மருத்துவ அறிவியல் துறையில் அடைந்துள்ளனர்.

உயிரியல் உயிர்-வேதியல், நுண் அறுவை மருத்துவம் போன்ற துறை களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் காரணமாக, இதுவரையிலும் புனித மாகவும் தொடவே முடியாத பகுதியாகவும் கருதப்பட்ட இருதயத்தையும், மூளையையும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தொட்டுவிட்டார்கள். வருங் காலத்தில் உடல் உறுப்புகளை மாற்றி, செயற்கை உறுப்புகளைப் பொருத் துவது சாதாரண விஷயமாகிவிடும்.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக மருந்துப் பொருட்கள் மூலம், நினைவு, எண்ணம், ஆசைகள் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தும் நிலையை எட்டிவிட்டோம்.

நவீன மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள இது போன்ற முன்னேற்றங்கள் மனித சமுதாயம் முழுவதையும் வெகுவாகப் பாதித்து அவற்றின் மீது தொடர்ந்து பெருத்த பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. மனிதன் மீது மருத்துவ விஞ்ஞானத்தின் பாதிப்பு எதிர்காலத்தில் பெருகும். வாழ்வைக் கட்டுப் படுத்தும் மருத்துவத் துறையின் சக்தி வளர வளர, மருத்துவர் தன்னுடைய

திறமையைப் பயன்படுத்தும் முறை நம்மைப் பொறுத்த வரை முக்கியமான ஒன்றாக உள்ளது. நோய்களைக் கண்டுபிடிப்பதில் ஏற்பட்டுள்ள சக்திவாய்ந்த புதிய முறைகளால் மருத்துவ விஞ்ஞானம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. விஞ்ஞானம் வழங்கியுள்ள புதிய முறைகளின் மூலம் மருத்துவம் மனித உடலைப் பற்றி, புதிய உண்மைகளையும் நிலைமை களையும் கண்டறிய முடிகிறது. இப்படிக் குவிந்துள்ள தகவல்கள் நோயைக் கண்டு பிடிக்கவும், சிகிச்சை அளிக்கவும் புதிய வழிமுறையை வழங்கி யுள்ளன. மருத்துவத் துறையில் வந்துள்ள விஞ்ஞான அணுகுமுறை, மனித உடலை மருத்துவர் ஒரு பொருளாகவே கருத வழி வகுத்துள்ளது. மருத்துவத் துறையின் வழி முறைகளில் ஒருவர் ஆழமாகச் செல்லச் செல்ல மனித உடலை ஒரு பௌதிகப் பொருளாகவே கருதுகிறார்.

மருத்துவர் மருத்துவ அறிவு, மருத்துவத் தகவல் ஆகியவற்றை முழுமை யாகப் பெற்றிருந்தாலும், அவர் மருத்துவ ஞானத்தைப் பெற்றவராகக் கருத முடியாது.

டி.எஸ்.எலியட் ஒரு முறை இக்கருத்தையே எதிரொலித்தார். அறிவைத் தேடுவதில் நாம் தொலைத்துவிட்ட ஞானம் எங்கே? தகவல்களைத் தேடு வதில் நாம் தொலைத்து விட்ட அறிவு எங்கே?

(Where is the wisdom we have lost in knowledge? Where is the knowledge we have lost in information?)

விஞ்ஞானத்திற்குரிய அமைதியான பகுத்தறிவு அடிப்படை மருத்துவத் திற்கும் தேவைப்படுகிறது. அது மனித நேயத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். வாழ்க்கையையும் மனிதனையும் தன்னிகரில்லாத தாகவும் சிறப்பாகவும் கருதும் தகுதி வேண்டும். ஒருவர்க்கொருவர் தொடர்பு கொள்ளும் மனப்பான்மையுடன் மருத்துவர் நடக்க வேண்டும். நிதானம் தவறாத தொழில் நுட்ப நிபுணராகவும் இதயபூர்வமான அன்பும் அக்கறையும் காட்டுகிற தோழனாகவும் இருக்க வேண்டும். மனித இயல்பையும் உயிர்ப் பண்பையும் ஊடுருவிப் பார்க்கின்ற தெளிந்த பார்வை, முழுமையான ஈடுபாடு இவற்றின் அடிப்படையில் மருத்துவத் தொழில், தன் தகுதியை நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும். மருத்துவரிடம் ஒரு தொலை நோக்குப் பார்வை யையும் ஒருங்கிணைந்த முழுப் பார்வையையும் வளர்ப்பதை மருத்துவக் கல்வி குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். மருத்துவ நிபுணர்களுக்கென்று சமுதாயத்தில் தனிப்பட்ட மதிப்பும் குறிப்பிட்ட பணியும் உண்டு. ஒரு நோயாளி நோயினால் பாதிக்கப்பட்ட உடலின் ஒரு பகுதியில் மட்டும் துன்புறவில்லை, நோயால் உடல் உள்ளம் முழுவதும் துன்பப்படுகிறான். எனவே மருத்துவரின் தொழில் திறன் பற்றிய ஒரு முழுமையான ஒருங் கிணைந்த பார்வை நமக்குத் தேவைப்படுகிறது.

பொதுவாக மேற்கத்திய சமுதாயத்தில் மருத்துவத்துறைத் தேர்ச்சி என்பது வெகு ஆழமாக வேரூன்றி விட்டது. பொது மருத்துவர் இல்லையென்றே சொல்லலாம். தனித் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரே கூரையின் கீழ் அலுவலகங்களை வைத்துள்ளனர். நோயாளிகள் ஒரு மருத்துவரிடமிருந்து

வேறொருவருக்கு அனுப்பப்படுகின்றனர். எந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவரை முதலில் அணுகுவது என்பதே நோயாளியின் பிரச்சினையாக இருக்கும். நோயாளியை சோதனை செய்யப் பொது மருத்துவரே கிடையாது. இந்தியா போன்ற நாடுகளில் பொது மருத்துவருடைய சேவை ஆரம்பம் முதல் கடைசி வரை இருக்க வேண்டுமென்பதே என்னுடைய கருத்து. ஏனெனில் நோயாளியைப் பற்றியும், அவர்களுடைய சூழ்நிலையைப் பற்றியும் பொது மருத்துவருக்கு நன்கு தெரியும். பொது மருத்துவர் வழங்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் தனித்துறைத் தேர்ச்சியாளர் சிகிச்சையளிக்கா விட்டால், குருட்டுத்தனமாகச் சிகிச்சை அளிப்பதாகவே தெரியும். அது நோயாளிக்கு நன்மை பயப்பதைவிட தீமையையே அதிகம் பயக்கும்.

இத்தகைய சூழ்நிலையில்தான், ஒருங்கிணைந்த மருத்துவம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது. கனடாவைச் சேர்ந்த தலை சிறந்த மருத்துவ நிபுணர் சர். வில்லியம் ஆஸ்லர் கூறுகையில் காச நோயின் விளைவு, நோயாளியின் நுரையீரல்களைவிட, மூளையுடனே அதிகம் தொடர்புடையது'' என்கிறார்.

அதேபோல் ஹிபோகிராடிக் கூறுகையில், ஒரு நோயாளி எத்தகைய நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றான் என்பதை விட, எத்தகைய நோயாளி நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதையே அறிய வேண்டும்' எனக் கூறுகிறார்.

நோயை எதிர்த்துப் போராடும் உணர்வுள்ள நோயாளி, முற்றிலும் நம்பிக்கையிழந்து நிலைமையை ஏற்றுக்கொள்ளும் நோயாளியைவிட நன்கு வாழ்கிறார்கள் என்பது புற்றுநோய் ஆராய்ச்சியில் விளக்கிக் கூறப் பட்டுள்ளது.

நோயைக் காண்பதற்கு முன் நோயாளியைக் காண்பதே சிறந்தது என்பதற்கான ஆதாரங்களை நன்கு புரிந்து கொள்வதே நல்ல மருத்துவருக்கு அழகாகும். அதாவது நோயாளியின் மீது தீவிர நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். மருத்துவர் நோயாளியை நெருக்கமாக உணரவேண்டும். நோயாளியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்போது அவர்களுடைய பயம், எதிர்பார்ப்புகள் குறித்துச் செயல்படும் போதும் நட்புணர்வோடு அணுக வேண்டும். விஞ்ஞானத்தின் பெயரால் சுவரைவிட கடினமான தடுப்புகளைத் தனக்கும் தன் நோயாளிகளுக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளும் மருத்துவர்களை நான் அறிவேன். அவர்களது மனிதாபிமானமற்ற தன்மை, நோயைக் குணமாக்குவதற்கு மாறாக அதை மேலும் மோசமாக்குகின்றது. நோயைவிட நோயாளியே முக்கியம் என்பதையே ஹிபோகிராடிக் கோடிட்டுக் காட்டுகிறார்.

''நான் ஏற்றுக்கொள்ளும் மருத்துவக் கோட்பாடு என் திறமைக்கும் தீர்ப்புக்கும் ஏற்றபடி நோயாளிகளுக்கு நன்மை பயக்கும் - அவர்களுடைய காயத்திற்கோ வேறு தவறுக்கோ அல்ல''

நோயாளியின் ஒட்டுமொத்தத் தேவைகளைப் புரிந்து கொள்ளவும், அவர்களுக்கு அவைகளை வழங்கவும் தேவையானவைகளைக் கருத்தில்

கொள்ளும் வகையில் இந்த உறுதிமொழியின் பொருள் விசாலப்படுத்தப்பட வேண்டும்.

மருத்துவர்களைப் பற்றி மாமுனிவர் திருவள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்-

''நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

''மருத்துவர் நோயின் தன்மையைக் கண்டறிந்து, அதன் காரணங்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் கண்டுபிடித்து, மருத்துவ இயலின் நியதிப் படி சரியாக மருத்துவம் செய்ய வேண்டும்.

ஒரு மருத்துவரின் வாழ்நாள் முழுமைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய, மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே இருக்கவேண்டிய மனிதநேய உறவின் முக்கியத்துவம் பற்றிய தத்துவமே இந்த வரிகளில் அடங்கியுள்ளது.

தம்மிடம் வரும் நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சையை வழங்கும் எண்ணத்துடன் கூடிய மருத்துவர்களையும் அறுவைச் சிகிச்சை நிபுணர் களையும் உருவாக்குவதே மருத்துவக் கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். இதன் அடுத்தபடி, சமுதாயத்தின் தேவை களில் அத்தகைய மருத்துவர்களின் பங்கினைப் புரிந்து கொள்ள வேண்டும் சமூகம் முழுமைக்கும் முழுமையான, ஆரோக்கியமான வாழ்வினை அளிக்கக் கூடிய தகுதிபடைத்த மருத்துவர்களைப் படைப்பதே மருத்துவக் கல்வியின் குறிக்கோளாக விளங்க வேண்டுமென நம்புகிறேன். சுகாதாரப் பாதுகாப்பு என்பது குணப்படுத்தக் கூடியதாகவும், மேம்படுத்துவதாகவும், நோய் தடுப்ப தாகவும், மறுவாழ்வு அளிப்பதாகவும் இருக்க வேண்டும். சமூக அளவில் முதலில் நோயைக் கண்டறிந்து சிகிச்சையளித்து சாதாரண நோய்களைச் சமாளிக்கும் அடிப்படை மருத்துவரே இன்றைய நம் தேவையாகும். இன்றைய மருத்துவ மாணவர்கள் தனித்துறை திறமை பெற்று, சமுதாயத்தின் பொது சுகாதாரம் பற்றிய மருத்துவத் தேவைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தங்கள் படிப்பை முடித்துவிடுகின்றனர். சீனா, ஜப்பான், போன்ற நாடு களில் மருத்துவர்கள் மேற்கத்திய மருத்துவக் கல்வியைப் பயின்று சிறந்த சமூக சுகாதார மருத்துவராகின்றனர்.

நமது நாட்டில், நமது பண்டைய மருத்துவ முறையில், நோயாளியின் உடல், மனம், உணர்வுகளுக்குச் சிகிச்சை அளிக்கும் ஒருங்கிணைந்த முயற்சியை வலியுறுத்தும் பாணி உள்ளது. இந்தக் கோணத்தில் ஆராய்ச்சி செய்து, இது போன்ற ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தின் முக்கிய அம்சங் களைப் புரிந்துகொண்டு மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென மருத்துவப் பல்கலைக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம் நாட்டின் இன்றைய தேவை அடிப்படை சுகாதாரக் கவனிப்பு ஆகும். சுகாதாரக் கவனிப்பு, மக்களின் - குறிப்பாகக் கிராமத்து மக்களின் - வீடுகளில் வழங்கப்பட வேண்டும். நெடுங்காலமாகத் தனித்தன்மை பெற்ற மருத்துவப் பாதுகாப்பு நகரங்களிலேயே, 20 சதவிகித மக்களுக்கு மட்டும் கிடைத்து வந்துள்ளது.

மருத்துவப் பாதுகாப்பைக் கிராமப்புற மக்களுக்கு வழங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. "2000-ஆம் ஆண்டில் அனைவருக்கும் நல வாழ்வு" எனும் ஐ.நா. சபையின் அறிவிப்பு வெறும் மருத்துவக் குறிக்கோள் மட்டும் அல்ல. அது ஒரு சமூக இலட்சியம். அதில் ஏராளமான பொருளாதார விவசாயச் செய்திகள் அடங்கியுள்ளன.

அடிப்படை சுகாதார நிலையங்களை மேம்படுத்துவதன் மூலமே இக் குறிக்கோளை நாம் அடைய முடியும்.

நமது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்துடன் நாம் அடித்தளம் அமைத்துள்ளோம். குக்கிராமங்களில் வாழும் மக்களுக்குக் கூட சுகாதார மருத்துவ வசதிகளைச் செய்து வருகிறோம். சமீபத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் இலவச சுகாதார முகாம்களை நாம் நடத்தியுள்ளோம். 9,100 முகாம்களில் 51 இலட்சம் பயனாளிகளுக்குச் சிகிச்சை அளித்துள்ளோம். மருத்துவ சுகாதார வசதிகள் மக்களின் வீடுகளுக்கே கொண்டு செல்லப்பட்டிருப்பதால், இந்தத் திட்டம் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில், வளர்ந்து வரும் மக்கள் பெருக்கத்தால் சுகாதார மருத்துவத் தேவைகளும் ஏராளம். வசதி படைத்தோர் தனித் திறமை பெற்ற மருத்துவப் பாதுகாப்பினை நாடு முழுவதும் ஏற்படுத்திட உதவி புரிந்துள்ளனர். ஆனால் பெரும்பான்மையாக உள்ள ஏழைகள் அரசாங்க மருத்துவமனைகளையே நம்பியுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் உள்ள வசதிகளை மேம்படுத்த அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது. அதே நேரத்தில் அரசின் முயற்சிகளை நிறைவு செய்யும் வகையில் தனியார் துறையிலிருந்தும் உதவி பெறுவது அவசியமாகிறது. புதிய மருத்துவமனைகள், புதிய நோய் கண்டுபிடிப்புக் கருவிகள் தனித்துறை திறமை வாய்ந்த ஒரு புதிய தலைமுறை, புதிய வழிகள், சொகுசுகள்- பணம் தந்தால் தாராளமாகக் கிடைக்கின்றன. இவையனைத்திலும் ஒரு வியாபார நோக்கம் உள்ளது. ஆனாலும் தனியார் மருத்துவமனையில் உள்ள ஒரு சில மருத்துவர்கள் சேவை உணர்வுடன் ஏழைகளுக்கு உதவுகின்றனர். தன்னலமற்ற சேவையால் மருத்துவர்கள் ஒளி விளக்காகப் பிரகாசித்து, எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும், நீங்கள் தேர்ந்தெடுக்கின்ற மருத்துவப் பாதையை ஒளிமயமாக்கிக் கொண்டுள்ளனர். நீங்கள் உங்கள் வாழ்வை முன்னேற்றும் பொழுது ஏழைகளுக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அனைவரது பாராட்டுதலையும் நன்றியினையும் நீங்கள் பெறுவீர்கள். எடுப்பதைவிட, கொடுப்பதில் (குறிப்பாக ஏழை மக்களின் உடல் நிலை பாதிக்கப்படும்போது) அதிக மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை ஏழை பணக்காரன் என்னும் பாகுபாடு கிடையாது. சாதி, சமய, பொருளாதார வேறுபாடு இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது.

எனவே உங்கள் அறிவையும் திறனையும் கொண்டு ஏழை மக்களின் ஆரோக்கியத்திற்கு உதவுங்கள் என உங்கள் அனைவரையும் கேட்டுக்

கொள்கிறேன். நமது புனிதமான நூல்கள் எப்போதும் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பதையே வலியுறுத்தி வந்துள்ளன. இதில் மருத்து வர்களே முன்னிலை வகிக்க வேண்டும்.

அனைத்து வசதிகளுடன் கூடிய வளாகம் டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நெடுநாள் தேவையாக இருந்து வருகிறது. அதனுடைய அவசியத்தை வலியுறுத்தி துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் அவர்கள் என்னுடன் விவாதித்தார். நகரின் மையத்தில் குறைந்த பட்சம் நிர்வாகப் பிரிவினையும் நூலகத்தையும் அமைக்க வேண்டும் எனக் கருத்துத் தெரி வித்தார். டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பிரிவினை யும் நூலகத்தையும் அமைக்க, கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடியூட்டில் நிலத்தை அரசு ஒதுக்கித் தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெகுவிரைவில் பல்கலைக் கழகத்தின் முழு வளாகமும் உருவாக இது முதல் படியாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

பல்கலைக் கழகத்தின் அனைத்து பட்டதாரிகளையும், பரிசு பெற்றவர் களையும் நான் பாராட்டுகிறேன். மருத்துவத்துறையில் இன்று இருப்பதைப் பெருமையாக நீங்கள் கருத வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் சேவையை எதிர்பார்க்கின்ற மக்களுக்குச் சுயநலமின்றி உங்களை நீங்கள் அர்ப்பணிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களது மருத்துவக் கல்விக்கான பெரும்பகுதி செலவினை ஏழைச் சமுதாயம் ஏற்றுள்ளது என்பதை நீங்கள் உணரவேண்டுமென நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு டாக்டர் ஆஃப் சைன்ஸ் (Doctor of Science) பட்டம் வழங்கிய மைக்காக நான் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**(29.9.92 அன்று, சென்னையில், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை)**

# ஓர் அரசைப்பற்றி, குறை காண்பதுடன் நில்லாது ஆக்கபூர்வ கருத்துக்களையும் தரவேண்டும்

சங்க காலம் முதல், வீர வரலாறு தொடர்ந்து வரும் வெற்றிச்சீமை, இந்த சிவகங்கைச் சீமை. மாமன்னர்கள் மருது சகோதரர்களும், மானங்காத்த மாவீரர்களும், சீறிவரும் புலியை முறத்தால் துரத்திய மறக்குல மாதரசிகளும், மாபெரும் புலவர்களும் வாழ்ந்த மண் இந்த மண்! திராவிட இயக்கச் சீர்திருத்தச் செம்மல்களைத் தந்ததும் இந்த மண்! திராவிட இயக்க வெற்றி மாநாடுகளைக் கண்டதும் இந்த மண்! இந்த மண் சிவந்திருக்கிறது. காரணம் என்ன என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். தாயகத்தின் விடுதலைக் காகவும், திராவிட இயக்கத்தைக் காப்பதற்காகவும், செந்தமிழ்ச் சிங்கங்கள் சிந்திய செங்குருதி தந்த செம்மைதான் இந்த மண்ணின் சிவப்புக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று உணர்ந்தேன்.

தமிழக வரலாற்றில் பசும்பொன்னால் பொறிக்கத்தக்கத் திருப்பெயர், முத்துராமலிங்கத் தேவர்! அந்தப் பெருமகனின் பெயரைத் தாங்கி இருக்கிற, புகழுக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், வேலும், வாளும் விளையாடிய இப்பகுதியில், மருதிருவர் புகழ்பாடும் சிவகங்கை நகரில், வீரத்தின் விளை நிலங்களாகிய உங்கள் அனைவரையும் சந்திப்பதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**தமிழகத்தில், தமிழ் கூறும் நல்லுலகில், எல்லா இடங்களிலும், 'தேவர்' என்று குறிப்பிட்டால், முத்துராமலிங்கத் தேவர்தான். என்று எவரும் உணர்ந்து கொள்ளும் அளவுக்குக் கொள்கைக் கோபுரமாய் உயர்ந்து நிற்பவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்.**

## புகழ் சேர்த்தவர்!

சத்தியத்தின் நிலைக்களமாய், சான்றாண்மையின் பிறப்பிடமாய், தேசியம், தெய்வீகம், செந்தமிழ் என்ற மூன்றும், ஓர் உருவாய்ப் பிறந்து வந்தது போல் வந்த அந்த வரலாற்று நாயகருக்கு அவர் பெயரால் மாவட்டம் அமைத்து, மாபெரும் புகழ் சேர்த்தவர். பொன்மனச் செம்மல் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

'பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்' என்ற பெயரில், புரட்சித் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட இந்த மாவட்டத்துக்குப் 'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று, இடைக்கால அரசு ஒன்று பெயர் வைத்தது. தேவர் திருமகன் என்றாலே அவர்தான் என்றாலும், பெயர் விளங்கத்தானே பெயர் வைக்கிறோம். அந்தப் பெயரையே மறைத்து விட்டால் எப்படி?

வாழையடி வாழையென வருகிற தமிழ்ச் சமுதாயம் அந்தத் திருப்பெயரை மறந்துவிடக் கூடாதே என்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான்,

ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும், "பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்' என்ற பெயர் மாற்றம் செய்ய உத்தரவிட்டேன். 'முத்துராமலிங்கம்' என்னும் திருப்பெயர் மீது, பெயர் மாற்றம் செய்த பெருமக்களுக்கு என்ன கோபமோ தெரியவில்லை - மறைத்துவிட்டார்கள். ஊரையே கபளீகரம் செய்ய வல்லவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயரையே கபளீகரம் செய்ததில் வியப்பில்லை அல்லவா? நாட்டுக்கும், மொழிக்கும், நாளெல்லாம் உழைத்த பெருமக்களின் திருநாமம். நாவில் என்றும் நடமாட வேண்டும் என்பதே நாட்டுமக்களின் விருப்பம். அந்த விருப்பத்தின் செயலாக்கம் தான். இந்தப் பெயர் மாற்றம்!

## நெஞ்சம் வணங்கும் பூமி

எவ்வளவு பெரிய இலட்சியவாதிகள் வாழ்ந்த மண் இந்த மண் என்று நினைக்கையில், என் நெஞ்சம் இந்தப் பூமியை வணங்குகிறது. சிவகங்கைச் சீமை என்றாலே, அது வீரத்தின் விளைநிலம் என்று, பள்ளி மாணவரும் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு, இந்த மண்ணில், வீரத்தின் விதைகள் ஊன்றப்பட்டிருக்கின்றன.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து, அடிமை இந்தியாவில் கேட்ட முதற்குரல்கள், தெற்கேதான் தோன்றின. மருது பாண்டியர்கள். மாவீரன் புலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், இவர்களின் குரல்கள் சுதந் திரத்தின் முதற்குரல்கள், அந்த மகத்தான வீரர்களின் வரிசையில் இடம் பெற்ற, மருது சகோதரர்களைப் பற்றி, இந்த மண்ணில் நின்று கொண்டிருக் கிற நான், நினைக்காமல் இருக்க முடியுமா?

மாசு மருவற்ற மறவர்குல மாணிக்கங்கள், மருது சகோதரர்கள், விடுதலைக்குப் போரிட்ட வீரத்துக்காக மட்டுமல்ல; தஞ்சமடைந்த ஊமைத் துரையைத் தலைபோனாலும் காப்போம் என்னும் தர்ம சிந்தனைக்காகவும், நம் நெஞ்சில் பெரிய மருதும், சின்னமருதும், நீங்கா இடம் பெறுகிறார்கள். இந்த அறப்பண்பும், மான உணர்வும், இந்தியாவில் அன்றைக்கு ஒரு சில அரசர்களுக்காவது இருந்திருந்தால், பாரதம் 19-ஆம் நூற்றாண்டிலேயே சுதந்திரம் அடைந்திருக்கும். என்ன செய்வது? எல்லோரும் அப்படி இல்லையே! இன்றைய சூழ்நிலைகூட அதுதானே!

இலட்சியத்தை முன் வைத்து, வீறு நடைபோடும் அரசுகளைக் காட்டிக் கொடுப்பதும், போகிற போக்கிலே சேற்றை அள்ளி வீசுவதும், கொள்கை யில்லாத சில குழப்பவாதிகளின் கூடப் பிறந்த குணமாகத்தானே இருக்கிறது! இருந்தாலும், சூழ்ச்சி தன்னை, வஞ்சகம் தன்னை, பொறாமை தன்னைத் தொகை தொகையாய், எதிர் நிறுத்தித், தூள் தூளாக்கும் மறச்சிந்தை கொண்ட நீங்கள், இன்றைக்கு எனக்கு இருப்பதைப் போலவே, அன்று மக்கள், மருது சகோதரர்களுக்கு மாபெரும் அரணாய் இருந்தார்கள்.

மருது சகோதரர்களின் ஆட்சியை வரலாறு வாழ்த்துகிறது. வீரத்தால் மட்டுமல்ல, நிர்வாகச் சிறப்பாலும் நீடு புகழ் பெற்றவர்கள் மருது பாண்டியர்.

இயல்பாகவே பின் தங்கிய பகுதியாக இருக்கிற இந்தச் சீமையில், அன்ன சத்திரம்வைத்து, ஆருயிர் மக்களைக் காத்தவர்கள் அவர்கள். காளையார்கோயில், குன்றக்குடி, சிவகங்கை, திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர், மானாமதுரை, முத்தனேந்தல் போன்ற இடங்களில், அவர்கள் அமைத்த அன்ன சத்திரங்கள், நன்றியுணர்வுமிக்க மக்களால், இன்றும் நினைவு கூரப்படுகின்றன. அதே பணியைத்தான், இன்று உங்களது அரசு, உங்கள் அன்பையே பெரிதாக எண்ணும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மூலம் நிறைவேற்றுகிறது!

காலம் மாறலாம். கடைபிடிக்கின்ற ஆட்கள் மாறலாம். ஆனால், நல்ல தத்துவங்கள் நம்மிடையே நிலைக்கின்றன. நல்லவர்களால் நாளும் தொடரப்படுகின்றன.

அன்று, 1801 அக்டோபர் முதல்நாளில், அசுரத் தனமான படை பலத்தால், மூர்க்கத்தனத்தால், ஆங்கிலேயர்கள், சிவகங்கைச் சீமையைப் பிடித்த போதும், மருது பாண்டியர்களைப் பிடிக்க முடியவில்லை; சூழ்ச்சியாலேயே ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளத் தெரிந்த வெள்ளையர்கள், எவரும் எப்போதும் நினைத்துப் பார்த்திராத, கொடுமையான தந்திரத்தைக் கையாண்டார்கள்.

பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்ட ஒரு கயவனால், சின்ன மருது காட்டிக் கொடுக்கப்பட்டுச் சிறைப்பட்டார். பெரிய மருதை எப்படிப் பிடிப்பது என்று திட்டமிட்ட வெள்ளையர், ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். ''10 நாட்களுக்குள், பெரிய மருது தங்களிடம் வந்து சரணடையாவிட்டால், அவரது அன்புக்கும், அளவற்ற ஈடுபாட்டுக்கும் உரிய, காளீஸ்வரர் கோயில் கொண்டிருக்கும் காளையார் கோயில் இடித்துத் தள்ளப்படும்'' என்பதுதான் அந்த அறிவிப்பு.

வெள்ளையர் தந்திரம் பலித்தது. தன்னைத் தந்தாவது ஆலயத்தைக் காக்கவேண்டும் என்னும் தியாக உணர்வில், பெரிய மருது தன்னைத்தானே வெள்ளையரிடம் ஒப்படைத்தார்.

1801-ஆம் ஆண்டு, இதே அக்டோபர் மாதம் 27-ஆம் நாளில், பெரிய மருது திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டார். அதற்கு மூன்று நாள் முன்பே, சின்ன மருது தூக்கில் போடப்பட்டார்.

ஆலயம் காக்க, தெய்வ உணர்வை மங்காது வளர்க்க, பாரம்பரிய மிக்க கலைச் சின்னங்களைப் பாதுகாக்க, என்ன விலை தரலாம் என்றால் தன்னையே விலையாகத் தரலாம் என்னும் தத்துவத்தை நிலைநாட்டியவர் பெரிய மருது. ஆகவேதான், இந்த மண்ணில் வாழும் மக்கள், இன்றைக்கும் 'மருது' என்னும் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள்.

அன்று பெரிய மருது போதித்த தத்துவத்தைத்தான், இன்று உங்கள் அரசு, உங்கள் சகோதரியின் தலைமையிலான அரசு, செயல்படுத்தி

வருகிறது. கோயில் விளங்க குடிமக்கள் விளங்குகிறார்கள். என்பதுதானே, தமிழ்த்தாய் தந்த தத்துவம். அந்தத் தத்துவத்தின் செயற்பாடுதான், தமிழக அரசின் ஆலய மேம்பாட்டுத் திட்டம்.

## நலத்திட்ட உதவிகள்

ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 16 மாத காலத்தில், ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற பிரிவினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும்பணிகளை அறிந்தவர்கள் நீங்கள். மாவட்டந்தோறும் மக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று, தகுதியுள்ள அனைவரையும், தலைமைச் செயலகத்துக்கு, அரசாங்கச் செலவில் வரவழைத்து, பல்வேறு திட்டங்களின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, நலத்திட்ட உதவிகளை, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புக்கு அரசு வழங்கி வருகிறது.

இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக மருத்துவ முகாம்கள் நடத்தும் திட்டம், தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவ மனைகளுக்கு நோயாளிகள் வருவது தவிர, மருத்துவர்களே மக்களைச் சந்தித்து நோயை அறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் மகத்தான திட்டமாக, இத்திட்டம் ஏழை எளியோரைக் கவர்ந்துள்ளது.

தமிழகத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியவர்களுக்கும், இலவச சேலை - வேட்டி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளோம். வருகின்ற ஆண்டும் இலவச சேலை வேட்டி, உங்களுக்குக் கிடைக்கும்; கண்டிப்பாகப் பொங்கல் தினத்திற்கு முன்பே கிடைக்கும்.

இவ்வாறு ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் அரசாக, உங்கள் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் காண்கின்றீர்கள். சமுதாயத்தின் எல்லாத் தரப்பினருக்கும் உரிய உதவிகளை வழங்க, அவர்களைப் பாதுகாக்க, இந்த அரசு என்றுமே தயங்கியதில்லை. உங்கள் சகோதரியாகிய நான், கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும் சுமந்து வந்து, உங்கள் முன் இன்று நிற்கிறேன்.

## ரூபாய் 62 கோடிக்கான திட்டங்கள்

இன்று உங்களைக் காண வந்திருக்கின்ற நான், உங்கள் மாவட்ட வளர்ச்சிக்காக, ஒன்றல்ல, இரண்டல்ல, 62 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கிறேன். பல்வேறு துறைகளின் மூலம், இப்பகுதி மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்கள் இவை.

**இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த, சிவகங்கை கிராஃபைட் திட்டப்பணி, இன்று முதல் தொடங்குகிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1970-ஆம் ஆண்டிலேயே,**

சிவகங்கைப் பகுதியில் தரமான கிராஃபைட் படிமங்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், இத்திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க, 477 ஏக்கர் பட்டா நிலத்தை ஆர்ஜிதம் செய்து, 423 ஏக்கர் அரசு புறம்போக்கு களையும் சேர்த்து ஆக மொத்தம் 900 ஏக்கர் நிலம், 'டாமின்' நிறுவனத் திடம் 1984-ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது.

உலக அளவில் உயர் தொழில்நுட்பப் பொருட்கள் தயாரிக்கத் தேவை யான, 96 சதவிகிதத்திற்கு மேலான செறிவூட்டப்பட்ட கிராஃபைட் தயாரிப் பதற்கு, மேலைநாட்டுத் தொழில் நுட்ப நிறுவனங்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், இத்திட்டம் ஆக்கபூர்வமான முன் னேற்றம் ஏதும் இல்லாமல், தேக்க நிலையிலேயே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபொழுது கிடந்தது. மிகவும் பிற்பட்ட மாவட்டமாகிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு, இத்திட்டம் ஒன்று தான் நிரந்தரமாக உயர்வினை அளிக்க முடியும். இப்பகுதி மக்களின் பொருளாதார நிலையைச் சீர்செய்ய முடியும் என்று நான் நன்கு அறிந்த தனால், இத்திட்டத்திற்கு உடனடியாகச் செயல்வடிவம் கொடுக்க வேண்டு மென்று ஆணையிட்டேன்.

இடைப்பட்ட காலத்தில், 1988-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில், இத்திட்டத்திற்கு மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர், மதிப்பிற்குரிய திரு. ராஜீவ்காந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அன்றைய தினம், ஜெர்மனிய நாட்டுத் தொழில்நுட்ப உதவியுடன், செயல்படுத்துவதாக இருந்த இந்தத் திட்டம், தற்போது நமது நாட்டின் தொழில்நுட்ப உதவியுடனேயே, செயலாக்க முடிவு செய்து, இன்று முதல் கிராஃபைட் சுரங்கப் பணிகளும், ஆலை கட்டுமானப் பணிகளும் தொடங்கு கின்றன.

ஏறத்தாழ 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும் இத்திட்டம். இன்னும் 18 மாதங்களில் முழுமையாக நிறைவு பெறும் என்பதை, மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில் தயாரிக்கப்படும் கிராஃபைட், 96 சதவிகிதத்திற்கு மேற் பட்ட கரிச்சத்து செறிவூட்டப்பட்டதாகவும் ஒரே சீரான தரமான பெரிய செதில்கள் கொண்டதாகவும் இருக்கும். இத்திட்டத்தை நிறைவேற்றும் பணியை இயந்திரவியல், மின்னியல் மற்றும் கட்டடவியல் சிறப்புப் பிரிவு களைத் தன்னகத்தே கொண்டுள்ள, குறிப்பிட்ட காலத்திற்குள் பணியைச் செய்து முடிக்கும் திறமை கொண்ட, உலக அளவில் பெயர் பெற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைத்து உள்ளோம். எனவே இப்பணி, கண்டிப்பாக 1994-ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் நிறைவு செய்யப்பட்டு, உற்பத்தி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகங்கை கிராஃபைட் திட்டம், 22 கோடி ரூபாய் செலவில் அரசால் செயல்படுத்தப்பட்டாலும், இதில் தயாரிக்கப்படும் உயர் ரக கிராஃபைட்டைப்

பயன்படுத்தி, பல உயர் தொழில் நுட்பப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அமைய உள்ளன. அவற்றின் மதிப்பீடு, ஏறத்தாழ 200 கோடி ரூபாயிலிருந்து, 800 கோடி ரூபாய் வரை இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இத்திட்டம் இப்பகுதியின் முன்னேற்றத் திற்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

எக்காரணத்தைக் கொண்டும் இத்திட்டம் தாமதப்படவோ, தடைப் படவோ கூடாது என்ற உறுதியான முடிவின் அடிப்படையிலும் விரைவில் இத்திட்டத்தின் பயன் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்திலும், அரசு அனைத்து ஆக்கபூர்வமான துரித நடவடிக்கை களை மேற்கொண்டு, இன்று இப்பணியைத் தொடங்கி உள்ளது. இப்பகுதி மக்களின் மனம் நிறையும் வண்ணம், இன்று இப்பணியைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

## பச்சை விளக்கு

தமிழகத்தில் தொழில் முன்னேற்றம் மஞ்சள் விளக்காக இருக்கிறதென்றும், அதனை, பச்சை விளக்காக மாற்ற வேண்டுமென்றும் சகோதரர் ப.சிதம்பரம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே மூடிக்கிடந்த பல தொழிற்சாலைகளை எங்கள் முயற்சியால் திறந்து வைத்து அப்போதே மஞ்சள் விளக்கைப் பச்சை விளக்காக மாற்றிவிட்டோம். தமிழகத்தில் எரிந்து கொண்டிருக்கும் பச்சை விளக்கை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழக தொழில் முன்னேற்றத்திற்கு உதவுவதாகத் தெரிவித்த சகோதரர் ப. சிதம்பரத்தின் கருத்துக்களை வரவேற்கிறேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பச்சை விளக்காக எரிந்து கொண்டிருப்பதால்தான், இன்று இந்த கிராஃபைட் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனி என்றென்றும் தமிழகத்தில் பச்சை விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்தியாவிலேயே போக்குவரத்துத் துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி யுள்ளது நம் அரசு. இன்று, 52 வழித்தடங்களில் புதிதாகப் பேருந்துகள் இயங்கத் தொடங்குகின்றன. இவற்றால் இப்பகுதி மக்கள் கூடுதலாகப் போக்குவரத்து வசதிகளைப் பெறுகின்றார்கள்.

இந்த மாவட்டம் புதிதாக அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இம் மாவட்டத்திற்கான மாவட்ட நீதிமன்றம், சமீபகாலம்வரை, மதுரையிலேயே தான் இயங்கி வந்தது. இதனை அறிந்த நான், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் தொடர்பு கொண்டு, உடனடியாக இம் மாவட்ட நீதிமன்றத்தை மதுரையிலிருந்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் இதர வசதிகளை உடனடியாகச் செய்துதர வேண்டும் என்றும், அரசு அலுவலர்களுக்கு ஆணையிட்டேன்.

அதன்படி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம், கடந்த 28.8.1992 அன்று சிவகங்கையில் திறக்கப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவ்வாறே காமராசர் மாவட்டத் தின் மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், இராமநாதபுரத்திலும் தற்போது திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சிவகங்கைச் சீமை, வீரத்தின் விளைநிலம் மட்டுமல்ல, விவேகத்தின் பிறப்பிடமும் கூட, இதே மண்ணில்தான் எடுக்க எடுக்கக் குறையாத கல்விச் செல்வத்தை எம் மக்களுக்குக் கொடுப்பதே எங்கள் தலையாய கொள்கை எனத் தந்தை பெரியார் அவர்களை முடிவெடுக்க வைத்து, பெரியார் அறக்கட்டளை மூலம், கல்விப் பணிகள் தொடரக் காரணமாயிருந்த சீர் திருத்தச் செம்மல், 'சிவகங்கை இராமச்சந்திரன்' என இன்றைக்கும், நம் திராவிட இயக்கத்தினரால் போற்றிப் புகழப்படும் பெருந்தகையாளர் வாழ்ந்தார், என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

## அசைக்க முடியாத நல்லாட்சி

இன்றைக்குத் தமிழகத்தில், அசைக்க முடியாத நல்லாட்சி ஒன்றை நடத்தி வரும் எங்கள் இயக்கம், ஆரம்பத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கமாய் அரும்பிய வேளையில், கடும் எதிர்ப்புக்களை எல்லாம் உடைத்து எறிந்து, இப்பகுதியில் பகுத்தறிவு இயக்கம் வேர் ஊன்றி வளர, வழிவகுத்துக் கொடுத்தவர் அவர்.

அப்பெருந்தகையாளருக்கு ஒரு சிறப்பினைச் செய்திட நான் முடிவு செய்துள்ளேன். சிவகங்கை நகரில் இயங்கி வரும் அரசு மாவட்டத் தலைமை யிட மருத்துவமனை, இனி பெரியவர் இராமச்சந்திரனார் அவர்களின் பெயரைத் தாங்கி, 'இராமச்சந்திரனார் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனை' என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவருக்குச் செய்யும் இச்சிறப்பை, இப்பகுதியில் வாழ்ந்த திராவிட இயக்க வரலாற்று நாயகர்கள், அனைவருக்கும் செய்த சிறப்பாகவே நான் கருதுகிறேன்.

## கண்ணதாசன் மணிமண்டபம்

திராவிட இயக்கம் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழங்கியுள்ள கொடைகள் ஆயிரம் உண்டு. அவைகளில் என்றென்றும் நம் நெஞ்சில் நிலைபெற்றிருக்கிற பெருமை, அது கவியரசு கண்ணதாசனை நமக்கு வழங்கியதுதான். அரண் மனைத் தமிழையும், ஆலயத் தமிழையும், உயர்குடி மக்களிடம் உலாவந்த தமிழையும், பாமர மக்களிடம் கொண்டு வந்து சேர்த்த பெருமை, தமிழ்க் கவிகளில் பாரதிக்கும், பாரதிதாசனுக்கும் அடுத்து, கவியரசு கண்ணதாசன் அவர்களையே சாரும்.

ஒரு மகா கவிக்குரிய ஆளுமை, தாய்மொழியில் அளவற்ற புலமை, நினைக்கிற கருத்துக்களை நெஞ்சுரத்தோடு சொல்லுகிற துணிவு, ஆகிய வற்றின் தொகுப்புதான் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். அவர் தமிழ்க்

கவிதை உலகில் மட்டுமல்லாமல், திரைப்பட உலகிலும் மாபெரும் கவிப் புரட்சி செய்தவர். இன்று சாதாரண மக்களின் நாவில் நடம்புரிவது அவரது கருத்துச் செறிவான தத்துவப் பாடல்கள்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மேலும் உரைநடை, நாடகம், சிறுகதை ஆகிய துறைகளிலும், அவர் ஆற்றியுள்ள இலக்கியத் தொண்டு மகத்தானது; மரியாதைக்குரியது.

எனவேதான், கவியரசு கண்ணதாசன் அவர்களை நினைவுகூரும் வகையில், காரைக்குடியில் ஒரு மணி மண்டபத்தை, 55 இலட்சம் ரூபாய் செலவில், தமிழக அரசு அமைத்துள்ளது.

இந்த மணி மண்டபத்தில் அவருடைய புகழைப் பறைசாற்றும் வண்ணம், அவருடைய படைப்புகளைக் கொண்ட நூலகமும், அவரது வாழ்க்கையை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்பட உள்ளது. இந்த மணி மண்டபத்தில், கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாகக் கலையரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றமிகு இவ்விழாவில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் புகழுக்கு மரியாதை செலுத்திடும் வகையில் அவரது நினைவாகக் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தைத் திறந்து வைத்த தில், மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

## இராணி வேலுநாச்சியார் சிலை

அடுத்ததாக - இராணி வேலுநாச்சியார் சிலை அமைப்புக் குழுவினர், சிவகங்கை அரண்மனை வாசலில் அமைந்துள்ள சிலையைத் திறந்து வைக்க வேண்டுமென்ற கோரிக்கையினை வைத்துள்ளார்கள். அதனை ஏற்று பல்லாண்டு காலம் சிவகங்கையில் நல்லாட்சி புரிந்த வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்ததில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அண்மையில் பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப்படுத்தியிருக் கிறேன். சமுதாய வீதியில் விலைபோகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாகப் பெண் குழந்தைகள் எத்தனைக் காலம் இந்தத் தேசத்தில் துன்பப்பட வேண்டுமோ தெரியவில்லை.

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!'' என்று கவிஞர்கள் பெண்ணின் புனிதத்தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திறமையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக்கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும் அந்த அறிவியல் தகவலை அறிந்து கொண்டு, பெண் குலத்தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை தொடர்கிறது. இந்தக் கொடுமைக்குச் சமூகம் மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால், பெண்ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரியாரும், பேரறிஞர்

அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் வகுத்த வழியிலே நடை போடும் பொறுப்பான அரசு ஒரு பெண்ணையே முதல்வராகக் கொண்ட இந்த அரசு எப்படி இதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?

## போராடி வென்ற பெண்கள்

வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும் ஒரு பெண் இருக் கிறாள் என்பது உலகறிந்த தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உணராத சில மக்களும், நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்துவிடலாமா? அவ்வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா? என்ற அவல நிலை ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின்றது. குறிப்பாக சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் இந்நிலை ஒரு சில இடங்களில் தொடர் கின்றது. ஆட்சிக்குத் துணை நின்றவர்கள் என்ற அளவில் மட்டுமல்ல. ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்து, போர்க்களத்துக்கும் சென்று போராடி, வெற்றிவாகை சூடிய பெண்கள் இல்லையா?

நமது வரலாற்றில் ராணி வேலு நாச்சியார், ராணி மங்கம்மாள், ஜான்சிராணி லட்சுமிபாய் போன்ற வீரப் பெண்மணிகள், அரசு பீடம் ஏறி வெற்றிகரமாக ஆட்சி புரிந்து மக்கள் நலம் காக்கவில்லையா? அவர்கள் எல்லாம் பெண்கள் தானே?

ஏன், நமது பாரத நாட்டுப் பிரதமராக, அன்னை இந்திரா காந்தி அவர்கள் எத்தனைக் காலம் ஆட்சி நடத்தினார்? இன்று உங்கள் சகோதரி யான என் கையில்தானே தமிழகத்தின் கோடானு கோடி மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறீர்கள்? நானும் ஒரு பெண்தானே!

பெண்களை தெய்வமாகப் போற்றுகிற மரபு நம் மரபில்லையா? செல்வத்துக்குத் திருமகள், கலைகளுக்குக் கலைமகள் வீரத்துக்கு மலைமகள் என்று போற்றுவதெல்லாம் மேடைக்காக மட்டும்தானா அல்லது கோயில் களுக்கு மட்டும்தானா?

திராவிட இயக்கத்தின் அடித்தளமே பெண்ணுக்குச் சம உரிமை என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில் தானே அமைக்கப்பட்டது! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெண்களின் உயர்விற்காகவும், உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்டனர். இத்தனை முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும் பெண் குழந்தைகளை அழிக்கும் எண்ணம் ஒரு சிலர் மனதில் தோன்றுகின்றது என்றால் அவர்கள். எத்தனை கீழ்த்தரமானவர்கள்?

பெண்கள் நாட்டின் கண்கள் என்று ஒரு பக்கம் பாடம் படிப்பதும், மறுபக்கம் பெண் மகவுகளைப் பலியிடுவதும், அதற்கு வரதட்சணை போன்றவற்றைக் காரணம் காட்டுவதும் எத்தகைய மோசடிகள் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களின் உள்ளங்களிலே தைக்கும் அளவுக்கு, உணர்த்தும் எழுத்துக்களும் பேச்சுக்களும் இன்றைய தேவை.

இந்த மாபெரும் கொடுமைக்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில்தான் புதியதொரு புரட்சிகரமான திட்டத்தை அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை பெண் என்று அறிந்து அதனை வேண்டாம் என்று எண்ணும் பெற்றோர்கள் தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள். அவர்களை வளர்த்துக் காக்க எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தைகளைப் பெற்றெடுங்கள். அவர்களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை என்றால் அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள் நாங்கள் அவர்களை வளர்க்கின்றோம். அவ்வாறு நேரில் வந்து ஒப்படைத்தால், அந்தப் பெண் குழந்தையின் பெற்றோர் யார் என்று தெரிந்துவிடுமே! ஊரார் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாதே என்று அஞ்சுபவர்கள் கூட கவலைப்பட வேண்டாம். சேலம், உசிலம்பட்டி பகுதிகளில் உள்ள பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். உங் களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல் அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போங்கள்.

## பெண்கள் இந்நாட்டுக்குத் தேவை

உங்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை அரசுக்கு வேண்டும் தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் தார மாக ஒரு பெண் வேண்டும்; தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும். ஆனால், தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர்களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் என்றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க அவர்கள் எங்களுக்குத் தேவை. இந் நாட்டுக்குத் தேவை. எனவே, அவர்களை ஏற்று வளர்த்துக் காக்கும் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும் பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவு செய்து தயங்காமல் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பெண் சிசுக்களின் பெருங்கொலை என்பது நாகரீகத்தின் சீரழிவு, பண்பாட்டுப் படுகொலை. தர்மத்தின் பேரழிவு. எனவேதான் மனிதாபி மானக் கண்ணோட்டத்தில் நான் இந்தப் புதிய முயற்சியில் ஈடுபட் டுள்ளேன்.

இப்படி அல்லும் பகலும் தமிழக மக்களின் நலனையே தலையாய கடமையாகக் கொண்டு செயலாற்றிவரும் இந்த அரசை - குறிப்பாக என்னைக் குறைகூறி வருபவர்களும், குற்றம்சாட்டி வருபவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். ஜனநாயகத்தில் ஓர் அரசைக் குறை கூறுவது விமர் சனம் செய்வது தவறல்ல. அவை ஆக்கபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் நம் எதிர்பார்ப்பு இதற்கும் மேலாக இன்றைக்கு மக்களது கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியில், அளவிலா அவதூறுகளை அள்ளி வீசுகிறவர்களும் புதிதாக முளைத்திருக்கிறார்கள்.

கோமாளிகள் கோமாளிகளாக இருப்பதில் குற்றமில்லை. அவர்கள் குழப்பவாதிகளாகவும், குடிகேடர்களாகவும் மாறி இருப்பது தான் கொடுமை.

இந்த அரசியல் அநாதைகளை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டியது உங்கள் கடமை.

இந்த அரசியல் கோமாளிகள், ஆக்கபூர்வமான காரியங்கள் நிறைவேற்றப் படுவதைப் பொறுக்கமாட்டார்கள். ஏழை எளியோர் ஏற்றம் பெறுவதைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்ற குறுகிய வட்டத்திலேயே வாழ்ந்து, அந்த சுயநலச் சுவர்களுக்கு உள்ளேயே தங்களது அரசியல் வாழ்க்கையை முடித்துக் கொள்ள முற்படுபவர்களுக்கு வேறு வகையில் சிந்திக்கத் தெரியாது.

இப்படிப்பட்டவர்களுக்குத் துணை போகின்றவர்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள்தான் மக்களை நம்பாது மகஜர்களை நம்புகின்ற கூட்டம். தங்களது பொய்யான அறிக்கைகளால் பூகம்பத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று பகல் கனவு காணும் அரசியல் புல்லுருவிகள். அத்தகையோரின் ஆர்ப்பாட்டங்களை யாரும் பொருட்படுத்தத் தேவை இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை மாய்மாலத்தால் வீழ்த் தலாம் என்று வீண் கனவு காணும் வீணர்கள் இவர்கள். உங்களுக்கு இவர்களைப் பற்றி மிகவும் நன்றாகவே தெரியும்! இந்த வீணர்கள் உங்களை ஏமாற்றவே முடியாது என்பதும் எனக்குத் தெரியும். உங்களை ஏமாற்ற நினைக்கும் இந்த அரசியல் கோமாளிகள் விரைவில் ஏமாறத்தான் போகின் றார்கள். ஏற்கெனவே முகவரி அற்றுப் போய் மூலையில் முடங்கிக் கிடந்து எப்போதாவது தங்கள் தலையை நீட்டும் இந்த சந்தர்ப்பவாதிகள் அரசியல் களத்திலிருந்தே அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பது உறுதி.

நாங்கள் நடந்து செல்லும் பாதை பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த பாதை. இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடந்து வந்த பாதை • அவர்கள் அடியொற்றி வழி நடக்கும் நாங்கள்தான் இன்று திராவிட இயக்கத்தின் திருவிளக்கை ஏந்திச் செல்ல வேண்டியவர்கள் என்று உங்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதை நாங்கள் ஒருகணமும் மறவோம். எங்கள் கவனத்தைத் திசைதிருப்பி எங்கள் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, எங்கள் மீது களங்கம் சுமத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணம் ஈடேறப் போவதில்லை.

## நான் சட்டத்தை மீறவில்லை

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும் ஏழை எளியோரின் இதயத்தில் இடம்பிடித்துள்ள மக்கள் தொண்டர்களையும் எவராலும் என்றைக்கும் அசைக்க முடியாது என்பதுதான் உண்மை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுகளையும் குறைபாடுகளையும் சிலர் திட்டமிட்டே கூறிவரு கிறார்கள். அவற்றில் எள் அளவும் உண்மை இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்குப் பணிபுரிய நானும், என் மீது நம்பிக்கை வைத்து அன்பும் ஆதரவும் காட்ட நீங்களும் நிலையாக இருப்பதைப் பொறுக்காத சில பொய்யர்களின் புலம்பல்களை, நீங்கள் நம்ப வேண்டாம். உங்கள் அன்புச்

சகோதரியாகிய நான் எந்தச் சட்டத்தையும் எந்தத் தருணத்திலும் மறவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த இனிய விழாவில் நான் கலந்து கொள்ளும் இந்த நல்ல நேரத்தில் வறட்சியே வாடிக்கையாகிவிட்ட இந்த பசும்பொன் பூமி ஈரப்பசையுடன் காட்சி அளிக்கிறது. செம்மண்ணின் சிவந்த பரப்பில் பசுமைப் பொலிவுகளைப் பார்க்கின்றேன். உங்கள் சகோதரியின் ஆட்சியை வாழ்த்தும் வகையில் வானத்தின் நன்கொடையாக மழை பொழிந்திருக்கிறது. உங்கள் மனமும் நிறைந்திருக்கிறது. இந்தப் பசுமை இங்கே நிரந்தரமாக நிலைத்திட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்த வகையில்தான் இன்று சிவகங்கை கிராஃபைட் சுரங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இன்று 23 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இப்பகுதி மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன 36 கோடி ரூபாய் அளவிலான புதிய திட்டங்களுக்குக் கால்கோள் நாட்டப்பட்டுள்ளன. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,500 பயனாளிகள் பயன் பெற 3 கோடி ரூபாய் அளவிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் எங்கள் முயற்சியின் முதல் கட்டமாக இன்று மொத்தம் 62 கோடி ரூபாய் அளவிலான ஆக்கபூர்வமான பணிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழா இத்தனை சீரும் சிறப்புமாக நடைபெற அல்லும் பகலும் கண் துஞ்சாது உழைத்த உங்கள் மாவட்டத்தையே சார்ந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. கண்ணப்பன் அவர்களைப் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். கண்ணப்பன் என்றாலே திறமையின் மறு பெயர் என்று கூறலாம். எந்தப் பணியை அவரிடம் ஒப்படைத்தாலும் அதனை சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமை படைத்தவர் அவர். இந்த விழாவை இங்கு ஒரு வெற்றித் திருவிழாவாக நடத்திக் காட்ட வேண்டும் என்ற அவரது நீண்ட நாள் ஆசை இன்று நிறைவேறி உள்ளது. அவருக்கு மீண்டும் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்காக அவருடன் இணைந்து செயல்பட்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சகோதரர் திரு. செங்கோட்டையன் அவர்களுக்கும், இவர்கள் இருவருக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து உள்ளார்கள். சிவகங்கை கிராஃபைட் திட்டத்தை எப்படியாவது விரைவில் தொடங்க வேண்டும் என்பதில் மிக்க ஆர்வமும், அக்கறையும் கொண்டு, பல முயற்சிகள் மேற்கொண்டவர் அவர். இன்று சிவகங்கை கிராஃபைட் சுரங்கப் பணிகள் தொடங்குவது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்று நம்புகிறேன்.

இந்த விழாவில் அவரும் கலந்து கொண்டிருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் திரு. ஏ.என். தியானேஸ்வரன் அவர்களுக்கும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். தங்கவேலு அவர் களுக்கும், அரசு நலத்திட்ட உதவிகள் பெற, பயனாளிகளைத் தங்கள் மாவட்டங்களிலிருந்து அழைத்து வந்த காமராசர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. குணாளன் அவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். ஜனார்த்தன் அவர்களுக்கும் என் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழா சிறக்க அரும்பாடுபட்டு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்களுக்கும் நல்ல முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ள காவல் துறையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக, ஆனால் என் இதயபூர்வமாக ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மதுரையிலிருந்து சிவகங்கை வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும் நீண்ட நேரமாக வழி மேல் விழி வைத்து என் வருகைக்காகக் காத்து நின்று என்னைக் கண்டவுடன் மகிழ்ந்து உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கை ஆக்குகின்றேன்.

பாண்டிய நாட்டுப் பண்பு மணக்க, இன்று நீங்கள் காட்டிய அன்பும் எனக்களித்த இனிய வரவேற்பும் என்றென்றும் என் நெஞ்சில் நிலைத் திருக்கும். இந்த அன்பிற்கும், பாசமிக்க வரவேற்பிற்கும் என் இதயங்கனிந்த நன்றியை, உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பாசமும், பரிவும் உங்களுக்கான பணிகளை, இன்னும் வேகமாக நான் தொடர எனக்குப் புதிய ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளித் துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.''

**21.10.92-ல், சிவகங்கை விழாவில் ஆற்றிய உரை.**

# பாரபட்சமற்ற, மதச்சார்பற்ற, கட்டுப்பாடு விசுவாசமான பணிகளுக்குப் பெயர் வாய்ந்தது மத்திய ரிசர்வ் போலீஸ் படை

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கான பயிற்சி முடிந்து செல்பவர்களின் அணிவகுப்பில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சிறந்த அணிவகுப்பில் கலந்துகொண்ட அதிகாரிகளுக்கும், போலீசாருக்கும் நான் பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு பதக்கம் பெற்றவர் களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு மத்திய ரிசர்வ் போலீஸ் படையில் முழு உறுப்பினர்களாகச் சேர்வதில் சப்-இன்ஸ்பெக்டர்களும், போலீசாரும் மிகவும் பெருமை கொள்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

மத்திய ரிசர்வ் போலீஸ் படைக்கு மிகவும் புகழ்வாய்ந்த பின்னணி உண்டு. இந்தப் படைக்கு உள்ள புகழ் வாய்ந்த பாரம்பரியத்துக்காக இந்தப் படையினர் பெருமை கொள்ளலாம். இந்தப் படை - தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க உதவுவதில் சிறந்த சேவைகளைச் செய்து இருக்கிறது.

1959-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி, சீனத் தாக்குதலின் போது, முதலில் 10 ரிசர்வ் போலீஸ் படையினர் நாட்டுக்காகப் போராடித் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். நாடு முழுவதிலும் அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி, வீரமரணம் அடைந்த போலீசாருக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக ஆண்டு தோறும் கடைபிடிக்கப்படுகிறது.

1965-ஆம் ஆண்டு பாகிஸ்தான் தாக்குதலின்போது, அதை எதிர்ப்பதில் கட்ச் பகுதியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை முக்கிய பங்கு வகித்தது. 1971-ஆம் ஆண்டு நடந்த போரின் போதும் பாகிஸ்தானை எதிர்த்துப் போராடியது. நமது நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட நாச சக்திகள், பிரிவினைச் சக்திகளை ஒடுக்குவதிலும் மத்திய ரிசர்வ் போலீஸ் படை புகழ்பெற்று இருக்கிறது.

தற்போது மத்திய ரிசர்வ் போலீஸ் படை பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், அசாம் மாநிலங்களில் தீவிரவாதிகளையும், வன்முறையாளர்களையும் எதிர்த்துப் போராடிக்கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டிலும், மற்ற இடங்களிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை களை ஒடுக்குவதிலும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தவர்களைப் பிடிக்க, தமிழக அரசுக்கும், விசேஷ புலனாய்வுப் படைக்கும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் ஆற்றிய உதவிகளை நாம் அறிவோம்.

பல்வேறு காரணங்களுக்காக மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பணியை அதிக அளவில் பல மாநிலங்கள் கோரி வருகின்றன. வன்முறையாளர்கள்

மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதில் மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெரிய வெற்றியை அடைந்துள்ளது.

இந்தப் பணியில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 619 பேர்கள் உயிர் இழந்துள்ளனர். 2,336 பேர் காயம் அடைந்துள்ளனர்.

இந்தப் படையில் உள்ள 517 பேர்கள் இன்று வீரப்பதக்கங்கள், விருதுகளால் கவுரவிக்கப்பட்டுள்ளனர். இது மட்டுமல்லாமல் விளையாட்டுத் துறையிலும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் சிறந்து விளங்குகிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக இந்தப் படையின் அதிகாரிகள் மற்றும் போலீசாருக்கு உள்ள கட்டுப்பாடு நேர்மை மற்றும் பணியில் உள்ள முழு ஈடுபாடு இவைகளால் இத்தகைய பெரிய வெற்றிகளை அடைந்திருக்க முடியும்.

எனவே மத்திய ரிசர்வ் போலீஸ் படையை, தேசிய சீருடைப் பணியில் ஒரு முன்னணிப் படையாக மத்திய அரசாங்கம் கருதுவதில் எந்தவித வியப்பும் இல்லை. இந்தப் படையின் பணிகளை விரிவுபடுத்த மத்திய ரிசர்வ் போலீஸ் படை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெண் போலீஸ் பிரிவை முதன் முதலாகத் தொடங்கியது. மத்திய ரிசர்வ் போலீஸ் படைதான் என்பதை யறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பயிற்சிக்கு இந்தப் படை அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. எந்தச் சீருடைப் பணி என்றாலும் சரி; அதன் முறையான பணிக்கு, பயிற்சிதான் அடிப்படையான காரணமாகும். எண்ணம் மற்றும் திறமைகளைக் கூர்மைப் படுத்த இது உதவும். ஆயுதம் மற்றும் கருவிகளின் நவீன வளர்ச்சிகளோடும் போலீசாருக்குத் தொடர்பு ஏற்படுத்தவும், இதனைப் பயன்படுத்த சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும் இது வழிவகைகளை ஏற்படுத்துகிறது.

இந்தப் படை பணியாற்ற வேண்டிய சமுதாயத்தின் சமூக பொருளாதாரச் சூழ்நிலையின் பின்னணியைப் பற்றி அறியவும் இந்தப் பயிற்சி உதவும். இந்தப் படையினர் ஆற்ற வேண்டிய அனைத்துப் பணிகள் பற்றியும் விரிவான முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது என்று நான் அறிகிறேன்.

இங்கு நீங்கள் பெற்ற பயிற்சி நீங்கள் ஆயுதங்களோடு இல்லாத நேரத்திலும் சமூக விரோதிகளையும், சட்டத்தை மீறுபவர்களையும் சமாளிக்கும் வகையில் உங்களுக்குத் தன்னம்பிக்கை அளிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

விரைவில் நீங்கள் உங்கள் படைப் பிரிவில் சேருவீர்கள். இந்தப் பயிற்சியின்போது நீங்கள் கற்றவைகளையெல்லாம் அப்போது நடைமுறையில் செயல்படுத்த வேண்டியது இருக்கும். தொடக்க காலத்தில் உங்கள் கடமைகளை ஆற்றும்போது பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இங்கு நீங்கள் பெற்ற முறையான பயிற்சி மற்றும் இங்கு நீங்கள் கடைபிடித்த கட்டுப்பாடான உணர்வுகள் எவ்வித அச்சுறுத்தலையும் தைரியமாக எதிர்நோக்கவும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளவுமான மனப்பக்குவத்தை உங்களுக்கு அளிக்கும்.

பாரபட்சமற்ற, மதச்சார்பற்ற, கட்டுப்பாடு விசுவாசமான பணிகளுக்கு மத்திய ரிசர்வ் போலீஸ் படை பெயர் வாய்ந்தது. சேவை மற்றும் விசுவாசம் என்ற மத்திய ரிசர்வ் படையின் குறிக்கோளை நீங்கள் உங்கள் நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். துன்பமான சூழ்நிலையிலும் நீங்கள் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் பாரம்பரியத்தையும் புகழையும் காப்பாற்றி உங்கள் பிரிவுக்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

கடின உழைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றினால் மட்டுமே முன்னேற முடியும் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இங்கே உங்களுக்குப் பயிற்சி அளித்தவர்களெல்லாம் கடின உழைப்பினாலும் கட்டுப்பாடான வாழ்க்கையினாலும் மட்டுமே இந்த நிலைக்கு வந்துள்ளனர்.

உங்கள் வாழ்வின் இந்த முக்கியமான நிகழ்ச்சியில் உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

**24.10.92-ல், சென்னை, ஆவடியில் நடந்த மத்திய ரிசர்வ் போலீஸ் படைப்பிரிவு விழாவில் ஆற்றிய உரை.**

# வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு மக்களுடைய ஒத்துழைப்பு அவசியம்

**மா**நிலத் திட்டக்குழுக் கூட்டத்திற்கு நான் தலைமை தாங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன். தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவு செய்வதற்காக நாம் இங்கே கூடியுள்ளோம். நாம் பதவி யேற்றபொழுது, திட்டமிட்ட வளர்ச்சி தொடருமா என்பதே சந்தேகமாக இருந்தது. இதுவரை இருந்திராத பொருளாதாரச் சிக்கலை நாம் சந்திக்க வேண்டியிருந்தது. திட்டமிடுதல் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமானால், கடந்த காலத் தவறுகளைக் கருத்தில் கொண்டு, மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய நாம் தவறி னால் மக்களுடைய தேவைகளையும் குறிக்கோள்களையும் புறக்கணித்ததாகி விடும். தேசிய வளர்ச்சிக் குழு அளவில் முன்னுரிமைகளை மாற்றியமைத்து புதிய சந்தர்ப்பங்களை ஆராய்ந்து, நம் முன் உள்ள பணிகளை வரையறுப்பது சாத்தியமாகி உள்ளது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிகமான பண வீக்கம், குறைந்த உற்பத்தி என்னும் நிலைமையிலிருந்து நாம்விடுபட்டு, தொடர்ந்து வளர்ச்சியுறும் பாதைக்குச் செல்லவேண்டும். கடந்த காலத் தவறுகள், திட்டமிடும் முறையில் புதிய உத்வேகத்தைக் கொண்டுவருவதற் கான தேவை ஆகியவை எட்டாவது திட்டத்திற்கான தேசிய அணுகு முறையைக் கட்டுப்படுத்தியிருக்கின்றன. இந்த மாறுதல்களையெல்லாம் மனதில் கொண்டு, 8-வது திட்டத்திற்கான அணுகுமுறைக்குப் பொதுவான ஒப்புதல் அளிக்கின்ற அதே நேரத்தில், தமிழ்நாட்டிற்குத் தேவையான குறிப்பிட்ட திட்டங்களை வகுக்க முடிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

எட்டாவது திட்டம் பெரும் பொருளாதார நிதி, நெருக்கடிகளுக்கிடையே தான் வடிவமைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். மத்திய அரசையும் மாநில அரசுகளையும் இதே நிலைதான் சூழ்ந்திருக்கிறது. நிதிநிலைமை நிச்சயமாகத் திருப்தியளிப்பதாக இல்லை. 7-வது திட்டத்தில் இருந்த அளவுக்காவது 8-வது திட்டத்திற்கு நிதி ஒதுக்க இயலுமா என்பதே சந்தேக மாக உள்ளது. எனவே, மாநிலத்தின் 8-வது திட்டத்தை நடைமுறை சாத்திய மாக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்தது. ரூ.10,200 கோடி அளவுக்கு 8-வது திட்ட நிதிக்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். 7-வது திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட மதிப்பீடாக ரூ.5,750 கோடியை விட இது 77.39 சதவிகிதம் கூடுதல் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இந்த நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு 8-வது திட்ட காலத்தில் அனேக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாகிறது. மாநிலத்தின் நிதி ஆதார நிலைமை பல ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டதாக இருப்பதால் நான் இதில் எந்தவித நீக்குப் போக்கையும் காட்ட இயலாது. அசாதாரணமான நிதி இடர்ப்பாடுகள் நிலவிய போதும் 8-ஆம் திட்டத்தை முழுமையாக்க முடிந்திருக்கிறது என்பதே மகிழ்ச்சியளிக்கக்கூடிய நற்சகுனமாக விளங்குகிறது. 1992-93-ஆம் ஆண்டுக் கான மதிப்பீட்டை ரூ.1,751 கோடி அளவுக்குத் தீட்டியிருப்பதன் மூலம் 8-ஆம் திட்டத்திற்கான சரியான பாதையை நம்மால் சமைக்க முடிந்திருக் கிறது. இதுவே ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மாநிலத்தின் 8-வது திட்ட வடிவமைப்பிற்குத் தங்களது அனுபவக் களஞ்சியத்திலிருந்தும், அறிவுக் களஞ்சியத்திலிருந்தும், ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கியமைக்காக மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களாகிய - புகழ்பெற்ற வல்லுநர்களுமாகிய உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டு களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனைய வல்லுநர்களோடும் அலுவலர்களோடும் நீங்கள் நிகழ்த்திய விரிவான பேச்சுவார்த்தைகள் மூலம் உறுதியான, துரித வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளை உங்களால் வகுக்க முடிந்திருக்கிறது. நம் பணி, நம் கண்முன்னே வரையறுத்துக்காட்டப் பட்டுள்ளது. தொடக்கப் பிரிவில் (Primary Sector) நல்ல, பலதரப்பட்ட வளர்ச்சியை நாம் உறுதி செய்ய வேண்டும். இரண்டாவது பிரிவிற்கு (Secondary Sector) ஒரு புதிய வேகத்தை வழங்கக்கூடிய பல புதிய உத்தி களை எட்டாவது திட்டம் வழங்குகிறது.

வேளாண்மை மற்றும் அது தொடர்பான துறைகளில் சீரான வளர்ச்சியை நாம் உறுதி செய்து கொள்ளவேண்டும். வறட்சி நிவாரணப் பணிக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். நீர்த்தேக்கங்களைச் சீர்படுத்துவது முக்கிய வளர்ச்சிப் பணியாகக் கருதவேண்டும். வெளிப்பரப்பு நீர் முழுவதும் (Surface Water) உபயோகப்பட்ட நிலையில்-நிலத்தடி நீர் (Ground Water) வேகமாக உபயோகப்படுத்தப்படுகின்ற சூழ்நிலையில், இது தமிழ்நாட்டிற்கு மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

இரண்டாவது பிரிவிற்குப் புதிய வேகத்தைத் தர புதிய தொழிற் கொள்கையை ஏற்கெனவே நாம் வகுத்துள்ளோம். தமிழ்நாட்டிலுள்ள அடிப் படை வசதிகள் நாட்டிலேயே தலைசிறந்ததாக விளங்க அனைத்து முயற்சி களையும் நாம் மேற்கொள்வோம். தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லாத நிலையை உருவாக்க எடுக்கப்படும் தீவிர முயற்சியில் கூடுதலாக 1,630 மெகாவாட் மின்சக்தியை உருவாக்குவோம். வேகமான தொழில் வளர்ச்சி உருவாக வழிகோலும் வளர்ச்சி மையங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் படும். நாம் வகுத்துள்ள இந்தத் தொலைநோக்குப் பார்வை நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

எட்டாவது திட்டத்தில் வறுமை ஒழிப்பிற்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்தத் திட்டங்களுக்கு ஆதாரங்களை வழங்கினால் மட்டும் போதாது. இதன் வழிமுறைகளும் மக்களுடைய ஒத்துழைப்பும் முக்கிய அம்சங்களாகும். இதுமட்டும்தான் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பெரும் வெற்றி பெறுவதை உறுதி செய்யும். மனிதவள மேம்பாட்டின் வெற்றி கரமான சாதனையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை வேகமாக முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளை அடைய கல்வி, சுகாதாரம், உணவு, சமூக சேவை ஆகியவற்றில் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவோம்.

பரவலாக்கப்பட்ட திட்டம் (Decentralised Planning) மற்றும் தொலை நோக்குத் திட்டம் (Perspective Planning) உள்பட பல விஷயங்கள் நம் முன்னே உள்ளன. பதினைந்தாண்டுத் திட்டம் என்னும் நீண்ட கால

யோசனையை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் நீண்ட கால முன்னேற்றத் திற்குத் தேவையான உத்வேகத்தை அளிக்கக்கூடிய மாற்றங்களை அளிப்பது அதில்தான் சாத்தியமாகும். திட்டங்களைப் பரவலாக்கும்போது மாவட்ட அளவில் பொறுப்புகளைக் கொடுத்து அவர்கள் பதில் சொல்லும் நிலை மையை (Accountability) உறுதி செய்யும் வகையில் நாம் புதிய திட்டத்தைத் தொடங்க வேண்டும். மாவட்ட அளவில் முடிவுகள் எடுக்கும் வகையில், மாவட்டத்திற்கு ஏற்ற வகையில் மாவட்டத் திட்டம் வகுக்கும் யோசனையை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள விடையை நாம் காண முடியும் என நம்புகிறேன்.

தமிழ்நாடு ஒரு புதிய வளர்ச்சி சந்திப்பில் உள்ளது. மிகவும் தைரியமாக நடவடிக்கைகள் எடுத்து முன்னேற வேண்டும்.

நாம் பல புதிய உத்திகளைப் பற்றி தைரியமாகச் சிந்திக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்நாடு சீரான வளர்ச்சிக்கான புதிய பாதையை வகுக்க முடியும். இந்த உரையுடன் தமிழ்நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தைப் பற்றி முடிவு செய்ய, விவாதங்களை இந்தக் கூட்டத்தில் தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி.

**30.10.92-ல் சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, மாநில திட்டக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை**

# தென் மாநிலங்கள் ஏற்றம் பெற......

**வ**ரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை மாநகரத்தில் தென் பிராந்தியக் குழுவின் 21-வது கூட்டத்தில் உங்களையெல்லாம் வரவேற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இக்கூட்டத்தை நடத்துவதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் சென்னையைத் தேர்ந்தெடுத்ததற்காக நான் மகிழ்ச்சி யடைகிறேன். 1957-1978-லும் தென் பிராந்தியக் குழுக் கூட்டம் சென்னை யில் நடத்தப்பட்டிருக்கிறது. 14 ஆண்டுகளுக்குப்பிறகு சென்னையில் இக் குழுக் கூட்டம் நடைபெறுவது குறித்து மகிழ்கிறேன். பொது நலன் கருதி மாநிலங்கள் மத்திய அரசுக்கு இடையே ஒருங்கிணைந்த கருத்து உருவாக இந்தக் கூட்டம் புதிய தொடக்கத்தை உருவாக்கும் என நம்புகிறேன். மத்திய உள்துறை அமைச்சர், முதலமைச்சர்கள், பாண்டிச்சேரி துணை ஆளுநர், பிற அமைச்சர்கள் தலைமைச் செயலாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு எனது இதயபூர்வமான வரவேற்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் வந்து தங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் திருப்திகரமானதாக இருக்குமென நம்புகிறேன்.

பிற நாடுகளைவிட, மக்கள் தொகையிலும் பரப்பிலும் மிகப் பெரிய அமைப்பிலுள்ள மாநிலங்களைக் கொண்ட நமது ஆட்சி அமைப்பில் தென் பிராந்தியக் குழு நல் இணக்கத்தோடு, பொதுக் காரியங்களுக்குப் பயனுள்ள வகையில் காரியமாற்றும். இத்தகைய குறிக்கோளை அடைவதற்குப் பிராந் தியக் குழுக்கள் உத்வேகப்படுத்தப்பட்டு முக்கியப் பரிந்துரைகளை வழங்க வேண்டுமென சர்க்காரியா கமிஷன் கூறியுள்ளது.

அரசியல் சட்டத்தின் 263-ஆவது பிரிவின் கீழ் பிராந்தியக் குழுக்கள் குழுவின் பரிந்துரையோடு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இந்திய அரசு கமிஷனின் பரிந்துரைகளைச் செயலாக்கம் புரிவதில் விரைவான முடிவினை எடுக்கும் என நம்புகிறேன். பிராந்திய ஒத்துழைப்பு உலகம் முழுவதும் புதிய உற்சாகத்தோடு எடுத்துரைக்கப்படும். அநேக வெளி நாடுகளில் வெற்றி கரமாக நடைபோடுகிற அமைப்பினைக் கண்டறிவது, முழு தேசத்தின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் வழிகோலும். மற்றும் பிற வெளிநாடு களில் தேசிய ஒருமைப்பாட்டுத் தன்மையினைப் பேணுவது தேவைப்பட்ட கட்டாயமாக இருக்கின்றது. இந்த வகையில் வெளிநாடுகளில் அடிக்கின்ற காற்று நம்மை ஊடறுத்தபோதும் மாநிலங்களிடையே நல்லிணக்கம் உருவாகப் புதிய உறவுப் பாலங்களை அமைத்துக் கொண்டு நம்முடைய நாடு, இந்த நிலைமையைப் பேணுவதில் நல்ல இடத்தில் உள்ளது. பிராந்தியக் கூட்டங்களின் ஊக்கமிக்க செயல்பாட்டினை மத்திய அரசு மிகுந்த ஈடு பாட்டோடு செயல்படுத்துவது இதனை வெகுவாக ஊக்கப்படுத்தும்.

நீண்ட பெரும் விவாதப் பொருள்களுக்கிடையே, பொது நலன் கருதி சில பிரச்சினைகளை எடுத்துவைக்க் விரும்புகிறேன். நிதிப்பற்றாக்குறை என்கிற நிலையில் உரங்கள், எரிபொருள்கள், சமையல் எரிவாயு மற்றும் அரிசியின்

விலையைக் கூட்டியதன் மூலம் மாநிலங்கள் மிகப்பெரிய கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நிலைமை, மக்களோடு, அவர்களின் அன்றாட வாழ்வோடு மிக நெருக்கமாக உள்ள மாநிலங்கள் நேர் எதிர்மாறான நடவடிக்கைகளைச் சந்தித்தாக வேண்டிய நிலைமை உள்ளது.

தமிழகத்தில் பொது உணவு விநியோகத் திட்டத்தை மிகவும் சரியாக நடைமுறைப்படுத்துவதால் ஏழை மக்கள் அரிசி வாங்குவதற்கேற்ப விலையைக் கட்டுப்பாடாக வைத்துள்ளோம். எப்படியோ இத்தகைய கொள்கைகளில் மத்திய அரசு நிதிப் பற்றாக்குறைச் சுமையை மாநில அரசுகளுக்கு மாற்றி விட்டது. அரசுப் பணியாளர்களுக்கு, கூடுதல் விலைவாசிப்படி கொடுப்பதன் மூலம் அதிகப் பண வீக்கத்தை உருவாக்கக்கூடிய தன்மையில் தவிர்க்க முடியாத சுமையாக அமைந்துவிட்டது.

கடுமையான நிதிப்பற்றாக்குறை நிலைமையில் வளர்ச்சிப் பணிகளைப் பாதிக்காத அளவிற்கு நாங்கள் பார்த்துக் கொள்ள முயன்ற போதும் மத்திய அரசு பொதுவாக இத்தகைய நிலைமையை உணர்ந்து மாநிலங்களுக்கு உதவிட முன்வர வேண்டும். உணவுப் பொருள்களின் விலையை உயர்த்துவதில் மத்திய அரசு முயற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஏற்கெனவே உணவுப் பொருட்கள் மீது ஏற்பட்ட விலை உயர்வு பிரச்சினையில் தாங்க முடியாத சுமையைத் தாங்கியுள்ள நாங்கள் மேலும் விலை உயர்வுச் சுமையை தாங்குவது இயலாததாகும்.

சிறு சேமிப்பு வசூலில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்குவதை, மீண்டும் கொண்டு வரவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன். இதனால் சிறு சேமிப்பு வசூல் மிகவும் பாதிக்கப்பட்டதோடு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. சிறு சேமிப்பு வசூலில் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதால் 1992-93-ஆம் ஆண்டுத் திட்டத்தை உருவாக்கிய போதிலும் மாநிலத் திட்டங்களுக்குப் பயங்கரமான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் சிறுசேமிப்பு வசூலை அதிகப்படுத்தவும், இதன்மூலம் நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், சிறு சேமிப்பு வசூலுக்கு ஊக்கத்தொகை வழங்குவது குறித்து இந்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென இந்தக் குழு தீர்மானம் போட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியிலிருந்து மாநிலங்களுக்குத் தேவைப்படும் சாதாரண வழிமுறை ஏற்பாடுகள் 1988-ஆம் ஆண்டிலிருந்து ஒரு தேக்க நிலையை அடைந்துவிட்டது என்பதையும் உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதிலிருந்து ஆண்டுத் திட்ட மதிப்பீடுகள் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இவ்வரையறை மாற்றியமைக்கப்படுவதற்கு இதுவே தருணம் ஆகும். நடப்பு நிதியாண்டில் இந்த வரைமுறை 2 மடங்கு ஆக்கவேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த அனைத்து முதலமைச்சர்களும் ஒத்துக்கொள்வீர்கள் என நம்புகிறேன்.

வெளியிலிருந்து நிதி உதவி பெற்ற திட்டங்களுக்கு மைய அரசு நிதி உதவி அளிப்பது மாநிலங்கள் கவனத்தை உடனடியாக ஈர்க்கும் விஷயமாகும்.

மாநில அரசுகள் வெளி நிதி உதவி அளிப்புத் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் மத்திய அரசு உதவ வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. இது ஏற்கெனவே 1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதனை நடப்பு நிதியாண்டில் ஊக்க மாகச் செயல்படுத்த வேண்டும். மத்திய அரசு இந்தப் பிரச்சினைக்குப் புதிய வழிமுறைகளை இதுவரை தரவில்லை. மிகவும் நிதி நெருக்கடியான இந்த ஆண்டில், வெளிக் கடன்களைப் பயன்படுத்துவதில் இவ்விதச் சுணக்கம் ஆழ்ந்த கவலையை அளிப்பதோடு வெளி வட்டாரக் கடன்களைப் பயன் படுத்துவதிலும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதற்கான வழிமுறை களை விரைவாக மத்திய அரசு வெளியிடும் என நம்புகிறேன்.

ஏற்கெனவே ஒத்துக்கொள்ளப்பட்ட சரக்கு வரி விதிப்பு முடிவினை நாடாளுமன்றக் கூட்டத்தில் அறிமுகப்டுத்துவதில் காலதாமதம் செய்வதாகக் கருதுகிறோம். மேலும், இந்தப் பிரச்சினையைத் தேசிய பொது நிதி நிறுவனம் அதன் கொள்கை, செல்லையாக்குழு ஆகியவை காலதாமதத்தை உருவாக்கு வதாக மிக்வும் கவலையோடு கருதுகிறோம். ஏற்கெனவே திரு ராஜீவ்காந்தி அவர்கள் கூட்டிய முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட முடிவினை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பது எனது கருத் தாகும். அடுத்து வருகிற நாடாளுமன்றக் கூட்டத்திலாவது இதனை அறிமுகப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது தொழில் வளர்ச்சிக்குச் சரியான சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கித் தருகின்ற பொறுப்பு மாநில அரசுகளுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரம், சாலை, தண்ணீர், தகவல் தொடர்பு ஆகியவற்றைப் பொதுத்துறைக்கு உருவாக்கித் தருவதற்கு மிகப்பெரிய மூலதனம் தேவைப்படுகிறது. ஆகவே, மாநிலங்களுக்கு அதிக நிதி தேவைப் படுகிறது. கூட்டு நிறுவன வரி முன்பைவிட, கூடுதலாக இருப்பதால் மாநிலங் களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டுமென்பது எனது கோரிக்கையாகும். இந்த வரித்தொகையை மாநிலங்களுக்கிடையே பங்கீடு செய்வதில் வந்து செயல் படுத்த வேண்டுமெனத் தென் மாநிலங்கள் ஒன்று சேர்ந்து கோரிக்கை வைக்குமென நம்புகிறேன்.

தமிழகத்திலும் தென் மாநிலங்களிலும் கடந்த ஆண்டுகளில் மத்திய அரசின் மூலதனம் மிகக் குறைவாகவே இருக்கிறது. பம்பாயில் எரித்து வீணாகக்கூடிய இயற்கை வாயுவைத் தென் மாநிலங்களுக்குக் கொண்டுவர தெற்கு மாநிலங்கள் வேண்டுகோள் வைத்துள்ளன. 8-வது திட்டத்தில், இந்தத் திட்டத்தைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பிரச்சினை மாநில அமைச்சர்களின் குழுவில் எடுத்துரைக்கப்பட்டதே தவிர, வேறு எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. எரிவாயுக் குழாய் அமைக்கத் திட்ட மிட்டபோது, வழக்கமான சந்தேகங்கள் எழுந்தன. ஆனால்,செயலாக்கத்தில் நிற்கவில்லை. மேற்கிலும் வடக்கிலும் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதில் முன்னோடியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதி தேவையாகும். மூலதனத்தோடு ஒப்பிடுகிறபோது நீண்டகால மதிப்பு

மிக்க திட்டங்களாகும். அனைத்து தென் மாநிலங்களும் இந்தத் திட்டங்களுக்கு அதிக மூலதனம் வைத்திருக்க வேண்டும். இந்தத் திட்டத்தில் மூலதனமிட ஒத்துக்கொள்ளப்பட்ட அடிப்படையில் தென் மாநிலங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தினைத் தெரிவிக்கிறேன். அதாவது கொங்கன் ரயில்பாதை போல இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இணைய வேண்டும். இதன் மூலம் தென் மாநிலங்களில் புதிய மின்சார உற்பத்தித் திட்டங்கள், உர உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றைத் தென் பகுதியில் உருவாக்க முடியும். இந்தப் பொதுக்காரியத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். தென் மாநிலங்களை மிகவும் மாற்றியமைக்கக்கூடிய சக்தி வாய்ந்த எதிர்காலத்தை உருவாக்க, தலைவர் அனைத்து உதவியையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

''தீபகற்ப நதி நீர்த் தொகுப்பு'' மத்திய மாநில அரசுகள் முக்கிய அங்கம் வகிக்கின்ற மற்றொரு விஷயமாகிறது. தென் மாநிலங்களில் கடலுக்கு வீணாகப் போகின்ற நீரை எடுத்து, மக்கள் பயன்படும் வகையில் செய்வதே சிறந்தது. கேரள மாநிலத்தோடு மேற்கத்திய நதி மீதான இருதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. நாம் இப்பிரச்சினையைப் பரஸ்பரக் கூட்டுறவு உணர்வுக்கு இணையாக எடுத்துக்கொள்வோம் என நம்புகிறேன். 8-வது ஆண்டுத் திட்டத்தில் தீபகற்ப நதி நீர்த் தொகுப்பிற்காகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் எனக்கு உறுதியளித் திருக்கிறார்கள். வெகு காலத்திற்கு வரைபலகையில் இது இருக்கக்கூடாது என்பது என் கருத்து. அநேகத் தொழில் நுட்ப கேள்விகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையில் மிக விரைவில் திடமான நடைமுறைகள் தேவைப்படு கின்றன.

1992 மே திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியினைச் சென்னையைத் தலைமை யிடமாகக் கொண்டு அமைக்க வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித் திருந்தேன். மாநில நிதி நிலையங்களுக்கு மறு நிதிக் குறியீடு வெட்டப்பட்டிருக் கின்ற சில அவசரமான நிலைமை நினைவுகூரப்படுகிறது. கடன்களை வசூல் செய்வதென்பது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தாலும், திரும்பவும் கடன் வழங்கப்படுவது சுருக்கப்பட்டுள்ளது. இது, ஏற்கெனவே ஒப்புதலளிக் கப்பட்ட புதிய தொழிற்சாலைகளுக்குக் கூட மாநில நிதி நிறுவனங்கள் கடன்களை வழங்க முடியாத நிலையையே குறிக்கிறது.

இத்தகைய மோசமான நடவடிக்கைகள் வளர்ச்சியை வேகப்படுத்தும் எங்களது முயற்சிக்குப் பாதகம் விளையும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள் வீர்கள். ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கிற முடிவினை மறு ஆலோசனை செய்து மறுநிதி இலக்கினை ஏற்கெனவே இருந்த நிலைக்குக் கொண்டு வரக் கேட்டுக் கொள்கிறேன். தென் பிராந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு நடத்துவதற்கு விரைவான நடவடிக்கையை எடுக்க இயலும் என நான் கருதுகிறேன்.

உரங்களின் விலை ஒரு முக்கியமான அவசரமான பிரச்சினையாக நமக்கெல்லாம் இருக்கிறது. பாஸ்பேட், பொட்டாஷ் ஆகிய உரங்களின்

விலை இதற்கு முன்னர் இல்லாத உயர்ந்த விலை, விவசாயிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இதனால் ராபி பருவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பொட்டாஷ் உரத்தின் விலை 3 மடங்கு உயர்ந்திருக்கின்றது. இந்நாட்டில் தமிழகந்தான் பொட்டாஷ் உரத்தை மிக அதிக அளவில் பயன்படுத்துகிறது. உரத்திற்கு கொடுக்கப்பட்ட மானியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்ன கட்டாயம் ஏற்பட்டது என்பதை என்னால் உணர முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விலையைக் குறைப்பதற்காக ஒரு தடவை மானியம் மத்திய அரசு அறிவித்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பாஸ்பேட் பொட்டாஷ் ஆகியவற்றின் விலை அதிக அளவிற்கு உயர்ந்திருக்கிறதென்பது உண்மையிலேயே மன் அதிருப்தியை அளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் உரத்தைப் பயன்படுத்துவது மிகவும் குறைந்திருப்பது மிகவும் ஆழ்ந்த கவலையை உருவாக்கியிருக்கிறது. இதனால் உணவு உற்பத்தி பாதிக்கின்ற நிலை உள்ளது. இப்பிரச்சினைக்குப் பரிட்சார்த்தமான முடிவினை நாம் கண்டாகவேண்டும். விலையின் உயர்வை, படிப்படியாக சில ஆண்டுகளில் உருவாக்கியிருக்கலாம் என்பது என் கருத்து. உரவிலை ஏறியதால் உரங்கள் வாங்குவதற்குகான கடன் வசதி போதுமானதாக இருக்குமா எனக் கருத்தில் கொள்ள வேண்டும்.

உயர்ந்துவிட்ட உர விலையைச் சமாளிக்க, வங்கிகள் மேலும் கடன் உதவி வழங்குவதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மைய அரசு எடுக்க வலியுறுத்தும் மன்றமாக இதை நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மத்திய சாலைநிதி, அதற்கு ஆகின்ற செலவு கூடியிருப்பதை இக்குழுக் கூட்டத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ள விளக்க உரையில் காண முடிகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசு நிதியினைப் பெற்றவுடன் மாநில அரசுக்கு ஒதுக்கப்பட வேண்டிய பங்கு ஒதுக்கவில்லை என்பதாகும்.

சாலைகளைப் பராமரிப்பதும், புதுப்பித்தலும், பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் கையாளுவதும், இத்தருணத்தில், குறிப்பாக, புதிய தொழில் வளர்ச்சி சிறந்த அடிப்படை வசதிகளைப் பொறுத்தே அமையும் பொழுது முக்கியமான பிரச்சினையாகிறது. நிதியிலிருந்து பெறப்பட்ட மாநில அரசுக்குச் சேரவேண்டிய தொகை இன்னும் கிடைக்காத நிலைக்கு திருப்திகரமான தகுந்த பதில் இன்னும் வரவில்லை. இந்த நடப்பு நிதி ஆண்டிலேயே அந்நிதிகள் நமக்குக் கிடைக்க வழி வகுத்தலில் எல்லோருக்கும் உடன்பாடு உண்டு என்பதை நான் நம்புகிறேன்.

தென் பிராந்திய தேசிய நெடுஞ்சாலைக்கு ஒதுக்கிய முதலீடு போதுமானதல்ல என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிழக்கு தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கும் நான் வேண்டியிருக்கின்றேன். தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி அளிக்க வெளி உதவி பெறுவதில் மத்திய அரசு முனையும் என்பதைக் கருத்தில் கொள்கிறேன். தென் பிராந்திய மாநில அரசுக்கு ஒரு கணிசமான நிதி ஒதுக்கீடு கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

தென் மாநில அரசுகள் சுற்றுலாத்தரத்தை உயர்த்த, கூட்டாக இணைந்து செயல்படும் என்ற ஆலோசனைக்கு இசைவு தெரிவிக்கின்றேன். தென்

மாநிலங்கள் சுற்றுலா வளர்ச்சிக்கான பணிகளை இணைந்து செய்யும் கருத்தை நான் ஏற்கிறேன். தொழில் வளர்ச்சிக்கு, சுற்றுலா மிக முக்கியத் துவம் வாய்ந்ததாகும். வேலைவாய்ப்பிற்குச் சுற்றுலா நல்ல இடத்தை வழங்கு கிறது. பழஞ் சிறப்பைத் தென்பகுதி வெளிப்படுத்துவதால் சுற்றுலாப் பயணிகள் நிரம்ப வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. சிறப்புமிகுந்த சுற்றுலாப் பகுதிகளை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டின் தெற்குப் பகுதி சிறப்புடையதென அறிவிப்பு செய்வதன் மூலம் ஒரு தெளிவான வழிமுறையும் அதன் மூலம் மூலதனமிடுகிற ஈடுபாடும் ஏற்படும். நாம் இத்தகைய பொதுவான காரியத் தில் இணையவேண்டும்.

பொது நலம் கருதி சில தகவல்களைத் தர விரும்புகிறேன். இக் கூட்டத் தில் விவாதித்திருப்பதற்காகத் தரப்பட்டிருக்கும் பொருள்களைத் திருப்பிப் பார்க்க விழைகிறேன்.

காபி, தேயிலை ஆகியவற்றிற்குத் தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வரி விகிதங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். போடப்பட்டிருக்கும் வரி மிகக் குறைவானதாகும். தற்சமயம் கேரளம், கர்நாடகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்ட வழியில் சிறிய விவசாயிகளுக்கு வரி விலக்கும் விவசாய வருமான வரியிலிருந்து முற்றிலும் விலக்களித்தும் அதிக அளவில் அதிக வருமானம் பெறும் சாகுபடியாளர்களுக்கு வரி விதித்தும் மாற்றியமைத்திருக்கிறோம். தமிழகத்தில் விதிக்கப்பட்டிருக்கிற வரி மிகக் குறைவானது என்பதால் மீண்டும் மாற்றியமைப்பதற்கு வழியில்லை. நிதிப்பற்றாக்குறை மிகுதியாக உள்ள நிலையிலுள்ள இம்மாநிலத்தில் மேலும் வரிக்குறைப்பு என்பது மிகவும் கஷ்டமானதாகும்.

மாநிலங்களிடையே சாலைப் போக்குவரத்தில் பல பிரச்சினைகள் இருப்பதை விவாதப் பொருளிலே குறிக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் அகில இந்திய சுற்றுலா உரிமங்களில் உள்ள வரி விதிப்பு குறித்த பிரச்சினைகள் கொண்டு செல்லப்பட்டன. மாநிலங்களுக்கிடையே சுற்றுலாப் பயணிகள் வெகு சுலபமாக வந்து போகின்ற வகையில் இப்பிரச்சினையில் பொதுவான கருத்திற்கு வரப் பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான ஒன்றுபட்ட ஒத்துழைப்புத் தன்மை யின் மூலம் இக்கேள்விக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளோம். கர்நாடக அரசுடன் பெங்களூருக்கும், பாண்டிச்சேரிக்கும் தமிழகத்தின் வழியில் சாலை மாற்றத்தை நிர்மாணிப்பதில் எங்களுடைய எண்ணங்கள் ஒத்துப்போகிற நிலைமை உருவாகியுள்ளது. சாலைப் போக்குவரத்துப் பிரச்சினையில் ஒரு விரைவான முடிவிற்கு வரவேண்டுமென்பது எனது கருத்தாகும். இந்த வழியில் கர்நாடக அரசு இரண்டு மாநிலத்திற்கிடையே பஸ் போக்குவரத் தினை அனுமதிப்பதில் தற்போதுள்ள செயல்பாட்டினை ஏற்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் குறித்து விவாதிப்பதற்காக தரப் பட்டிருக்கிற பொருள்களில் அநேக கருத்துகள் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப விழிப்புணர்வை வளர்ப்பதில் இருவேறு கருத்துக்கு இட

மில்லை. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப குழுக்கள் பலமுள்ளதாக ஆக்கப்பட்டு அறிவியல் வளர்ச்சி மிகப்பெரிய செயல்பாடு உள்ளதாக அமைந்திட அக்கருத்தோடு நான் முழுவதும் ஐக்கியமாகிறேன். சென்னையில் அகில இந்திய ஜவகர்லால் நேரு அறிவியல் கண்காட்சியினை விரைவில் நடத்தவிருக்கிறோம்.

அறிவியல் தொழில் நுட்பத்தை விளம்பரப்படுத்துகின்ற வகையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்த விருக்கிறோம். நம்முன் உள்ள நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து நாம் அடிக்கடி எடுத்துரைக்கிற தன்மையில் ஈடுபட வேண்டுமென்பது என் கருத்தாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், மிகப்பெரிய கழிவு நீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, சூரிய மின்சக்தி ஆகியவை குறித்து உடனடி யாக நினைத்துப்பார்க்கிறோம். இதற்கு மூலதனமும் முன்னோடி தொழில் நுட்பமும் மிகப் பெரிய அளவில் தேவைப்படுவதால் இத்தகைய புதிய தொழில் நுட்பங்களை ஏற்பதற்கும் நடத்துவதற்கும் மத்திய அரசு உடனடி யாக முடிவு செய்ய வேண்டியது தேவையாகிறது. நீண்ட விளக்கமான திட்டமான இவற்றை அணுகுவதற்கு மிகவும் உன்னிப்பாக இருக்கிறோம். இதைப் போலவே மற்ற அரசுகளும் ஆர்வம் உள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். பாரதப் பிரதமர் அவர்கள் இத்தகைய எரிசக்தியை உருவாக்கு வதில் மிகுந்த ஆர்வமாக இருப்பதால் மத்திய அரசு தனிச் சிறப்பு நிதியினை வழங்கும் எனக் கருதுகிறேன். மலை வாழுநர் மேம்பாடு குறித்து சில பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன. தமிழகத்தில் மலைவாழுநரிடம் கொத் தடிமை முறை முழுவதுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

கொத்தடிமை முறை மீண்டும் வந்துவிடாமல் தடுக்க, தீவிர கண் காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 500 பேர் வாழக்கூடிய மலை வாழுநர் கூட்டமைப்பு என்கிற வகையில் அமைக்குமாறு எனது கருத்தினைத் தெரிவிக்கிறேன். இதன் மூலமாக மலை வாழுநரின் மேம்பாடுகளை வளர்க்கச் சிறப்புத் திட்டங்களை உருவாக்க முடியும். ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்காக ஒரு சிறப்புக் கூட்டுத் திட்டம் வகுக்கப்பட்டதில் ஒரு முன்னேற்றமான அடி எடுத்து வைக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டில் 11.77 சதவிகிதம் முன்னேற்றம் எட்டியுள்ளதை மகிழ்ச்சிகரமாகக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் மேலும் சிறப்பாகச் செய்வதற்கு முடிவு செய்திருக் கிறோம்.

சந்தனக்கட்டை விஷயத்தில் ஒரு பொதுவான விதிமுறை வகுப்பதற்கும், வனக்குற்றப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கும் பொருளில் குறிக்கப் பட்டிருப்பதை அறிகிறேன். வனக்குற்றங்கள் தொடர்பாக மாநிலங்களுக் கிடையே நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். எங்களைப் பொறுத்தவரை முழு அளவில் ஒத்துழைப்பு தருவோம். பொதுவான சந்தனமர விதிகள் இருப்பதற்குத் தடை ஏதும் இல்லை. வெளி நாட்டிற்குச் சந்தனக்கட்டைகளை ஏற்றுமதி செய்கின்ற கொள்கையில் சில பிரச்சினைகள் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விழைகிறேன். 1992 ஏப்ரல் முதல் தேதி முதல், சந்தன மரங்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் ஒத்துழைப்புடன் தென் மண்டலக் குழு மாநிலங்களுக்கிடையே நல்லுறவுகளை உருவாக்கும் ஒரு, மாதிரி மன்றமாகப் (Model Inter-State Forum) பரிணமிக்கும் என்ற நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

புதிய உறவுகளும், புதிய மன ஒற்றுமைகளும் உலகமெங்கும் பரவி வருகின்ற இந்தத் தருணத்தில், நம்மை நாமே புரிந்துகொண்டு, மக்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான புதிய பாலங்களை நாம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

**10.11.92-ல் சென்னையில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை.**

# சிறுபான்மையினரைப் போன்றே, பெரும்பான்மையினரும், உரிமைகளை அனுபவிக்க, வகை செய்ய வேண்டும்

நமது நாட்டின் கோடிக் கணக்கான மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிக்க முக்கியமான ஒரு கட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இன்று கூடியுள்ளது.

இதுபோன்றதொரு கூட்டத்தில் அயோத்தி பிரச்சினை பற்றி ஒருமித்த கருத்தை நாம் உருவாக்க முடியுமா என்பது கேள்வி அல்ல. ஏனெனில், இந்தப் பிரச்சினை சிக்கலான பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியது.

எந்தவொரு முடிவும் நாட்டின் எதிர் காலத்தின்மீது, அழிக்க முடியாததொரு பாதிப்பை ஏற்படுத்தும்.

இங்கு கூடியுள்ள அனைத்து மதத் தலைவர்களும் தங்களுடைய முதிர்ந்த அறிவாற்றலினால் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, இந்தத் தடையைக் கடந்து, சமுதாயத்தின் உயிரோட்டமாக அமைந்துள்ள அமைதிப் பாதையில் நாட்டை எடுத்துச் செல்ல இயலுமா என்பதே கேள்வி.

இந்த அயோத்திப் பிரச்சினைக்கு அரசியல் நிர்ணயச் சட்டம், சட்டம், வரலாறு, அரசியல், சமூகம், இனம் என்று பல கோணங்கள் உண்டு.

தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, இப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறார்கள் என்று உலகமே உற்றுநோக்கிக் கொண்டுள்ளது. இந்த உண்மையை நன்கு உணர்ந்து, நாட்டின் ஒற்றுமையையும், ஸ்திரத் தன்மையையும் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அமைந்துள்ள கொள்கையின்படி பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்.

1991 நவம்பர் திங்கள் 2-ஆம் நாளன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், அயோத்தி பிரச்சினை பற்றி நான் கூறியதை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

''இதில் அடங்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல், ராமஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினை பற்றி ஒரு முடிவு நாம் எடுத்தோமேயானால், அது நாடு முழுமைக்கும் இந்து-முஸ்லீம் உறவுகளிடையே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்''.

முதலில் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் உள்ள மதச் சார்பற்ற தன்மை, பெரும்பான்மையான மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைச் சிறுபான்மையினரும் அனுபவிக்கும் வகையில், நாம் நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பை நமக்குச் சுமத்துகிறது. அதே நேரத்தில், அரசியல் நிர்ணயச் சட்டம் வழங்கியுள்ள சாதாரண உரிமைகளைக் கூட பெரும்பான்மையினர் அனுபவிக்க

முடியாத வகையில், சிறுபான்மையினர், அரசியல், சரித்திர, சமூக, காரணங் களைச் சொல்லி நடந்து கொள்வது முறையல்ல. இந்த நாட்டில் இந்துக்களே பெரும்பான்மையினர் என்பது அனைவரும் அறிந்ததே. அவர்கள் தங்களு டைய மதக் குறிக்கோள்களை அமைதியான முறையில், அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கொள்கைகளுக்கு மாறாமல் அனுசரிப்பார்களேயானால் அதற்கு நாம் அனுமதி அளித்தாக வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால், சிறுபான்மையினரைப் போன்றே பெரும் பான்மையினரும் உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்யும் பொறுப்பு இந்திய அரசாங்கத்துக்கு உண்டு.

குறிப்பாக, அயோத்தி பிரச்சினை பற்றிச் சொல்ல வேண்டுமானால், உத்திரப்பிரதேச அரசு கையகப்படுத்தியுள்ள நிலத்தில் இந்துக்கள் விரும்பிய படி கட்டடத்தைக் கட்டுவதை அனுமதிக்க வேண்டும்.

உச்சநீதிமன்றம் உத்திரப்பிரதேச அரசுக்கு விடுத்துள்ள ஆணைகளும், உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்குகளும், உத்திரப்பிரதேச அரசு, கையகப்படுத்தியுள்ள நிலத்தில் கர சேவை செய்வதையும் அல்லது வேறு எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதையும் சட்ட ரீதியாகத் தடை செய்கின்றன.

இந்த நிலத்தில் கட்டடம் கட்ட எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்ற நிலையை நாம் ஏற்றுக்கொண்டால், மைய அரசும் உத்திரப்பிரதேச அரசும் இது தொடர்பான சட்டச் சிக்கலைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

ஆனால், இப்பிரச்சினை குறித்து ஒரு முடிவெடுப்பதைத் தள்ளிப்போட ஒரு காரணமாக சட்டச் சிக்கலைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல, எதிர்த்து வரும் மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பைச் சமாளிப்பது அரசாங்கத்திற்கு மென்மேலும் கடினமாகி விடும். எனவே, கரசேவை புரிவதற்கான சுமுகச் சூழ்நிலையை உருவாக்கு வதற்கான முடிவினை இப்பேரவை எடுத்தாக வேண்டும். கரசேவை புரிவதை நீதிமன்றம் அனுமதிக்கக்கோரி அனைத்து முயற்சிகளையும் எடுத்தாக வேண்டும்.

பிரச்சினைக்குரிய நிலத்தின் அடுத்த கேள்வி அப்படியே இருக்கும். இது தொடர்பான இரண்டு பிரிவினரையும் கூட்டி, அவர்களுடைய வாதங்களுக்கு ஆதாரங்களை அவர்கள் கொணர பிரதமர் முயற்சிகளை எடுத்து வருகிறார். இருப்பினும், இம்முயற்சிகள் பிரச்சினையைத் தீர்க்காது என்றே நான் கருதுகிறேன். பிரதமரும் இதை அறிவார். எனவே, பிரச்சினைக்குரிய நிலத்தில் கோவில் இருந்தது என்ற அடிப்படைப் பிரச்சினையை உச்சநீதி மன்றத்திற்கு அனுப்பலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. இதனால் எந்தப் பயனும் இருக்காதென்றே நான் கருதுகிறேன். வரலாற்றை நிரூபிக் கவோ, பொய்ப்பிக்கவோ நாம் ஏன் முயற்சிக்க வேண்டும்? வரலாற்று உண்மைகளை முடிவு செய்ய உச்சநீதிமன்றத்தை நாம் அழைக்க வேண்டுமா? இந்த வகையில் வரலாற்றைத் திருப்பி எழுதுவதில் நாம் வெற்றி பெறு

வோமா? அல்லது, நம் நாட்டின் நலனுக்கு இது தேவையா? இந்தக் கேள்விகள் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

மசூதியைப் பற்றிய பிரச்சினையை அப்படியே விட்டுவிட வேண்டுமென் பதுதான் என்னுடைய ஆய்ந்த முடிவாகும். 1528-க்கு முன்பு இங்கு ஒரு கோவில் இருந்ததா என ஆராய்ந்து பல பிரச்சினைகளை கிளப்பத் தேவை யில்லை.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழவும் நம் தலைவர்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் உணர்வுகளை நன்கு புரிந்து கொண்டு சமுதாய அமைதியையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்த அரசியல் நிர்ணயச் சட்டமும், இந்திய மக்களின் அறிவுக் கூர்மையும் வழி வகுத்துள்ளது.

சுருங்கக் கூறின், என்னுடைய கோரிக்கை இதுதான். உத்திரப்பிரதேச அரசு கையகப்படுத்திய நிலத்தில் கரசேவை புரிந்திடத் தகுந்த சூழ்நிலையை உருவாக்குங்கள். வரலாற்றுக் கேள்விகளுக்குள் செல்லாமல், மசூதியை அப்படியே விட்டுவிடுங்கள். இந்நாட்டின் குடிமக்களை அமைதியாக வாழ அனுமதியுங்கள்.

அரசியல் நிர்ணய சட்டத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி திரு. வி.பி. சிங் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். உயர்நீதிமன்றத் தின் உத்தரவை ஒரு மாநில அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டால், அரசியல் நிர்ணயச் சட்டப்படி அரசாங்கம் நடைபெறவில்லை என்று கருதி மாநில அரசைக் கலைத்துவிட வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள்.

நீதிமன்றங்களின் உத்தரவிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்கிற பொதுவிதியைக் குறிப்பிட்ட சம்பவங்களுக்கு மட்டுமே வலியுறுத்தல் என்பது சரியல்ல. உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட, காவிரி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றம் ஒரு இடைக்கால உத்தரவைப் பிறப்பித்த போது கர்நாடக அரசு அதை ஏற்கவில்லை. மைய அரசின் ஆலோசனை பேரில் குடியரசுத் தலைவர் இப்பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தின் ஆலோசனை யைக் கேட்டார். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு சரியானதுதான் என உச்சநீதிமன்றம் தன்னுடைய கருத்தைத் தெரிவித்தது. ஒன்றரை ஆண்டு காலம் கழிந்த பின்பும் கர்நாடக அரசு இந்த உத்தரவை அமல்படுத்தவில்லை. நீதித்துறையை கர்நாடக அரசு அவமதித்து விட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழு இதை கவனத்தில் கொள்ளவில்லை. அரசியல் நிர்ணயச் சட்டப்படி நடைபெறாததைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றவில்லை. தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவோ, இந்திய அரசோ, கர்நாடக அரசைக் கவிழ்ப் போம் என்று பயமுறுத்தவில்லை. எனவே, உத்திரப்பிரதேச அரசைக் கவிழ்ப்போம் என்று பயமுறுத்துவது சரியல்ல, என்றே நான் கருதுகின்றேன்.

பாரதிய ஜனதா கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இந்தக் கூட்டத் தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தது வருத்தத்துக்குரியதாகும். அனைத்துக் கட்சிகளும், அனைத்து உறுப்பினர்களும் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

பாரதீய ஜனதா கட்சி இங்கே தனிமைப்படுத்தப்படும் என்று பயந்ததைப் பற்றி திரு. இந்திரஜித் குப்தா இங்கே குறிப்பிட்டார். அது உண்மைதான். அவர்கள் இந்தக் கூட்டத்தில் தனிமைப் படுத்தப்படலாம். ஆனால், வெளியே, மக்களிடையே அயோத்தியாவில் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்ற ஆசை, இந்நாட்டின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கின்றது.

மக்களின் கருத்தை நாம் மதித்தாக வேண்டும். மக்களின் கருத்தை, அதுவும் அந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் கருத்தை அலட்சியப்படுத்தக் கூடாது- அலட்சியப்படுத்திட முடியாது.

இக்கூட்டத்தில், என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற வாய்ப்பளித் தமைக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**புதுடெல்லியில் 23.11.92 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.**

# தமிழக மக்கள் ஒவ்வொருவரும் "நல்லா இருக்கணும்" என்பதுதான் எனது ஆசை

மதுப்பழக்கம் ஒருவனுடைய மனிதத் தன்மையை அழித்து, அவனை மிருகமாக மாற்றி விடுகிறது என்றார் மகாத்மா காந்தி அவர்கள். மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கெடுப்பது மது என்றார், தந்தை பெரியார். மதியை மயக்கும் குடிப்பழக்கத்தை, சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டும் என்பது தான், பெரியோர்கள் அனைவரின் ஒருமித்த கருத்து.

குடியின் கொடுமை, ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி, அனைவரையும் அழிக்கும் அரக்கத்தனம் கொண்டது. குடிப்பழக்கத்திற்கு அடிமைப் பட்டவர்கள், முதலில் தம்மை அழித்துக் கொள்கிறார்கள். அடுத்து அவர்களைச் சார்ந்துள்ளவர்களை, நிலையான பாதிப்பிற்கு ஆட்படுத்துகிறார்கள். குறிப்பாக, மனைவி மக்களின் நலன், முழுமையாகப் புறக்கணிக்கப் படுவதோடு, அவர்களின் வாழ்க்கை மட்டுமல்ல, அவர்களது சந்ததியினரின் மன நலத்திற்கும், பெரும் பாதிப்பையும் தீங்கினையும் விளைவிக்கிறார்கள். இப்படி, இவ்வளவு தீமைகளை விளைவிக்கக் கூடிய மதுப் பழக்கம், தேவை தானா? பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும், நியாயத்தோடு எழ வேண்டிய நேர்மையான கேள்வி இது.

சாதாரண மனிதனை வறுமையில் வாட்டி, ஏழ்மையில் ஆழ்த்தி, அவனை வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுத்து வருகின்ற மதுவிற்கு, சாவு மணி அடிப்பது, நமது சமுதாயத்தின் தலையாய கடமை. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர, அரசு எத்தனை உதவிகள் செய்தாலும், அவற்றின் முழுப்பயனும் அவர்களுக்குப் போய்ச் சேராமல், அவர்களைத் தொடர்ந்து வறுமையில் ஆழ்த்தும் வலிமை படைத்த, மது அரக்கனை ஒழிக்கவும், அவர்கள் மதுப் பழக்கத்தை விட்டொழிக்கவும் தேவையான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதே, சரியான மார்க்கமாகும்.

சட்டத்தை மட்டுமே வைத்துக் கொண்டு, சமுதாயத்தில் குடிப்பழக்கத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்பது, நாம் அனுபவபூர்வமாக அறிந்த உண்மை. எனவேதான், குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டவர்களின் மனமாற்றத்திற்கு உதவுகிற வகையில் தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும், என்ற எண்ணம் உருவானது. அதன் அடிப்படையில்தான், குடியின் தீமையை வலியுறுத்த, நல்ல திரைப்படம் ஒன்றை, வணிக ரீதியில் தயாரித்து, அதைத் தமிழகம் எங்கும் திரையிட்டு, மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று, நான் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும், மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழு முடிவெடுத்தது.

தற்போது அந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு, குடிப் பழக்கத்திற்கு அடிமையானவர்களிடையே ஒரு மனமாற்றத்தை உண்டாக்கவும்,

மதுவை நாட எத்தனித்து, எப்போதும் மனக்கிலேசத்தில் தத்தளிக்கும் இளைஞர்களை நல்வழிப்படுத்தவும், ஒரு முழு முதல் முயற்சியாகத்தான், 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற இந்தத் திரைப்படம், தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் நாளை முதல் வெளியிடப்படுகிறது.

இந்தத் திரைப்படத்திற்கு நான் ஏன் இந்தப் பெயரைச் சூட்டினேன் என்றால், தமிழக மக்கள் ஒவ்வொருவரும் 'நல்லா இருக்கணும்' என்பது தான் என்னுடைய ஆசை, இதுவே எங்கள் அரசின் குறிக்கோள், இலட்சியம், சிந்தனை ஆகும். ஆகவேதான், தமிழக மக்களின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக, எல்லா முயற்சிகளையும் எங்கள் அரசு, தொய் வில்லாமல் தொடர்ந்து எடுத்து வருகிறது.

காலம் காலமாக இருந்து வரும் ஒரு சமூகத் தீமையைக் களைய, மக்களிடையே இதைப்பற்றி ஒரு புதிய கருத்தைச் சொல்ல, ஒரு திரைப் படத்திற்கு வலுவான கதை, கதைக்கேற்ற பாத்திரப்படைப்பு, உயிரோட்ட முள்ள வசனம், கருத்துமிக்க பாடல்கள், நிச்சயம் தேவை. 'நீங்க நல்லா இருக்கணும்' திரைப்படத்தில், அத்தனை அம்சங்களும் நிறைந்துள்ளதாக நான் கருதுகிறேன்.

சமுதாயப் பார்வையோடு, குடிப்பழக்கத்தை எதிர்க்கும் ஒரு சீர்திருத்தக் கருத்தை, வலியுறுத்தும் படமாக இருந்தாலும், குறிப்பாக, குடிப்பழக்கம் உள்ளவனாக, அவனது மனைவியாக, உறவினர்களாக நடிப்பதற்கு, நடிகர் நடிகையர்களே தயங்குகிறார்கள். தன்னை ஒரு குடிகாரன் என்று, தன் நிழல் கூடச் சொல்லிவிடக் கூடாது என்று, எந்த ஒரு மனிதனும் விரும்புவது இயற்கை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழக அரசுக்காக, அரசின் நல்ல நோக்கத் திற்காக, சமுதாயத்தில் நிலவி வரும் ஒரு கொடுமையைக் களைய, தம்மால் இயன்ற பணியை ஆற்ற விழைந்துள்ள, இந்தத் திரைப்படத்தில் நடித்த, நடிகர், நடிகையர், கலைஞர்கள், திரைத் தொழில் நிபுணர்கள் ஆகியோருக் கும், இந்தப் படத்தை ஒரு துணிச்சலான முயற்சியாக எடுத்துக்கொண்டு, திரைப்படத்தைத் திறம்பட முடித்துக் கொடுத்துள்ள ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தினருக்கும், என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்தத் திரைப்படம் மக்கள் மனதைத் தொட்டு, மதுவிலக்குக் கொள்கை, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகின்றேன். தமிழக அரசின் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு, இந்தத் திரைப்படம், மேலும் வலிமை சேர்க்கும் என்பதிலும் ஐயமில்லை.

இந்தத் திரைப்படத்திற்குக் 'கேளிக்கை வரி' விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசுக்காக ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், சிக்கனமாகச் செலவு செய்து, இந்தத் திரைப்படத்தைத் தயாரித்ததோடு மட்டுமன்றி, 30 பிரிண்டுகள்

எடுப்பதற்கான செலவையும், இந்தத் திரைப்படத்தை விளம்பரப்படுத்துவதற்கான செல்வையும் சேர்த்து, மொத்தம் 88 இலட்சம் ரூபாயில் முடித்துள்ளார்கள் என்பதை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜி.வி. பிலிம்ஸ் நிறுவனத்தார், தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில், இந்தத் திரைப்படத்தை, தங்களது சொந்தப் பொறுப்பில் வெளியிடவும் முன் வந்துள்ளார்கள். படம் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள், இதற்காக அரசு செலவு செய்த 35 இலட்சம் ரூபாயும் அரசிடம் திருப்பிக் கொடுக்கப்படும், என்ற நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்கள். இந்தச் செய்தி நிதி அமைச்சர் அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்தத் திரைப்படம் முக்கியமாக, மக்களிடையே ஒரு மாபெரும் மன மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வசூலிலும் ஒரு சாதனையை நிகழ்த்த வேண்டும் என்ற என் விருப்பத்தினை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் திரைப்படம் படைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவு பெறும் வகையில், தமிழக மக்கள் இதனை கண்டுகளித்துப் பயன்பெற வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

இந்தத் திரைப்படம் வெற்றிகரமாக நூறு நாட்கள் ஓடி, நூறாவது நாள் விழாவில் நான் பங்கு கொண்டு இப்படத்தின் வெற்றிக்கு உழைத்த அனைத்து கலைஞர்களுக்கும் என் கரங்களால் வெற்றிக் கேடயங்களை வழங்க வேண்டும் என்னும் என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

26.11.92-மாலை, சென்னை கலைவாணர் அரங்கில் ''நீங்க நல்லா இருக்கணும்'' என்ற மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்பட வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை.

# வீரத்துறவி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர் என்னும் ஞான சூரியன் இந்தியாவின் கிழக்குத் திசையிலிருந்து, தெற்கு நோக்கி பாதயாத்திரை வந்து, இருட்டில் சிக்கித் தவித்த பாரதத்திற்கு, ஞான வழிகாட்டிய புனித நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடப்படும் தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழாவில் கலந்து கொள்ள, வாய்ப்பளித்த விழாக் குழுவினருக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்!

வேதாந்தியாக, வீரத்துறவியாக, சமரச மெய்ஞ்ஞானியாக, தேசப்பற்றாள ராக, போராட்ட வீரராக, ஏழைப்பங்காளராக - இப்படி எத்தனை எத் தனையோ பரிமாணங்களைக் கொண்ட அபூர்வப் பிறவி சுவாமி விவேகானந்தர்.

அன்று கல்கத்தாவில் அவர் தொடங்கிய பாதயாத்திரை, இந்த கன்னியா குமரியில்தான் முடிவடைந்தது. அந்தப் பாதயாத்திரையின் நூற்றாண்டு விழா, இன்று இங்கே, சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படுகிறது.

இந்தியா கன்னியாகுமரியில் முடிவடைகிறது என்பது, பூகோள ரீதியான உண்மை. ஆனால், விவேகானந்தரின் புதிய இந்தியா - நவ இந்தியா - ஒரு பொற்கால இந்தியா, இங்கேதான் தொடங்கியது என்பது, சரித்திரம் நமக்கு வழங்கிய கொடை.

இங்கு மூன்று கடல்கள் மட்டும் சந்திக்கவில்லை. உலக நாடுகளிலே வாழ்ந்துவரும், பல்வேறு இன, மதம் தழுவிய மக்கள், தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் காட்சியையும், இங்கே நாம் காணலாம். இது உலக ஒருமைப் பாட்டை அனைவருக்கும் உணர்த்தும் ஒப்பற்ற மண்.

அண்மைக் காலமாக, நாட்டில் நாம் காணும் ரணங்கள், மேகமூட்டங் களைப் போல இந்த உண்மையை மறைக்கலாம். ஆனால், இருளைக் கிழித்து வரும் முழு மதியைப் போல, சமயச் சார்பற்ற இந்தியா வெளிப்படும் என்பதை, உலகிற்குச் சொல்லுகிற நல்ல நிகழ்ச்சியாக, இந்த நிகழ்ச்சி நமக்கு அமைந்துள்ளது.

'இந்திய தேசம் பெரியது. இது ஞானத்தின் களஞ்சியம். ஆன்மீகத்தின் விளை நிலம்', என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த உண்மை தெரியாதவர்களுக்குள்ளேதான் குழப்பம். இந்த நம்பிக்கையில் எழுந்தது தான் அவரது நாட்டுப்பற்று. உன்னத இமயம் போல், ஓங்கி நிற்கும் அவரது நாட்டுப்பற்று தான், கோடானு கோடி பாரத வீரர்களை உருவாக்கியது என்பதை எண்ணிப்பார்த்து, நான் பெருமைப் படுகிறேன்.

இந்த மண்ணில், எந்தப் பகுதியில் நின்றாலும், இந்தப் பூமியில், எந்தப் பகுதியில் நின்றாலும், அவர் தன்னை அசைக்க முடியாத நாட்டுப்பற்றுள்ள இந்தியன் என்றே கருதினார்.

அன்று Chicago- விலே சிங்கமென அவர் கர்ஜித்த போது, இந்தியாவின் ஆத்மாவின் முழக்கமாக, அது எட்டுத் திசைகளிலும் கேட்டது. அவருடைய நாட்டுப்பற்று, குறுகிய மனப்பான்மைகளுக்கும், வகுப்பு வாதங்களுக்கும், அப்பாற்பட்டு விளங்கியது என்பது, நடுநிலையாளர்களுக்கு நன்றாகவே தெரியும். தனி ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ, மற்ற சமூகத்தினரிடம் இருந்து, விலகி நின்று வாழ முடியாது என்று, மனித சமூகம் முழுவதற்கும், அவர் உரத்த குரலில் எடுத்துக் கூறியவர்.

இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், 'உன் கடமை ஏழ்மையையும் அறியாமையையும் ஒழிப்பதே', என்று எடுத்துக் கூறியவர் அவர்.

அந்த மகத்தான இந்தியரின், மனிதாபிமானியின், மாமனிதரின் இதயத்தைக் கவர்ந்த மாநிலம், தமிழகம். அவர் அமெரிக்கா செல்வதற்கான ஊக்கம் வழங்கப்பட்ட இடம், தமிழகம். அதற்கு உதவிய பெருமகனார், இராமநாதபுரம் ராஜா என்பதையும், Chicago- வில் வெற்றிக்கொடி நாட்டி அவர் திரும்பியபோது, அவரை வரவேற்றுச் சிறப்பித்தவரும் அவர்தான் என்பதையும், இன்று எண்ணிப் பார்க்கும்போது, நான் பூரித்துப் போகிறேன். விவேகானந்தரின் சிறப்பை, முதலில் முழுவதும் உணர்ந்தது, தமிழகம்தான் என்பதையும் எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்!

எந்தச் சீர்திருத்தக் கருத்துக்கும், எந்த ஒப்பரவு மனப்பான்மைக்கும், உற்ற இடம் தமிழகம் தான். மத மாச்சரியங்களும், ஜாதிப் பிணக்குகளும், வகுப்புக் கலவரங்களும், இல்லாத சமரச பூமி, தமிழகம்! இது அமைதிப் பூஞ்சோலை!

விவேகானந்தரின் பாதயாத்திரை முடிந்த இந்த இடத்தில், நமது இலட்சிய யாத்திரை - இந்திய தேசத்தின் யாத்திரை - நவ பாரதத்தின் யாத்திரை - இன்று தொடங்க வேண்டும்.

3 நாட்கள் விவேகானந்தர் தவமிருந்த, தமிழகத்திலுள்ள இந்தப் பாறை, ஒரு நினைவுச் சின்னம் மட்டுமல்ல; இன்றும் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும், ஒரு ஆன்மீகக் கலங்கரை விளக்கம்!

சமயச்சார்பற்ற பாரதம் என்னும் தத்துவத்தை நிலைநாட்ட, ஒன்றுபட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்த, தமிழக மண்தான் ஏற்றது என்பது, வரலாறு உணர்த்துகின்ற போதனை!

அமைதி நிறைந்த ஆன்மீகச் சிறப்புமிக்க, சகல சமயங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கிற, ஒப்பற்ற பாரதத்தை உருவாக்க வேண்டும் என்றுதான், சுவாமி விவேகானந்தர் இங்கே தவமிருந்தார். இங்கே இருக்கிற அன்னை கன்னியாகுமரி, நித்தம் தவம் செய்வதும் அதற்காகத்தான்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் நெஞ்சத் தவமும், தங்கத் தமிழ் மக்களது அன்புத் தவமும், அதுதான். விவேகானந்தரின் பாதயாத்திரை

முடிவடைந்த இந்த இடத்தில், இந்தியாவின் ஒற்றுமை யாத்திரையை, நவ பாரதத்தின் இலட்சிய யாத்திரையைத் தொடங்கி, நாம் வெற்றி வாகை சூட வேண்டும், என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**28.12.92-ல், கன்னியாகுமரியில், தேசிய விழிப்புணர்வு ஆண்டுத் தொடக்க விழா மற்றும் விவேகானந்தரின் பாதயாத்திரை நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.**

# ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், இந்திய மண்ணில் நம்மால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவுச் சின்னம்

இன்று சர்வதேச அதிசயமாகக் கட்டி முடித்து, திறக்கப்பட்டுள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கம், இந்திய மண்ணில் நம்மால் படைக்கப்பட்ட ஒரு மாபெரும் நினைவுச் சின்னம். இன்று நாம் அடையும் இந்த மகிழ்ச்சி, இந்தப் பெருமிதம், எத்தனை நியாயமானது என்பதற்கு, இதை இன்று காணுகின்ற நீங்களும், நாளை காண வரப்போகின்ற, கோடிக் கணக்கான எதிர்காலத் தலைமுறையினருமே, சத்திய சாட்சிகள்!

விளையாட்டரங்குகளின் அரசியாகத் திகழும் இந்த அரங்கம், நவ இந்தியாவின் சிற்பியான ஜவகர்லால் நேரு அவர்களுக்குத் தமிழகம் வழங்கும் அன்புக் காணிக்கை, தேசிய ஒருமைப்பாட்டுக்கு நம் மாநிலம் செலுத்தும் மாபெரும் மரியாதை.

எங்கே உடம்பு வலிமையோடு இருக்கிறதோ, அங்கு தான் உள்ளம் வலிமையோடிருக்கும், உயிர் ஆற்றலோடு உலா வரும் என்பது, நடைமுறை உண்மை. பண்டைத் தமிழகம், வீர விளையாட்டுகளின் தாயகம். வீரமும், வித்தகமும் அன்றைய தமிழ் இளைஞர்களின் உயிர் மூச்சு. பணியும் வியைாட்டும், செயல்திறனை அடிப்படையாகக் கொண்டவை என்றாலும், விளையாட்டிலே ஈர்ப்பும் இன்பமும் இயல்பாக இருப்பதால், வேலையிலே இருக்கின்ற சோர்வு, விளையாட்டிலே தெரிவது இல்லை. 'உடலினை உறுதி செய்' என்றார் மகாகவி பாரதி. உடலினை உறுதி செய்ய களம் தேவை; கருவிகள் தேவை; வாய்ப்பும் வசதியும் தேவை. அவற்றை இன்றைய தலைமுறையினருக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் வழங்கத்தான், இந்த வரலாற்றுப் புகழ்மிகு அரங்கம் நிர்மாணிக்கப்பட்டு, இன்று திறப்பு விழா, காண்கிறது.

விளையாட்டுத் துறைக்குப் புத்துணர்ச்சியூட்டும் புதிய முயற்சிக்கு, நடத்தப்பட்ட கால்கோள் நிகழ்ச்சியின் நிறைவே இந்த அரங்கம். தமிழகத்தின் பெருமைக்காகவும், இந்தியாவின் கீர்த்திக்காகவும், உலக நாடுகளின் பாராட்டு களுக்காகவும் மட்டுமே, இது உருவாக்கப்பட்டதல்ல. விளையாட்டுக் கலையை, அறிவியல் முயற்சியாக ஆக்குவதற்காக, கட்டி முடிக்கப்பட்ட அடயாளச் சின்னம் இது.

சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பெயரில் இருந்த, பழைய விளையாட்டு அரங்கம், இன்று முற்றிலும் மாற்றப்பட்டு, ஜவகர்லால் நேரு விளை யாட்டரங்கம் என்னும் பெயரில், நவீன கட்டடக் கலையின் அற்புதமாக எழுந்து நிற்கிறது. 40 கோடி ரூபாய் செலவிலே உருவாக்கப்பட்டிருக்கிற, இந்த அரங்கத்தின் நிர்மாணப் பணிக்கு, மத்திய அரசு 2 கோடி ரூபாய் உதவி அளித்தது. தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர்கள், கொடை

வள்ளல்கள், விளையாட்டு ஆர்வலர்கள் எல்லாம், தமிழ்நாடு விளையாட்டுக் கழகத்தின், இந்த விழுமிய முயற்சிக்கு, உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும், தங்கள் பங்கினைப் பாங்குற ஆற்றியிருக்கிறார்கள்.

எந்தவித அசம்பாவிதங்களும் நேராமல், இந்த அரங்கம், 7½ மாதத்தில் எழுந்துள்ளது என்பது, நமக்கு இரட்டிப்புப் பெருமிதத்தை வழங்குகிறது. இந்த அரங்கிற்கான திட்டம், வடிவமைப்பு, பொறியியல் நுட்பம், நிர்வாகம், செயல்பாடு இவை அனைத்தும் விரைவுக்கும், தீவிர வேகத்திற்கும், அசையாத எடுத்துக்காட்டுகள். இந்த மகத்தான அரங்கைப் பற்றி, மகிழத்தக்க இன்னொரு செய்தியும் உண்டு. இது முற்றிலும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்ட உன்னத அரங்கம். இன்று வரை விஞ்ஞானம் தந்த அனைத்து உத்திகளும், இதில் பயன்படுத்தப் பட்டிருப்பதால், புதுமைகளின் புதுமையாக இந்த அரங்கம் பொலிவதை, நீங்கள் பார்க்கிறீர்கள்.

எனவேதான், இந்த அரங்கைத் தொடங்கி வைக்க, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைப் பாசத்துடன் அழைத்தோம். 27.12.1992 அன்று, மாண்புமிகு பிரதமர் அவர்கள் கன்னியாகுமரிக்கு வந்தபோது, இந்த விழாவுக்கு வருகைதந்து, இந்த விளையாட்டரங்கைத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். உடனே அவர்கள் ஒப்புக் கொண்டது மட்டுமல்லாமல், இந்த நிகழ்ச்சிக்காகப் பல்வேறு பணி களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, வந்திருந்து, விளையாட்டரங்கைத் திறந்து வைத்து நம்மையும் தமிழகத்தையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறார்கள். பிரதமர் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.

இந்த இனிய விழாவிற்குத் தலைமை ஏற்று சிறப்பித்துக் கொடுத்துள்ள, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பீஷ்ம நாராயண்சிங் அவர்களுக்கும், என் நன்றி. இந்த நல்ல விழாவில், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள், விழா மலர் வெளியிடுவது, மலருக்கும், இந்த மகிழ்ச்சியான விழாவிற்கும் சிறப்பூட்டும் செயல். அவர் களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்தச் சிறப்பு விழாவிலேயே, இன்னொரு சிறப்பும் அரங்கேற்றமாகிறது. அதுதான் ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பைக்கான, 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி! இதற்கு முன்னர் இரண்டு முறை இசைவு கேட்கப்பட்ட போதும், இட வசதி இல்லாததால், தமிழகம் அந்த வாய்ப்பை இழந்தது.

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன், இந்தப் போட்டிகளை நடத்த இசைவு கேட்கப்பட்ட போது, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தமிழகத்தில் இம்முறை தவறாது, இந்த சர்வதேசப் போட்டி நடத்தப்பட வேண்டும் என்று, தைரியமாகத் தமிழக மக்களை நம்பி, இத்திட்டத்திற்கு இசைவளித்தேன். அதனை முழுமையாக நிறைவேற்றும் வகையில், ஒப்புதல் அளித்த 7½ மாதங்களில், இந்த விளையாட்டரங்கம் எழுந்து நின்று, கால்பந்தாட்டப் போட்டிக்கு, உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருப்பதைக் காணும் பொழுது, மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இந்த விளையாட்டு அரங்கத்தைக் கட்டுகிற இமாலயப் பணியில், எனக்குத் துணை நின்றவர்கள் பல பேர். இந்த முயற்சியை, தங்களது மூச்சாகக் கருதி, உழைத்தவர்கள் நிறைய பேர் உண்டு. அவர்கள் அனைவரையும் இன்று நினைவுகூர்வது, எனது தலையாய கடமையாகும். அவர்களுடன் சேர்ந்து இந்த மாபெரும் வெற்றி தரும் மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும், பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நன்றி கூற விழைகிறேன்.

முதலில், விபத்தே இல்லாமல், உயிர்ச்சேதமின்றி, இந்தச் சீர்மிகு அரங்கை உருவாக்கிக் கொடுத்த லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்திற்கும், வடிவமைத்துக் கொடுத்த கட்டடக் கலை நிபுணர் திரு. சி.என். ராகவேந்திரா அவர்களுக்கும், இதை உருவாக்கக் காரணமாய் இருந்த 5,000 கட்டடத் தொழிலாளர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் இதயத்தின் விருப்பத்தை எடுத்துரைத்த உடன், தேனீக்களாகத் திரிந்து பறந்து பணியாற்றி, என் விருப்பத்திற்குச் செயல் வடிவம் தந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும், குறிப்பாக அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களுக்கும், அழகான விழா மலரை குறுகிய காலத்தில் சிறப்புறத் தயாரித்துக் கொடுத்த அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும், மற்றும் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன் அவர்களுக்கும், தமிழ்நாடு கால்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. சி.ஆர். விஸ்வநாதன் அவர்களுக்கும், அரசுத்துறை அலுவலர்களுக்கும், என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அன்பான அழைப்பினை ஏற்று, அற்புதக் கலை நிகழ்ச்சிகளை இந்தக் குறுகிய காலத்தில், இடைவிடாது தீவிர பயிற்சிகள் மேற்கொண்டு, இன்று மிகச் சிறப்பாக நடத்திக்காட்ட உள்ள, பல்லாயிரம் பள்ளி மாணவ மாணவிகளுக்கும், காவல் துறையினருக்கும், மற்றும் இரயில்வே பாதுகாப்புப் படையினருக்கும், இசை அமைத்துக் கொடுத்துள்ள திரு. சங்கர்-கணேஷ் அவர்களுக்கும், பள்ளிக் குழந்தைகளை பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்து, அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

சமாதானம், சகவாழ்வு ஆகிய தத்துவங்கள், இந்த விளையாட்டரங்கிலே விளைவாகி, மனித சமுதாயம் முழுவதற்கும், மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்கும், என்று நம்புகிறேன்.

இன்று பெருந்திரளாக வந்து, உங்கள் அன்புச் சகோதரியின் எந்தச் செயலுக்கும் உடனிருந்து, ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் உங்கள் அனைவருக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**18.1.93-ல் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத் திறப்பு விழாவில் ஆற்றிய உரை.**

# திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

இந்த நன்னாள் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு பொன்னாள்! விருதுகளும் பரிசுகளும் பெறுகின்ற பெருமக்களுக்கு எத்தனை மகிழ்ச்சியோ, அதைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி - அவற்றை வழங்குகின்ற எனக்கு! காரணம் கலை அரசோச்சிக் கொண்டிருக்கின்ற காலம் இது! எனவேதான், திரை உலகப் பெருமக்களுக்கு, அரசு பரிசும், விருதும் வழங்குவது வழக்கம் என்றாலும், இந்த விழாவை உணர்ச்சிபூர்வமாக, ஒப்பற்ற விழாவாக நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன்.

எனது தாய்வீடு என நான் பெருமையோடு கருதுகின்ற திரைப்படத் துறையினருக்கு, தமிழக அரசின் 1990 மற்றும் 1991- ஆம் ஆண்டிற்கான, மாநில 'திரைப்பட விருதுகள்' வழங்கும் விழா நடந்தேறிக் கொண்டிருக் கிறது. தமிழ்த் திரைப்படத் துறையைச் சேர்ந்த நடிக, நடிகையருக்கு, தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, மிகுந்த ஊக்கத்தினையும், பெருமிதத்தினை யும் கொடுக்கக்கூடிய தனிச்சிறப்பு கொண்டது தமிழக அரசு வழங்கும் திரைப்பட விருதுகள். ஏனென்றால், மாநில அரசு விருது வழங்குகிறது என்றால் அதனைப் பெறும் கலைஞர்கள் தமிழக மக்கள் அனைவராலுமே கவுரவிக்கப்படுகின்றார்கள் என்பது தான் பொருள்.

கலை உலகில் ஈடுபட்டிருப்போர் பெரிதும் எதிர்நோக்குவது, வெறும் பணமும், பொருளும் ஈட்டுவது மட்டுமல்ல. அவர்கள் தேடும் செல்வம் ஓரளவு தான் திருப்தியையும், மகிழ்ச்சியையும் அளிக்கும். ஆனால், உண்மை யான வெற்றியால் தங்களது கலைப்படைப்புகள், மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு, பாராட்டினைப் பெறும்போதுதான், அதனை கிடைத்தற்கரிய செல்வமாகத் திரை உலகக் கலைஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் மாநிலத் 'திரைப்பட விருதுகள்' பெறும் ஒவ்வொரு வரும், அவர்கள் நடிகர்களானாலும் சரி, நடிகையரானாலும் சரி, அல்லது தொழில்நுட்ப வல்லுநர்களானாலும் சரி, இந்த விருதுகளை, தங்களது கலைத் திறமைகளுக்கு அளிக்கப்படும் மாபெரும் அங்கீகாரமாகக் கருது கிறார்கள். இதனைப் பெறும்பொழுது பெருமை கொள்கிறார்கள். இத் துறையில் மேலும் பல சாதனைகள் புரிய ஊக்குவிக்கும் தூண்டுகோலாக இதை நம்புகிறார்கள். அதனால்தான், இந்தத் திரைப்பட விருதுகள் தமக்குக் கிடைக்க வேண்டுமென்று, தமிழ்த் திரைப்படத் துறையைச் சார்ந்த அனை வருமே பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். விரும்புகிறார்கள்.

**அந்த வகையில் இன்று நீங்கள் பெறுகிற ஒவ்வொரு பரிசிலும், உங்கள் சகோதரியின் பாசமும் இழையோடியிருக்கிறது**

திரைப்படத்துறை என்பதைவிட, திரை உலகம் என்பதே பொருத்த மாகும். இது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்ற உலகம், அவர்களுக்குக் கரை காணாத களிப்பையும் அளிக்கும் உலகம்! உழைத்துக் களைத்த ஏழை மக்களின் சோர்வினைப் போக்கும் அற்புத மருந்தை வழங்குகின்ற உலகம்! நமக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் வழங்குவது மட்டுமல்ல வெள்ளித்திரையின் நன்கொடை; நமது வாழ்விற்கு வழிகாட்டும் ஆற்றலும், உயர்வுக்கு வழி வகுத்துத் தரும் திறனும், திரையுலகம் நமக்கு தந்துள்ள புனிதப் பரிசுகள்.

திரைப்படத் துறையின் ஆற்றலை உலகம் எந்த அளவுக்கு உணர்ந்ததோ இல்லையோ, நம் தமிழகம் அதனை நன்கு உணர்ந்துள்ளது - என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் நம்மிடம் உள்ளன.

மூன்று தமிழுக்கும் முறையான இடம் தருவது திரைப்படம் என்பதால் தான், காஞ்சித்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், கலையுலகில் கால் பதித்து, கருத்துலகில் விதை விதைத்து, அரசியல் உலகில் அற்புதங்கள் பல நிகழ்த்தி, தனது இலக்கை அடைய முடிந்தது. குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவின் கலையுலகக் காவியங்கள், கருத்துப் புரட்சிக்கும், அரசியல் புரட்சிக்கும் அடித்தளம் இட்டன.

அந்த வகையிலே, 'உண்மையைச் சொல், நன்மையைச் செய்' என்ற தத்துவத்தை, தாரக மந்திரமாகக் கொண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், புதிய புதிய வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்து, தமிழகத்துக்குக் காணிக்கையாக்கினார். பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவரும் அமைத்துக் கொடுத்த அந்தப் பாதையில் தான், இன்று வீறுநடை போடுகிறது, உங்கள் அன்புக்குரிய சகோதரியின் இந்த அரசு.

கலை, நாம் வாழும் வாழ்க்கைக்காக! உயிர்கொடுத்த நாட்டுக்காக! உணர்வு கொடுத்த மொழிக்காக - என்னும் அர்ப்பணிப்பு உணர்வு இருந்ததால்தான், அந்தக் கலையுலக வித்தகர்கள், புதிய சமுதாயத்தைச் சமைக்க முடிந்தது; ஒரு புதிய தமிழகத்தைப் படைக்க முடிந்தது. கலை என்ற விதைதான், ஆட்சி என்னும் ஆலமரமாகி, இன்று ஆயிரமாயிரம் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கின்றது, அவர்களுக்கு அரணாகவும் திகழ்கின்றது. இந்தப் பெருமை, உலக நாடுகள் கண்டறியாதது; இந்தச் சிறப்பு வேறு துறைகள் கண்டறியாதது. அப்படிப்பட்ட கலைத்துறைக்கு, தங்களை அர்ப்பணித்துக் கொண்டோருக்கு அந்தக் கலையையே மூச்சாகக் கொண்டு வளர்ந்த நான், இன்று விருது வழங்குகின்றேன் என்பது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

திரையுலக வளர்ச்சியில் உங்கள் சகோதரியின் அரசு கொண்டிருக்கும் ஆர்வம் இதயபூர்வமானது. சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு மாபெரும் திரைப்பட நகரம் இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நகரம் நாளைய திரையுலகத்தின் உற்பத்தி ஸ்தானமாக அமையப் போகிறது.

திரையுலகத் தொழிலாளர் பெருமக்களின் நலம் காக்கும் பொருட்டு, பணிபுரியும்போது உயிர் துறந்தாலோ, ஊனமுற்றாலோ, உதவித் தொகை வழங்குகிறது இந்த அரசு. இறந்தவருக்குப் பத்தாயிரம் ரூபாய், காயமுற்ற வருக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்கும் அரிய திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

சிறு முதலீட்டுப் படங்களுக்கு அரசு அளித்து வந்த இரண்டு இலட்ச ரூபாய் உதவித் தொகையை, தற்போது மூன்று இலட்ச ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மற்றொரு கருத்தையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சமீபத்தில் தமிழ்த் திரைப்படத் துறையில் ஒரு மாபெரும் பிரச்சினை ஏற்பட்டு அதன் விளைவாகத் தமிழகத்திலுள்ள பெரும்பாலான திரைப்பட அரங்குகள் மூடப்பட்டன. திரைப்படத் துறை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனை நான் பத்திரிகைகளில் பார்த்தவுடன், அரசு உள்துறைச் செயலர் இதுகுறித்து சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் உடன் அழைத்துப் பேசி நல்லதொரு தீர்வினைக் காண வேண்டுமென்றும், அவ்வாறு அவரால் தீர்வு காண முடியாவிட்டால், நானே நேரடியாகத் தலையிட்டுப் பேச்சு வார்த்தைகள் நடத்துகின்றேன் என்றும் தெரிவித்தேன். ஆனால், இரு தரப்பினருக்கும் திருப்தி ஏற்படும் வண்ணம் திரு. மலைச்சாமி அவர்கள் அழகாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர் மட்டத்திலேயே தீர்வு காணப்பட்டது. இப்படி உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் உங்களுக்கு ஏற்படும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதை நீங்கள் என்னிடம் நேரில் வந்து கூற வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பதில்லை. அதுபற்றி நான் அறிந்தவுடன், நானே அத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்து முயற்சி களையும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றேன். இதுபோன்று எந்தத் துறையாக இருந்தாலும், எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் அவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று ஓடோடி வந்து உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருவதுதான் இந்த அரசு.

இன்றைக்கு, பேரறிஞர் அண்ணா பெயரால், பாவேந்தர் பாரதிதாசன் பெயரால், கலைவாணர் என்.எஸ்.கே. பெயரால், ராஜா சாண்டோ பெயரால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால், கலைவித்தகர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

சிறந்த திரைப்படங்களுக்கும், நடிக, நடிகையருக்கும், இயக்குநர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், 1990 மற்றும் 1991 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான பரிசுகளும் விருதுகளும் வழங்கப்படுகின்றன. மூன்று சவரன், ஐந்து சவரன் என்று முன்பிருந்த பாகுபாடுகள் தற்போது மாற்றப் பட்டு, எல்லோரும் ஐந்து சவரன் பரிசு பெறும் வகையில் ஆணைகள் பிறப் பிக்கப்பட்டு, இன்று இந்த விழா உண்மையிலேயே தங்க விழாவாக மலர்ந்திருக்கிறது.

தமிழ்த் திரை உலகிற்குத் தங்களுடைய படைப்புகளால், அரிய சேவை ஆற்றியுள்ள பல்வேறு மூத்த கலை வித்தகர்களுக்கு, சிறப்பு விருதுகளை நான் வழங்க உள்ளேன். அவர்கள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று பேரறிஞர் அண்ணா விருதினை மூன்று கலைவித்தகர்கள் பெறுகின்றனர். 'பாவேந்தர் பாரதிதாசன்' விருதினை நான்கு கவிஞர்கள் பெறுகின்றனர். 'கலைவாணர்' விருதினை நான்கு கலைவித்தகர்கள் பெறு கின்றனர். 'இராஜா சாண்டோ' விருதினை நான்கு திரைப்படத் துறை வல்லுநர்கள் பெறுகின்றார்கள். கலைவித்தகர்களுக்கான 'எம்.ஜி.ஆர்.' விருதினை நான்கு திரைப்படத் துறை கலைஞர்கள் பெறுகின்றார்கள். தங்களுடைய அரிய திறமைகளுக்காக இவ்விருதுகளைப் பெறும் அனைத்துத் திரையுலகச் சாதனையாளர்களையும் நான் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றேன்.

அடுத்து 1990 மற்றும் 1991 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளைப் பெறும் இளைய தலைமுறை கலைஞர்கள் அனை வருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை வழங்கி நம் அனைவரையும் மகிழ்வித்த கலைஞர்கள் அனைவருக்கும் என் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

நம் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய திரையுலகத்தினருக்குப் புகழ் சேர்க்கும் இந்தத் திருநாளில், கலைத்துறையில் ஈட்டும் வெற்றியை, கவுர வத்தை, செல்வத்தை, நீங்கள் அனைவரும் சமுதாய மேம்பாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் நீங்கள் ரசிகப் பெருமக்களுக்கும், இந்நாட்டு மக்களுக்கும், காட்டுகின்ற அன்பின் அடையாளம் என்பதை நினைவூட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சீர்மிகு விழாவில் பங்கு கொண்ட ஒவ்வொருவருக்கும் என் வாழ்த்துக் களை வழங்கி, விருதும் பரிசும் பெற உள்ள வித்தகர்களுக்கு என் பாராட்டுக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**21.1.93-ல் நடைபெற்ற,திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.**

# மக்கள் என்பக்கம் இருப்பதால், இறுதி வெற்றி எனக்குத்தான்!

ஆர்ப்பரித்து, அலைகடலென இங்கே திரண்டு, என்னைப் பாசத்தோடு வரவேற்கக் காத்திருக்கும் உங்கள் முகங்களில், நான் காணுகின்ற ஒளியை யும், பெருமிதத்தையும், மகிழ்ச்சியையும் கண்டு, பெரும் பூரிப்படைகின்றேன். எத்திசை நோக்கினும், எங்கிருந்து வந்தது இந்த மக்கள் வெள்ளம், என்று எண்ணத் தோன்றிடும் மக்கள் கடலின் மத்தியில், இன்று மாங்கனி நகராம் சேலத்தில், உங்களைச் சந்திப்பதில், மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். என்னை வளர்த்து, ஆதரித்து, அன்பு காட்டிவரும் தமிழ்ப் பெருமக்களுக்காக, அல்லும் பகலும் நான் தொடர்ந்து பாடுபட்டு வருவதன் பலன், முழுமையாக உங்களைச் சென்றடைகிறது என்பதன் அடையாளமே, இங்கே திரண்டுள்ள மக்கள் கூட்டம் என்பதை அறிந்து, நிம்மதி அடைகின்றேன்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய், உலக அரங்கில் பட்டொளி வீசிப் பவனி வந்து கொண்டிருந்த தமிழகம்; எத்தனை எத்தனையோ இன்னல் நேர்ந்த காலங்களில் எல்லாம், தன் நிறம் மாறாமல், ஒளி குன்றாமல், வரலாற்றில் தனக்கென, ஓர் தனி இடத்தைப் பெற்று வந்த தமிழகம்; இடையில் ஏற்பட்ட சில அரசியல் மாற்றங்களினாலும், பொருளாதாரப் பின்னடைவுகளினால் உருவாக்கப்பட்ட பெரும் நெருக்கடியினாலும், வன்முறைக் கலாச்சாரத் தினாலும், தட்டுத் தடுமாறி, தவித்து நின்ற கால கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியான என் மீது, நீங்கள் முழு நம்பிக்கை வைத்து, தமிழகத்தை ஆளும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தீர்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினீர்கள். அந்த உங்கள் நம்பிக்கை வீண் போகாது, பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், கற்றுத்தந்த கடமை உணர்வோடும், தமிழ் நிலத்திற்கே உரித்தான கட்டுப் பாடு, மற்றும் கண்ணிய மிக்க பண்பாட்டோடும், தமிழர்களை எவரும் பயமுறுத்திப், பணிய வைத்துவிட முடியாது என்ற உண்மையை, உலகமும், இந்தியத் துணைக் கண்டமும், உணர்கின்ற வகையில் தான், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக, மக்கள் நலனை மட்டுமே மூலக் கருத்தாய்க் கொண்டு, நீங்கள் இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செயல்படுத்தி வந்துள்ளேன்.

தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும், விளக்கேற்றி வைப்பதே என் குறிக்கோள் என்ற சூளுரை எடுத்துத்தான், முதலமைச்சர் நாற்காலியில் நான் அமர்ந்தேன்; அந்த என் இலட்சியம் நிறைவேறும் நாள் வரை, ஓயாது ஒழியாது உங்களுக்காக உழைத்துக் கொண்டே இருப்பேன்.

இந்த என் இலட்சியப் பயணத்திற்கு எதிராக, எத்தனை எத்தனை இடையூறுகள் வந்தாலும், புற்றீசல் போல், புல்லுருவிகளால், இன்னல்கள் தோற்றுவிக்கப்பட்டாலும், இங்கே இலட்சோப இலட்சமெனத்

திரண்டிருக்கும், மக்கள் சக்தியின் துணை கொண்டு, அவற்றை வீழ்த்திக் காட்டுவதோடு, விரட்டி அடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழகத்தில் கடந்த ஒன்றே முக்கால் ஆண்டு காலமாக, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில், ஓர் நல்லாட்சிஅமைந்ததன் பலன்; இன்று இலட்சோப இலட்சம் மக்கள் வாழ்வில், ஒளி வீசுகின்றது. இதோ, இன்று உங்கள் கண் முன்னே, சேலம் மாவட்ட மக்களின் நலனுக்காக, 353 கோடி ரூபாய்க்கான திட்டங்களை, நான் இங்கு தொடங்கி வைத்துள்ளேன்.

அடிமட்டத்தில் - நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்ற, ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றும், பல சீர்மிகு மக்கள் நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் பலவற்றை, இங்கே வழங்க உள்ளேன்.

நிறைவேற்றப்பட்டு, இன்று பயன் தரும் வகையில், தொடங்கி வைக்கப் படும் திட்டங்கள், மற்றும் பணிகள் மட்டும், 83 கோடியே 53 இலட்சம் ரூபாய்க்கு உரியது ஆகும். மேலும், அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இன்று அடிக்கல் நாட்டப்படும் பணிகளின் மதிப்பு மட்டும், 249 கோடியே 95 இலட்சம் ரூபாய் ஆகும். அதாவது, ஏறத்தாழ 250 கோடி ரூபாய்!

இவை மட்டும் அல்லாது, நேரடியாக வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்ந்து, வதங்கிக் கொண்டிருப்போருக்கும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியிருப்போர், ஏழை எளியோர் என, ஏறத்தாழ 58,552 பேருக்கும், 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, பல நலத்திட்ட உதவிகள், இன்று இங்கே வழங்கப்பட உள்ளன. எல்லாவற்றை யும் கூட்டிப் பார்ப்பீர்களானால், சேலம் மாவட்ட மக்களுக்கென, மொத்தம் 353 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை, உங்களுக்கு அர்ப்பணிக்கும் விழாதான், இன்றைய விழா என்பதை அறிவீர்கள்.

இன்றைய தினம், இங்கே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில், தொடங்கி வைக்கப்படும் பணிகளின் பலன், நமக்குக் கிட்டும் நாள், வெகு தொலைவில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடங்கி வைக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், இந்த இந்தக் காலக் கெடுவுக்குள் முடித்தாக வேண்டும், என்ற கடுமையான உத்தரவோடு தான், கால்கோள் நாட்டப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இம்மாவட்ட மக்கள், மன நிறைவு கொள்ளத்தக்க வகையில், இங்கே நிறைவேற்றப்படும் இத்திட்டஙகளைப் போல், கடந்த ஒன்றே முக்கால் ஆண்டுக் காலத்தில், தமிழக மக்கள் அடைந்த பலன்கள், கணக்கற்றவை ஆகும்.

தமிழகம் இன்றைக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை, ஆய்ந்து தீட்டி, அருஞ்செயல்கள் புரிந்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, முன் னேற்றப் பாதையில் வெற்றி நடைபோடுகிறது என்றால், அது மிகையாகாது.

இதன் பின்னரும் என்னைச் சிலர் ஏசுகிறார்கள்; ஏளனம் பேசுகிறார்கள்; இன்னும் சிலர் பின்னாலிருந்து முதுகிலே குத்திட, நேரம் பார்த்துக் காத்திருக் கின்றார்கள்.

தமிழகத்தில் தற்போது, வேலையற்ற வீணர்களின் பிதற்றல் பெருத்து வருகிறது. 'வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கை யாகக் கூட, தமிழக மக்கள் நம்பிவிட மாட்டார்கள்', என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே வேறு எந்த சிந்தனைக்கும் இடமளிக்காது, தொடர்ந்து தொய்வின்றி, உங்களுக்காகப் பணியாற்றுவதே என் கடமை என்பதை, நெஞ்சில் நிறுத்திச் செயல்படுகிறேன் என்பதை, இங்கே குறிப்பிட விரும்பு கின்றேன்.

வரலாற்றில் நம்முடைய பழம் பெருமையும், நாகரீகமும், முதல் இடம் பெற்றுத், தழைத்தோங்கி வந்திருந்தாலும், நவீன வளர்ச்சிக்கு ஏற்றவாறு, நம் பொருளாதாரம் சிறந்தோங்கிடவில்லை. அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் வேகத்தோடு, நமது பொருளாதார வளர்ச்சி பற்றிக் கவனம் செலுத்தாத ஓர் தேக்க நிலை, தமிழகத்தில் இருப்பது அறிந்து, பெரும் வேதனை அடைந்தேன்.

கடந்த 20 ஆண்டுகளில், மத்திய அரசின் சார்பில், எந்த ஒரு பெருந் தொழிலும் தமிழகத்தில் தொடங்கப்படவில்லை என்றால், எண்ணிப் பாருங் களேன் - எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளோம் என்பதை.

இதே சேலத்தின் அருகில், பெருமளவில் கிடைக்கும் இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி, இரும்பு எஃகு ஆலை அமைக்குமாறு, தொடர்ந்து வற்புறுத்தி யும், உருக்காலைக்குப் பதிலாக, உருட்டாலைதான் தொடங்கினார்கள் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்நிலையில்தான், ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மீண்டும் மீண்டும் தொடர்ந்து வற்புறுத்தியதன் பலனாக, சென்னை அருகே 2,000 கோடி ரூபாய் முதலீட்டில், ஆரோமேடிக் தொழிற்சாலை அமைக்க, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நம் முயற்சியின் காரணமாக, 70,000 பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இது போன்ற அதிக அளவிலான வேலை வாய்ப்பு, கடந்த இருபது ஆண்டுகளில், ஒன்று கூடத் தமிழகத்திற்குக் கிடைத்ததில்லை.

எங்களது முயற்சி இப்போது பலன் தர ஆரம்பித்துள்ளது. தொழில் முனைவோர்கள் பலர், தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன் வந்துள் ளார்கள். சென்ற டிசம்பர் மாதம், தொழில் அதிபர்களை நான் நேரில் சந்தித்து, இரண்டே நாட்களில், 8,500 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கான, 27 தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்தேன். அவை அனைத்தும் விரைவில் தொடங்கப்படும்.

இனி தமிழகத்தில், மின் வெட்டும் இருக்காது; மின் வெட்டினால் தொழில் பாதிப்பும் இருக்காது. சேலம் மாவட்டம், தொழில் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது, என்பதை நான் அறிவேன். இன்னும் நிறைய தொழிற்சாலைகளை இங்கே அமைக்கலாம்; அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து அறிவிக்குமாறு, அதிகாரிகளைப் பணித்துள்ளேன்.

பொருளாதார வளர்ச்சிப் பணிகளிலும் சரி; தொழில் வளர்ச்சித் திட்டங்களிலும் சரி; தமிழகத்திற்கு இனி தேக்க நிலை எப்போதும் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி ஒவ்வொரு நாளும் முன்னேற்றம்தான் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

எத்தகைய திட்டப் பணிகளை மேற்கொண்டு செயலாக்கினாலும், கஷ்டப்படுகிற மக்களை மறக்கலாகாது என்பதுதான், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமக்குக் காட்டிய அன்பு வழி. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள், நல்வாழ்வுத் திட்டங்களைப் பின்னுக்குத் தள்ளி, வளர்ச்சித் திட்டங்களையே கவனிக்க முற்பட்ட, இந்த நவீன யுகத்தில், நாமும் கூட பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்குண்டிருந்தாலும், புரட்சித் தலைவர் வழிவந்த நாம், ஏழைகளை மறக்காமல், ஏழை எளியோரையும், வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள அப்பாவி மக்களையும், கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வருகின்றோம்.

அந்த வகையில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஒரு கோடியே 20 இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்புற ஏழை எளியோருக்கும், இலவசமாக சேலை வேட்டிகளை வழங்கியுள்ளோம். தமிழகத்தின் கிராமங்கள் தோறும், இலவச மருத்துவ நல முகாம்கள் நடத்தி, மக்கள் நல்வாழ்வைப் பேணியுள்ளோம். முதியோர் நலன், ஊனமுற்றோர் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல்வாழ்வு, போன்ற அத்தனைத் திட்டங்களும், அரசின் நேரடிப் பார்வையில், செவ்வனே நிறைவேறி வருகின்றன.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். குழந்தைகள் சத்துணவுத் திட்டம், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துத் திட்டம், என்பதோடு நில்லாமல், எங்கள் அரசு இந்தியாவிலேயே முதன் முதலாக, அரசாங்கமே நர்சரி பள்ளிகள் நடத்துகிறது, எனப் பெயர் பெறும் வகையில், அவை சீரமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில், பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்தை, அரசே அவர்களை எடுத்து வளர்க்கும், தொட்டில் குழந்தைகள் திட்டத்தை அறிமுகப் படுத்தி இருக்கின்றேன். ஆண்களுக்குப் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல.

பெண்ணுக்குச் சம உரிமை தர வேண்டும், என்று குரல் கொடுத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த மண்ணில், பெண் குழந்தைகளை அழிக்கும் பாவம், இனியும் தொடரக் கூடாது. அதனைத் தொடரவிட மாட்டேன் என்று சூளுரைத்துத்தான்,

புரட்சிகரமான இந்தப் புதிய திட்டத்தைக் கொண்டு வந்தேன். இந்தத் திட்டத்தையும் அரசியல் இலாபத்திற்காக, என் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஒரு சாரார் குறை கூறுகின்றனர்.

நான் அவற்றைப் பற்றி எல்லாம் கவலை கொள்வதில்லை. இன்று வரை 32 பெண் சிசுக்களின் படுகொலையை, இத்திட்டத்தினால் தடுத்திருக் கின்றோமே, என்ற மன நிம்மதியைத்தான், நான் அடைகின்றேன். இத் திட்டம் அறிமுகப்படுத்தப்படாமல் இருந்திருக்குமானால், அந்த 32 பச்சிளம் பெண் குழந்தைகளும், பலியாகி இருப்பார்களே என்பதைக் கூட மறந்து, மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல், சிலர் ஏதேதோ கூறி வருகின்றனர். பெற்றோர்கள், பெண் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் என்னென்னவோ, அவை அனைத்தையும் அரசே ஏற்றுச் செய்ய வேண்டும், என்ற நல்லெண்ணத்தில்தான், இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசு ஏற்கும் இப்பெண் குழந்தைகளுக்கு, நல்ல கல்வி அறிவு புகட்டு வதுடன், தங்கள் சொந்தக் காலில் நின்று, தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் திறமை உடையவர்களாக, அவர்களை உருவாக்கவும், அவர்களது திருமணம் வரை பாதுகாக்கவும், அரசு முடிவு செய்துள்ளது. உதவி கோரி என்னைச் சந்தித்த ஆயிரக்கணக்கான பெண்களின் துயரத்திற்கு, அவர்களின் அறியாமையும், கல்வி அறிவு இன்மையுமே காரணம் என்பதை, நான் உணர்ந்ததினால்தான் அரசு எடுத்து வளர்க்கும் பெண் குழந்தைகள், நமது சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்தி, உண்மையான பெண்கள் முன்னேற்றம் இதுதான் என்று, உலகிற்கு எடுத்துக்காட்டும் வண்ணம், பாரதி கண்ட புதுமைப் பெண்களாக, அவர்களை வளர்க்கவேண்டும் என்று முடிவு செய்தேன். அதற்கிணங்க, இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு, செயல் படுத்தப்படுகின்றது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனைத் திட்டங்கள், எந்த அளவு செம்மையுடன் தீட்டப்பட்டாலும், இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில், இதன் ஜீவ நாடியாக உள்ள கிராமங் களுக்கு, அதன் பலன் சென்றடைந்தால்தான், உண்மையான வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். அவரது வாக்கில் நம்பிக்கை கொண்ட அரசாக, நம்முடைய அரசு திகழும் காரணத்தால் தான், வேறெந்த மாநில அரசும் தீட்டாத, தன்னிறைவுத் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்தியுள்ளோம்.

நம்முடைய திட்டத்தின் பயனாக, சின்னச் சின்னக் குக் கிராமங்கள் கூட, இன்று அடிப்படை வசதிகள் அனைத்தையும் பெற முடிந்துள்ளது. இந்தியா விலேயே, கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை, சிறப்பாக நிறைவேற்றியுள்ள மாநிலம், தமிழ்நாடுதான் என்று, மைய அரசே பாராட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களின், கல்விக்கண் திறப்பதிலே கவனம் செலுத்தி, பள்ளிச் சிறார்கள் மட்டுமல்லாது, பள்ளி செல்லாத சிறார்கள், வயது வந்தோர், அனைவரும் பயிலும் வண்ணம், அறிவொளி இயக்கத்தைத்

தீவிரப்படுத்தியதன் பயனாக, ஏழு மாவட்டங்களில், எழுத்தறிவில்லா மக்கள், கல்விக்கண் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு, உங்கள் சேலம் மாவட்டத்தையும் சேர்த்து, மொத்தம் 10 மாவட்டங்களில், அறிவொளி இயக்கம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வளவு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும், திறன் மிக்க ஓர் அரசை, உங்கள் பிரதிநிதியாக இருந்து, நான் நடத்தி வந்தாலும், ஆட்சி அமைப்பு முறை காரணமாக நாம் எதிர்நோக்கியுள்ள சில சங்கடங்களையும் தெரிவிப்பது, என் கடமை எனக் கருதுகிறேன்.

இந்தியாவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்கள், மத்திய கூட்டாட்சியிடத்திலும், மக்களை வாழ வைக்கத் தேவையான அதிகாரங்கள், மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும். இதற்கேற்ப, அரசியலமைப்புச் சட்டம், திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று, எங்கள் அரசு பொறுப் பேற்ற காலத்திலிருந்தே, வலியுறுத்தி வருகிறது.

மத்திய அரசு அண்மையில், கிராமங்களுக்கு அதிக அதிகாரம் தருகின்ற போர்வையில், மாநில அரசின் உரிமையைப் பறிக்கின்ற வகையில், பாராளுமன்றத்தில் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர் பாலிகா அரசியல் சட்டத் திருத்த மசோதாக்களை, நிறைவேற்றி உள்ளது. கேட்டால், மக்களுக்கு நேரடியாக அதிகாரம் வழங்குவதற்காக, இந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

அந்தந்த மாநில மக்களால், பெரும்பான்மையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட, மாநில அரசைத் தாண்டி, அதிகாரம் வழங்குவது என்பது, என்ன நடைமுறை நியாயம்? இது ஆசிரியர் இல்லாமல், பள்ளிகளில் பாடம் சொல்லி கொடுக் கின்றோம் என்பது போன்ற செயல் மட்டுமல்ல; பரீட்சை எழுதுகின்ற மாணவர்களைக் கண்காணிக்க, ஆசிரியர் தேவையில்லை என்பதைப் போன்ற, ஒரு அவல நிலைமையும் உருவாக்கியுள்ளது.

மேலும், தற்போது தமிழகத்தில் நடைமுறையில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு, உறுப்பினர்களையும், தலைவர்களையும் மக்கள் நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக முறையைக் கைவிட்டு, ஏற்கெனவே நடைமுறையில் இருந்து எடுக்கப்பட்டுவிட்ட, பழைய முறையான, உறுப் பினர்கள் மூலம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தும் சட்டத் திருத்தமாக அமைந்துள்ளதால், இது மக்களின் உரிமைகளைப் பறிக்கும், பாதிக்கும் என்றே கருத வேண்டியுள்ளது.

இது நமது அரசியல் சாசனத்தின், அடிப்படை தத்துவத்தையே, உடைக் கின்ற முயற்சியாக இருக்கின்றது. அதோடு, மாநில அரசைத் தேர்ந்தெடுக்க, தேர்தலின்போது நிதானமாகச் சிந்தித்து, ஓட்டுப் போட்ட வாக்காளப் பெருமக்களையும், அவர்களது உரிமையையும் சுரண்டுவதோடு, கிராம வளர்ச்சியில் திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் மாநில அரசின் நோக்கத்தையே சிதறடிக்கும், இரட்டை ஆட்சி முறையைத் தெரிந்தே அறிமுகப்படுத்துகின்ற வீம்புச் சட்டமாகவும் இது இருக்கிறது. கிராம

மக்களின் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், எனது கருத்தை இங்கே கூற வேண்டியது அவசியம் என்று கருதி, நான் இதையெல்லாம் இங்கே தெரிவிக்கின்றேன். இது போல, மாநில அரசின் உரிமைகள், பறிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு துறைகளும் இருக்கின்றன. அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல, இங்கே நேரமில்லை என்பதால், இந்த அளவில் நிறுத்திக் கொள்கின்றேன்.

இன்று - அரிசி விலையைக் கட்டுப்படுத்தக் கூட, எண்ணற்ற பொருளா தாரச் சிரமங்களை, நாம் அடைய வேண்டியுள்ளது. பொது மக்களுக்கு மிகவும் நெருக்கமாக உள்ள மாநில அரசுதான், பதில் கூற வேண்டியுள்ளது. இந்த உண்மை நிலையை, மக்களுக்கு நாம் எடுத்துரைக்கத்தான் வேண்டும். குறிப்பாக, மக்களை நேரடியாகப் பாதிக்கும், அரிசி விலை ஏற்றம் போன்ற சில பிரச்சினைகளையாவது, மாநில அரசைக் கலந்து முடிவெடுங்கள், என நான் விடுத்துவரும் வேண்டுகோள்கள்கூட, செவிமடுக்கப்படாததால், மாநில அரசு இன்று, மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைக்கு ஆளாகி உள்ளது.

குறிப்பாக, அண்மையில் ஏற்பட்ட சொல்லொணா வெள்ளச் சேதத்தை, சுற்றுப் பயணம் செய்து பார்த்த பின்பும், வெள்ள நிவாரணமாக, தமிழ்நாடு அரசு கேட்டிருந்த 530 கோடி ரூபாய்க்குப் பதில், மைய அரசு நமக்கு அளித்தது வெறும் 50 கோடி ரூபாய் மட்டும் தான். அதுவும் எப்படி? தமிழ்நாட்டுக்கான அடுத்த் ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து, முன் பணமாக! இதையெல்லாம் நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகள் கூட, எப்படி தோல்விகளைச் சந்திக்கின்றன என்பது, உங்களுக்கு விளங்கவேண்டும் என்பதற்காக, இவற்றைக் கூறுகிறேன்.

இவை போன்ற இடர்ப்பாடுகளையும் - பல்வேறு தடங்கல்களையும் தாண்டித்தான் - சமாளித்துத்தான், சரி செய்துதான், உங்கள் சகோதரியின் அரசு, சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வருகிறது!

'தடை பல உண்டெனினும்
தடந்தோள் உண்டென்போம்'

- என்ற பாவேந்தர் கவிதை வரிகளுக்கொப்ப, உங்கள் ஆதரவும் அன்பும் என்றென்றும் உள்ளதால், எப்பேர்ப்பட்ட தடைகளையும் சங்கடங்களையும் தாங்கி, சிரித்த முகத்தோடு, உங்களைக் காண ஓடோடி வந்துள்ளேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற பின், சேலம் நகரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொள்ள, இன்று முதல் முறையாக வந்திருக்கின்றேன். சென்ற ஆண்டு இறுதியிலேயே இங்கு வர நான் திட்டமிட்டு இருந்தும், தென் மாவட்ட மக்கள் புயலாலும் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், அங்கு செல்ல நேரிட்டதால், அப்போது வர இயலவில்லை. தற்போது தாமதமாக இங்கு வந்து உங்களைச் சந்தித்தாலும், தாராளமாகப் பல திட்டங்களுடன் தான் வந்துள்ளேன் என்பதை அறிந்து, நீங்கள் மகிழ்ச்சி கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் காலம் முதல், இன்று வரை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, சேலம் மாவட்ட மக்கள், நிலையான பெரும் ஆதரவினை அளித்து, பல மாபெரும் வெற்றிகளையும் ஈட்டித் தந்துள்ளார்கள். இந்த ஆட்சி அமைவதற்குத் தங்களது அயராத உழைப்பைத் தாரை வார்த்தவர்கள், தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள், ஓடியாடி உழைத்த செயல் வீரர்கள், எண்ணற்றோரைத் தன்னகத்தே கொண்ட எழுச்சிமிக்க மாவட்டம் தான், சேலம் மாவட்டம் என்பதை, நான் எப்போதும் மறவேன்.

இனியும் அந்த நிகரில்லா ஆதரவினை, தொடர்ந்து எங்களுக்கு நல்கு வீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் மாவட்ட அமைச்சர் அன்புத் தம்பி செல்வகணபதி அவர்கள், மிகமிகச் சிறப்பாக, எனது சுற்றுப்பயணத்தையும், இம்மாபெரும் விழாவினையும் ஏற்பாடு செய்துள்ளமைக்காக, அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவர் துடிப்புள்ள இளைஞர்; கடினமான உழைப்பாளி; ஆற்றல் மிக்கவர். எப்பொழுதும் பொறுப்புடன் செயல்படக் கூடியவர். மக்கள், மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சரியாகக் கணித்துக் கருத்துக் கூறுபவர். கசப்பான செய்திகளானாலும், கழகத்தையும், அரசையும் கட்டிக் காப்பதே, தன் தலையாய கடமை என்று கொண்டு, தயங்காது என்னிடம் தெரிவிக்கும் தைரியம் கொண்டவர்.

பலர் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக, சில குறிப் பிட்ட நல்ல செய்திகளையே என்னிடத்தில் தெரிவிக்கின்றார்கள். கசப்பான செய்திகள் மிக முக்கியமானவை என்றால் கூட, என்னிடம் சொல்லாமல் சென்று விடுகிறார்கள். தம்பி செல்வகணபதி அப்படிப்பட்டவர் அல்ல; தயக்கமின்றித் தன் கருத்துக்களை, என்னிடம் கூறுகின்றார் என்பது மட்டுமல்ல; அவர் கூறும் கருத்துக்கள் எப்பொழுதும், அறிவுபூர்வமான தாகவும், மக்களின் மனநிலையைச் சரியாகப் பிரதிபலிப்பதாகவும், அமைந்தே இருக்கும்.

உங்கள் மாவட்ட அமைச்சர் இத்தகைய அறிவாற்றல் காரணமாகத்தான், மிகக் குறுகிய காலத்திலேயே பல உயர்வுகளைப் பெற்றார். இவரது தகுதி களையும், திறமைகளையும் அடையாளம் கண்டுதான், நான் இவருக்குக் கழகத்தின் இளைஞர் அணி மாவட்டச் செயலாளர் பொறுப்புக் கொடுத் தேன். அதனைத் தொடர்ந்து, சேலம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக உயர்வு பெற்றார். பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில், தன் இளம் வயதிலேயே இடம் பெற்றார். தன் பணிகளை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் செய்து வருவதோடு, நான் ஏற்கெனவே தெரிவித்த சிறப்பு இயல்புகளையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

இருந்தும், சகோதரர் செல்வகணபதி அவர்களுக்குத் தெரிந்த, ஒரே திராவிட இயக்கத் தலைவி, நான்தான். என்னைத் தவிர வேறு எந்தத் தலைவரையும் அவருக்குத் தெரியாது. தான் கொண்ட தலைமைக்கு என்றென்றும் உண்மையானவர், என்ற சிறப்புக்கு உரியவராகத் திகழ்கிறார்.

இனிய பண்பும், செயல்திறனும், கொண்ட கொள்கையில் உறுதியும், விசுவாசமும் மிக்க சகோதரர் செல்வகணபதி அவர்களுக்குச் சிறந்த ஒளி மயமான எதிர்காலமும், வளமான பல உயர்வுகளும் உண்டு என்பதைத் தெரிவித்து, அவரைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

சென்னையில் இருந்து, சேலம் வரை நான் பயணம் செய்த சாலையின் இருமருங்கிலும், நீண்ட நேரமாக என் வருகைக்காகக் காத்து நின்று, என்னைக் கண்டவுடன், உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்தி வரவேற்ற மக்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கை ஆக்கு கின்றேன்.

நான் பல்வேறு தரப்பு மக்களின் பாசத்திற்கு உரியவள். ஜாதி, மத உணர்வுகள் எனக்குக் கிடையாது. அதைத் தெள்ளத் தெளிவாக, என் அன்பிற்குரிய உங்களின் முன்னே, தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன். எவரிடமும் எனக்குப் பகை உணர்வு இல்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, என் மீது அவதூறைப் பரப்புபவர்கள், நான் சில பிரிவினர் மீது எதிர்ப்புக் கொண்டிருப்பதாக, சுயலாப நோக்கத்துடன், பொய்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் என் பக்கம் இருப்பதால், இதிலும் இறுதி வெற்றி எனக்குத்தான் என்பதை, என்னை எதிர்ப்பவர்கள் தெரிந்து கொள்ளும் நாள், வெகு தூரத்தில் இல்லை.

இந்நாட்டு மக்கள் யாராக இருந்தாலும், எல்லோரும் எனக்கு ஒன்றுதான். அவர்கள் ஒவ்வொருவரும் என் அன்பிற்குரிய சகோதரர்கள்தான் சகோதரிகள்தான் இதில் எவ்வித மாற்றமும், எப்போதும் இருக்காது.

எங்கள் பாதையும் பயணமும், சத்திய சோதனைகள் பலவற்றை வென்ற அண்ணாவுடையன! புரட்சித் தலைவருடையன! அந்தத் திராவிட தீபங்கள் காட்டும் ஒளி வழியே, வீறுநடை பயின்று, வெற்றி பெறுவோம் என்ற உறுதியை ஏற்று விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**7.3.93-ல் சேலத்தில் நடந்த விழாவில் ஆற்றிய உரை.**

# ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே வாழ்வின் அர்த்தத்தையே காண்கிறேன்

வரலாற்றுச் சிறப்பும் சரித்திரப் பெருமையும் மிக்க, தருமபுரி மாவட்டத்தின் மக்களாகிய உங்கள் அனைவரையும், மீண்டும் சந்தித்துப்பேசி மகிழ்வதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டை ஆளுகின்ற முதலமைச்சர் என்கின்ற உயர்ந்த நிலை எனக்குக் கிடைத்து இருந்தாலும், தமிழகச் சட்ட மன்றத்திற்கு, என்னை அனுப்பி வைத்த பெருமை, இந்த மாவட்டத்தைச் சார்ந்த பர்கூருக்கு உண்டு என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

தமிழர் வாழ, அவ்வைக்கு நெல்லிக்கனி ஈந்து, நம் இதயத்தில் இன்றைக்கும், ஏன், என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, அதியமான் வாழ்ந்த மண் இது. சுதந்திர வேள்வியில், தங்களைப் புடம் போட்ட தங்கங்களாக மாற்றிக் கொண்ட, சுப்பிரமணிய சிவாவும், மூதறிஞர் ராஜாஜியும், வாழ்ந்து மகிழ்ந்த வரலாற்றுத்தலம் இது.

ஆனால், நான் தேர்தலில் நிற்பதற்கு, இந்த மாவட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்தேன் என்றால், அதற்கு இவையெல்லாம் காரணங்கள் அல்ல. தமிழ்நாட்டிலேயே, மிகவும் பிற்பட்ட பகுதியாக, பின்தங்கிய மக்களைக் கொண்ட மாவட்டமாக, ஏழைகள் நிறைந்த மக்களைக் கொண்ட மாவட்டமாக, ஏழைகள் நிறைந்த இடமாக, இந்தப் பகுதி இருந்ததால்தான், அவர்களுக்கு உதவுகின்ற வகையில், என்னாலான பணிகளை, என் சக்திக்கு இயன்ற அளவில், செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடுதான், நான் பர்கூரைத் தேர்ந்தெடுத்தேன். அந்த வகையில் இதுவரை, இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியுள்ளேன்.

முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, நான் முதன்முதலாகப் பர்கூருக்கு வந்தபொழுது, 34 கோடி ரூபாய்க்கான திட்டங்களை அளித்து விட்டுச் சென்றேன். இதில் குறிப்பாக, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின், கருங்கல் மெருகூட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை, 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கும் பணிக்கு, அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இன்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, புதிய தொழிற்சாலை இயங்கும் தறுவாயில் உள்ளது என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், நான் இரண்டாம் முறையாக பர்கூருக்கு உங்களைக் காண வந்தபொழுது, 22 கோடி ரூபாய் செலவில், பெண்களுக்கெனத் தனியாக, ஒரு புதிய கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதற்கு, அடிக்கல் நாட்டினேன். அந்த நூற்பாலையின் பூர்வாங்கப் பணிகள் முடிந்து, இடம் தேர்வு செய்யப்பட்டு, அதன் பணிகள் விரைவில் தொடங்க இருப்பதை, நான் மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிற அதே நேரத்தில், எனக்கு முன்னால் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் இந்தத் தகவலை

ஏற்கெனவே உங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த நூற்பாலையைத் தொடங்க நேரடியாக நான் மீண்டும் வரவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். இதற்காக வேண்டுகோள் விடுக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்த நூற்பாலையைத் தொடங்குவதற்குக் கட்டாயமாக நான் வருவேன் என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று மூன்றாம் முறையாக உங்களைச் சந்திக்க நான் வந்திருக்கின்றேன். தருமபுரி மாவட்டம் பயன்பெறும் வகையில் இன்று,

- 141 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல கட்டுமானப் பணிகளுக்கும், திட்டங்களுக்கும், அடிக்கல் நாட்டி உள்ளேன்.

- 49 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

- 37 கோடி ரூபாய் மதிப்புள்ள, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன்.

- 11 கோடி ரூபாய் மதிப்புள்ள, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட உள்ளேன்.

ஆக, மொத்தம் 238 கோடி ரூபாய் மதிப்புள்ள பணிகளுக்கு, இங்கே, இன்று அடிக்கல் நாட்டியதிலும், புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்ததிலும், கட்டடங்களைத் திறந்து வைத்ததிலும், நான் எனது மகிழ்ச்சியை, உங்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அரசு எத்தனை உதவிகள் செய்தாலும், இயற்கையே நமக்கு எதிரியாக, சில சமயங்களில் இருப்பது, தவிர்க்க முடியாதது. வறட்சி, ஒவ்வொரு ஆண்டும் மக்களது வாழ்வை, திசை மாற்றிவிடுகிறது. வெள்ளம், சாதாரண மக்களின் பொருளாதார ஸ்திரத்தன்மையை, சீர்குலைக்கின்றது. இப்படி இயற்கைச் சீற்றங்களினால் மக்கள் பாதிக்கப்படுகின்ற நேரத்தில், ஓடோடி வந்து உதவிக்கரம் நீட்டுவது தான், உங்கள் அரசு. எப்படிப்பட்ட நிதிநிலை நெருக்கடியிலும், ஏழை எளியோர் நலன் பெறும் திட்டங்கள், சிறிதும் தொய்வில்லாமல் தொடரச் செய்து வருவது தான், உங்கள் அரசு.

மரங்கள் பூமியின் மிகச் சிறந்த செல்வம், மரங்கள் அழிவதால், மனித குலத்துக்கே தீங்கு விளையும் என்பது, நடைமுறை உண்மை. காடுகள் மிகுதியாக இருக்கின்ற இடத்தில் தான், மழை அதிகமாகப் பெய்யும்,

சுற்றுச் சூழல் தூய்மையாக விளங்கும். எனவே, காடுகளை அழிப்பவர்கள், மக்களின் எதிரிகள் என்பதை, நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் அராஜகச் செயலுக்கு, உதவுபவர்களைத் தடுத்து நிறுத்த, நீங்கள் முன்வர வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில், தொழில்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. தொழில் துறையில் கல்வி அறிவு, நல்ல பலனைத் தரும். வேளாண்மை யையே முழுதும் நம்பியுள்ள நீங்கள், தொழில்கள் தொடங்கவும் முன்வர வேண்டும். அந்த வகையில் உங்கள் பிரதிநிதியான நான், உங்களுக்கு உதவ எப்போதும் காத்திருக்கின்றேன். உங்களை ஆர்வத்தோடு நான் வரவேற் கிறேன். முதலமைச்சரைப் பயன்படுத்திக்கொள்ள நிறைய பேர் ஆர்வமாக உள்ளார்கள். ஆனால், உங்களைப் பொருத்தமட்டில், உங்களைப் பயன் படுத்த, முதலமைச்சர் ஆர்வமாக இருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது வேறு எந்தத் தொகுதிக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பு. இதனை நீங்கள் அனைவரும், தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழிவந்த மக்கள் அரசு. இதுவரை ஆட்சி செய்தவர்களைப் போல, பழங்கதை பேசாமல், மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட, ஆழ்ந்து சிந்தித்து, ஆய்ந்து அறிந்து, திட்டங் களைத் தீட்டுகின்ற அரசாகத் திகழ்கிறது, எங்கள் அரசு. அந்தத் திட்டங்கள் தான், இன்று செயல்வடிவம் பெற்று, சாதனைகளாக மலர்ந்துள்ளன.

இந்தத் திட்டங்கள் அனைத்துமே, மக்களின் நல்வாழ்வினைத், தங்களது நியாயமான மைய நோக்கமாகக் கொண்டவை. பொதுமக்களின் எல்லா வாழ்வு நிலைகளையும், அம்சங்களையும், குறைபாடுகளையும் சரி செய்து, அவர்களை மேம்படுத்துவதற்காக, எங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சி களும், அடைந்த சாதனைகளும், எண்ணில் அடங்கா என்பதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாட்டின் இருதயம் போன்ற கிராமங்களில் ஆரம்பித்து, ஊரக வளர்ச்சிக் கான திட்டங்கள், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகள், கல்வித் திட்டங்கள், ஏழை எளியோருக்கான நலத் திட்டங்கள், போன்றவற்றைச் செயலாக்கினோம்;

மகளிர் உட்பட வேலை வாய்ப்பற்றோருக்கு, சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்தோம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு, அறிவொளி இயக்கத் தின் மூலம் அறிவூட்டினோம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், தன்னிறைவு அடையச் செய்தோம். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம், நகர்ப் புறங்கள் அடிப்படை வசதிகளைப் பெறச் செய்தோம். தற்போது, தொழில் வளர்ச்சி காண்பதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்தின், முதற் கட்டத்தைத் தாண்டி உள்ளோம்,

முறைப்படுத்தி வகைப்படுத்தி வகுத்த, இச்சீரிய திட்டங்கள் மூலம், அனைத்துத் துறைகளிலும், தமிழ்நாடு வெற்றி கண்டு வருகிறது. இதைக் கண்டு பொறுக்க முடியாத சிலர், பொறாமையால், புரட்டுக்களை அள்ளி வீசுகிறார்கள். கோடிக்கணக்கான தமிழக மக்களாகிய உங்கள் ஆதரவும், அன்பும் இருக்கும் வரை, தீயசக்திகளின் ஓலங்களும், மாய்மாலங்களும், ஒருபோதும் எடுபடாது.

சட்டம் ஒழுங்கோடு, அமைதி தவழுகின்ற தமிழ்நாடு, மத இன காழ்ப் புணர்ச்சிக்கு அப்பாற்பட்ட மாநிலம், சுயலாபத்திற்காகப் பொய்யை விற்று, தன் மக்களையும், மாநிலத்தையும் காட்டிக் கொடுக்கின்ற, சமூக விரோதி களின் முயற்சிகள், இந்தத் தமிழ் மண்ணில் எடுபடாது என்பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 5½ கோடி தமிழக மக்களின் அரசு இது. உங்கள் நலனுக்காகச் செயல்படுத்தப் படும் திட்டங்களில், ஒளிவு மறைவு கிடையாது.

தமிழ்நாட்டுக்கும், தமிழக மக்களுக்கும், தமிழ் மொழிக்கும், தீங்கு ஏற்படு கின்ற நிலை வரும்போது, நாங்கள் போர்க்கொடி உயர்த்தவும் தயங்க மாட்டோம்; இதில் எந்தவிதச் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் சிறிதும் இடமில்லை. பிறந்த மண்ணைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, 'நீ பெரியவனா? நான் பெரியவனா?' என்று போட்டி போட்டுக் கொள்பவர்களுக்கு, தமிழகத்தில் என்றும் இடமில்லை. மக்கள் பணி ஆற்றுபவர்களை, வீழ்த்த நினைப்பவர்கள், என்றும் வென்றது இல்லை.

பொது வாழ்வு என்பது மக்கட் பணி. அந்தப் பணியை யார் உண்மை யாகச் செய்கின்றார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியும். உண்மையிலேயே தங்களுக்காகப் பாடுபடுபவர்கள் யார் என்பதை, தமிழக மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றது; சாதனை மேல் சாதனையாக, வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருக்கிறது!

மக்கள் சக்தி என்ன என்பது, புரட்சித் தலைவருக்கும் எனக்கும், மற்றவர் களைவிட மிக நன்றாகவே தெரியும். அந்த மகா சக்தி தான் எனக்குப் பேராதரவாய், பக்க பலமாய், ஊக்கப் பொருளாய் இருக்கின்றது, என்பதை எண்ணும்போது, பெருமிதமும், பூரிப்பும் அடைகின்றேன்.

எனது தருமபுரி மாவட்டச் சுற்றுப் பயணத்தையும், பர்கூர் தொகுதியில் இந்த மாபெரும் விழாவினையும், மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்து கொடுத்துள்ள, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான திரு. செங்கோட்டையன், திரு. கண்ணப்பன், திரு. அழகு திருநாவுக்கரசு மூவருக்கும் என் பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் தொகுதியின் வளர்ச்சிப் பணிகள், தொய்வின்றி நடந்திட வேண்டும் என்பதற்காக, நான் அடிக்கடி அவர்களையும், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களையும் அனுப்பி வைத்து, இங்கே பல நல்ல பணிகளை நிறைவேற்றியுள்ளேன்.

நான் என்ன பணி சொன்னாலும், சொன்ன வேகத்தில் செய்து முடிக்கும் திறமை மிக்க செயல்வீரர்கள் அவர்கள். இயக்கத் தொண்டர்களிடம் பிணைப்பும், பொதுமக்கள் பிரச்சினைகளில் ஈடுபாடும் கொண்டு, ஓய்வுறக்க மின்றி அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை, நான் பாராட்டு கின்றேன். அவர்களின் செயல் திறத்தால், இன்று பர்கூர் தொகுதியில் இச்சீர்மிகு விழா, சிறப்புடன் நடந்தேறியுள்ளது. அதற்காக, இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், இப்பகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், தவறாமல் பர்கூருக்கு வந்து, எனது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத் திற்கும் சென்று, இத் தொகுதியின் வளர்ச்சிப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தி, மிகுந்த அக்கறை காட்டி வருகிறார். அதற்காக, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு, நான் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக் கின்றேன்.

இத்தொகுதியின் நலனில், மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வரும், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும், எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே, பேரறிஞர் அண்ணா; இன்று நான், ஏழை எளிய மக்களின் சிரிப்பிலே, வாழ்வின் அர்த்தத்தையே காண்கின்றேன். அவர்களது மகிழ்ச்சியில், எங்கள் அரசின் நோக்கத்தையும், அதன் நிறைவையும் காண்கின்றேன். அந்த மகிழ்ச்சியை ஏழை எளியவர்களிடம், நிரந்தரமாக நிலைக்க வைப்பதே, எனது தலையாய கடமையாகும். என்று உணர்ந்தவள் நான்.

அந்த நம்பிக்கையை எந்நாளும், உங்களுக்கு வழங்குகின்ற உங்கள் சகோதரியாக, உங்கள் பிரதிநிதியாக, உங்களுக்காக, அல்லும் பகலும் அயராமல், உறங்காமல், தொடர்ந்து பாடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**8.3.93-ல் தருமபுரி மாவட்ட அரசு திட்டப் பணிகள் தொடக்க விழாவில் ஆற்றிய உரை.**

# 'கலைமாமணி' விருது வழங்கும் விழா

**பா**ரம்பரியச் சிறப்பு மிக்க கலைகளை, கலைஞர்களை, பேணி வளர்க்கும் பண்பாட்டு நிறுவனமாகிய, இயல் இசை நாடக மன்றத்தின், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனவைரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

உலகத்தில் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, நமது சொந்த மொழி யாகிய தமிழுக்கு உண்டு. ஆங்கிலத்தை, இயல் ஆங்கிலம், இசை ஆங்கிலம், நாடக ஆங்கிலம் என்று முப்பிரிவாகப் பிரித்துப் பார்ப்பதில்லை. உலகின் மிகப் பழமையான மொழிகளான, கிரேக்கம், இலத்தீனம், வடமொழி, ஹீப்ரு (Hebrew) சீனம், ஆகிய மொழிகளைக் கூட, இப்படிப் பிரித்துச் சொன்னதில்லை. தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டும் தான், இந்தத் தனிச் சிறப்பு இயல்பாகவே அமைந்திருக்கின்றது.

மற்ற மொழிகளிலும் இயல் உண்டு, இசை உண்டு, நாடகமும் உண்டு. ஆனால், மொழியைக் குறிப்பிடும்போது, 'முத்தமிழ்' என்று, தமிழைக் குறிப்பிடுவது போல, வேறு எந்த மொழியையும் அழைக்கின்ற மரபு உலகில் இல்லை.

இயலாய், இசையாய், இனிய கூத்தாய், இப்படி மூன்றாய் விளங்குகின்ற முத்தமிழுக்கு, மன்றம் வைத்து, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்னும் பெயர் சூட்டி, மரபை மங்காது காத்து வருகின்றது நம் அரசு.

கவிதையும் உரைநடையும், இலக்கியத்தின் ஏனைய வடிவங்களும், இயல் என்னும் பெயரில் ஒளி வீசக் காண்கின்றோம். முற்காலம் முதல் தற்காலம் வரை, படைக்கப்பட்டிருக்கின்ற இலக்கியங்கள், காலத்தால் அழியாத மாபெரும் படைப்புகளாக விளங்குகின்றன. அந்த இயலுக்கும் ஏற்ற சிறப்பை, இன்று நாம் வழங்குகிறோம். வாய்ப்பாட்டையும், வகை வகையான இசைக் கருவிகளின் இன்னிசையையும், இசை என்கிறோம்.

எது நம்மை இசைய வைக்கின்றதோ, அது இசை. இறைவனையே இசை என்றும், இசைப்பயன் என்றும், பாடி மகிழ்ந்த பெருமக்கள் நமது முன்னோர்கள். 'ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய், என்னுடைய தோழனுமாய்' என்று, சுந்தரர் தேவாரம் சொல்லி மகிழ்கிறது.

இயலைப் பரப்ப, இசையைப் பயன்படுத்திய ஒரு மாபெரும் வரலாறு தான், நமது பக்தி இயக்க வரலாறு. இடைக்காலத்தில், இன்னிசையால் தமிழ் பரப்பப்படவில்லை. வேறு மொழிகளே பரப்பப்பட்டன. இரண்டாம் தமிழ் என்னும் இசைத்தமிழ், எங்கோ கிடந்தது. எனவே தான், தமிழிசை இயக்கம் என்னும் இயக்கம், இந்த இரண்டாம் தமிழைப் பேணுவதற்காகவே எழுந்தது என்பதைப் பார்க்கிறோம்.

அந்த இசைத் தமிழைப் பேணுவதையும், இலட்சியமாகக் கொண்டது தான், நமது இயல் இசை நாடக மன்றம். உள்ளக் கருத்தை, பாவங்களாக வெளிப்படுத்துவதை, கூத்து அல்லது நாடகம் என்று கூறுகிறோம்.

இசைக் கலையும் நாடகக் கலையும் இணைபிரியாதவை. நாட்டியக் கலைக்கு அடிப்படை பாடல்கள். அந்தப் பாடல்கள் நாட்டுப் பாடல் களாகவும், பக்திப் பாடல்களாகவும், நாட்டியத்துக்கே உரித்தான நாட்டியப் பாடல்களாகவும், விளங்குவதைப் பார்க்கிறோம்.

இந்த இசைக் கலையையும், ஆடற் கலையையும், சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும், போற்றி வளர்த்த ஒரு புகழ் மிக்க மரபு, நம் தமிழ் மரபு. ஆலயங்களும், ஆலயம் சார்ந்த இடங்களும், இந்த அரிய உண்மைக்கு, அற்புதமான சான்றுகளாக இன்றும் திகழ்கின்றன.

இப்படிப்பட்ட முத்தமிழை முறையாகக் காப்பதில், தமிழர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கின்றதோ, அவ்வளவு பொறுப்பு தமிழக அரசுக்கும் இருக்கின்றது.

ஆண்டுதோறும், கலைமாமணி விருது வழங்கி, உணர்ச்சி பூர்வமாக முத்தமிழ் வல்ல பெருமக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றோம்; அதனால் நாம் உவகையடைகின்றோம். கலைக்கு, கற்றவர், கல்லாதவர் என்ற பேதமில்லை. ஆகவே தான், இந்த மண்ணிலே மலர்ந்து, மணம் பரப்பி வருகின்ற, நாட்டுப்புறக் கலைகளுக்கும், நாட்டுப்புறக் கலை வித்தகர்களுக்கும், அதே சிறப்பை நாம் செய்து வருகிறோம்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், இந்தச் சீரிய பணியில் ஈடு பட்டிருப்போரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குக் காலத்தோடு நன்றி செய்கிற கடமையைச் செய்து வருகிறது. அந்த வகையில், இன்று 42 முத்தமிழ் வித்தகர்கள், ‘கலைமாமணி’ விருதினையும், வறுமையில் வாடிக் கொண்டிருக்கும், 5 கலைமாமணி விருது பெற்றவர்கள், ‘பொற்கிழியும்’ பெறுகின்றார்கள்.

கடந்த ஆண்டு, சகோதரர் ஆர்.எஸ். மனோகர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின் பயனாக, கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை, 250 ரூபாயிலிருந்து உயர்த்தப்பட்டு, 400 ரூபாயாக வழங்கிட நான் ஆணை யிட்டேன். எனக்கு நன்றாகத் தெரியும்; வறுமையை நடித்துக் காட்டுவது மட்டுமல்ல, அதை அனுபவித்து உழலும், பல்வேறு கலைஞர்கள் நம் நாட்டில் இருக்கின்றார்கள் என்று. இவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதைச் சிந்தித்து, அரசுக்குச் சொல்கின்ற அவசியமும் கடமையும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்திற்கு உள்ளது என்பதை, இந்தத் தருணத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கலைஞர்களின் வழிக்காட்டியாக, கலைஞர்களுக்கு உதவுகின்ற நிழல் மரமாக இருந்த, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின்

வழியில் நடக்கும் நான், கலைகளையும், கலை வித்தகர்களையும், என்றென்றும் கட்டிக் காப்பேன் என்பதை, இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கலைமாமணி விருது பெறுகின்ற பெருமக்கள் அனைவருக்கும், பொற்கிழி பெறும் வித்தகர்களுக்கும், சுழல்கேடயம் பெறும் நாடகக் குழுவினருக்கும், கேடயம் பெறும் கலை நிறுவனத்தினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தனது சீரிய பணியை மேலும் தொடரவேண்டும் வளர வேண்டும் என வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

**11.3.93 அன்று சென்னையில் நடந்த கலைமாமணி விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.**

# எல்லா மதத்தினரும் இணைந்து வாழும் இனிய தமிழகத்தின் பெருமை காப்போம்!

வரலாற்றுச் சிறப்புமிக்க வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்திற்கு, வருகை தருவதிலும், இங்கே எழுச்சியோடு திரண்டு இருக்கின்ற, இலட்சக் கணக்கான அன்பு நெஞ்சங்களைச் சந்திப்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செல்லுகின்ற திசைகளில் எல்லாம், நாட்டு மக்கள் என் மீது, காட்டி வருகின்ற அன்பும், பாசமும், பரிவும், ஆதரவும், நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்த்து, நான் நெகிழ்ந்து போகிறேன். அதே நேரத்தில், மகத்தான இந்த மக்கள் சக்தியின் உணர்வுகளுக்கு, நான் எப்படி கைம்மாறு செலுத்தப் போகின்றேன் என்பதை எண்ணி மலைத்து நிற்கிறேன். நான், உங்களைச் சந்திக்க வருகின்ற இதுபோன்ற வேளைகளில், கை நிறையத் திட்டங்களுடனும், உதவிகளுடனும் வந்தாலும், அவை, நான் எண்ணும் அளவிற்கு, உங்களுக்குச் செய்த கைம்மாறாகக் கருத முடியாது என்பதை நன்கு அறிவேன். எனவே தான், உங்கள் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், இனிய வாழ்விற்கும், அயராது பாடுபடுகின்ற பழக்கத்தினை, எனது அன்றாடப் பணியாக ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு வருகின்றேன். மேலும், இதனை என் வாழ்நாள் கடமையாகக் கருதி, தொடர்ந்து பணியாற்றி வருகின்றேன். இந்த எண்ணங்களுக்கு உருக்கொடுக்கிற வகையில்தான், இன்னும் புதிய புதிய திட்டங்களைத் தீட்டவேண்டும். மேலும் மேலும் நலப் பணிகள் தொடங்கப் பட வேண்டும், புதுப்புது உதவிகள் வழங்கப்பட வேண்டும், என்று என் உள்ளம் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

உங்கள் அன்புச் சகோதரியான என்னிடத்தில், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்கூடாகக் காணும்போதெல்லாம் நான் கடந்து வருகின்ற தடைகளும், இடர்ப்பாடுகளும், தூள்தூளாக மறைந்து போய்விடுகின்றன. அவைகளைத் தூசாக, துச்சமாக மதிக்கும் மனத்தெம்பும், தைரியமும், எனக்கு தானே வருகிறது.

தற்போது வளர்ந்துவரும் தொழில்களால், வரலாறு படைத்துக் கொண்டி ருக்கும் மாவட்டம் இந்த மாவட்டம். சட்டமேதை, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கின்ற இந்த மாவட்டத்தில், உண்மையான ஒருமைப்பாடும், ஒற்றுமையும், ஓங்கி நிற்பதைக் கண்டு, உளம் மகிழ் கின்றேன்.

### அம்பேத்கரின் விளக்கம்

மாபெரும் தலைவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள், எது ஜனநாயகம் என்று, ஒருமுறை மிக அழகாக விளக்கம் கூறினார். அந்த விளக்கத்தில்,

''சகோதரத்துவமும், ஜனநாயகமும் வெவ்வேறானவையன்று. ஜனநாயகம் என்பது, ஒரு அரசியல் முறை மட்டுமன்று. ஒருவருக்கொருவர், அன்பு செலுத்துகிற, ஒரு சமூக வாழ்வேயாகும்'',- என்று குறிப்பிட்டார்.

இது அண்ணல் அம்பேத்கர் அவர்கள், ஜனநாயகத் தத்துவத்திற்குத் தந்த, அரிய, அற்புதமான விளக்கம் ஆகும். ஜனநாயகம் என்பது, சகோதரத்துவம் தான் என்று, ஆணித்தரமாக அறைகூவிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தத்துவத்தைத்தான், உங்கள் சகோதரியாகிய நான், இன்று செயல்படுத்தி வருகின்றேன்; உங்கள் அரசும் செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஜாதி மத பேதமற்ற சமதர்மச் சமுதாயத்தைத்தான், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமைக்க விரும்பினார்கள். அந்தச் சமுதாயத்தில், எல்லோரும் சகோதரர்களாக இருப்பார்கள்; இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பெருந்தகையோர் தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டனர். அந்தத் திராவிட இயக்கத் தலைவர்களின் இன்றைய பிரதிநிதியாக உங்கள் முன் நிற்கும் நான், ஒன்றைத் திட்டவட்ட மாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். திராவிடப் பாரம்பரியத்தின் பரிசாக, இன்று எல்லாச் சமய மக்களும், நல்லிணக்கத்தோடு தமிழகத்தில் வாழ வகைசெய்துள்ள நிலையை, எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காரணத் திற்காகவும், பாதிக்க, எங்கள் அரசு அனுமதிக்காது என்பதைத் தெளிவு படுத்த விரும்புகின்றேன்.

ஏனென்றால், சமீபகாலமாக ஒரு சில அரசியல் கட்சியினர், மக்களைக் குழப்பும் முயற்சியில், தொடர்ந்து தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும், என் மீது கொண்டிருக்கும் அழுத்தமான பிடிப்பும், பாசமும், அளவிட முடியாத தன்மையில் உள்ளதை அறிந்து, என் மனம் நெகிழ்கிறது. ஆனால், அதுவே இன்று பலர் கண்களை உறுத்துவதையும், என்னால் உணர முடிகிறது; என் மீது பலரும், இன்று குற்றமும் குறையும் கூறுவதற்கு, அதுதான் காரணம் என்பதை, என்னைவிட நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாட்டு மக்கள், என் மீது இந்த அளவுக்கு ஆழமான, அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், மக்களோடு மக்களாய், மக்களின் பிரதிநிதிகளாய், மக்கள் சக்தியை அறிந்து, மக்களின் நன்மைக்கு என்றே, மக்களின் நம்பிக்கைக்கு உரியோராய், மக்கள் நலப் பணியாற்றி வந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகிய மக்கள் சக்தியின் மகோன்னதத் தலைவர்களின் அடிச்சுவட்டில் இருந்து துளியும் பிறழாது, என் பொது வாழ்வுப் பாதையை அமைத்துக்கொண்டு, மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள் ளேன், என்ற மக்களின் மாபெரும் நம்பிக்கையே, என்னை இந்த அளவு உயர்த்தி உள்ளது.

## நானும் சிறுபான்மைச் சமுதாயத்தினரும்

இது கண்டு பொறாத சிலர், என்னோடு நேரடியாக மோத முடியாது, என்ற முடிவுக்கு வந்த பலர், இல்லாத பொல்லாத பொல்லாங்குகளை, என் மீது சுமத்திட, அன்றாடம் படாத பாடுபட்டு வருகிறார்கள் என்பதை, நீங்களே பார்த்துவருகிறீர்கள்.

சமீப காலமாகச் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு - குறிப்பாக இஸ்லாமிய இனத்திற்கு, நான் எதிரான கருத்துக் கொண்டுள்ளேன் என்ற நச்சுக் கருத்தை, நாட்டு மக்களிடையே பரப்பி, அவர்களைத் திசை திருப்ப முயன்றுவருகின்றர். எனவே கடந்த கால நிகழ்ச்சிகளையும், சில சம்பவங் களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது அவசியம் என்று கருதுகின்றேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டு, பொது மக்களை அதிக அளவில் சந்திக்க முடியாதிருந்த ஒரு காலகட்டத்தில், அவர் சார்பில் மக்களைச் சந்திக்க, என்னைத் தேர்ந்தெடுத்தார் என்பதை, நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். அவர் என்னை, முதன்முதலாகத் தேர்தல் பணியில் ஈடுபடச் செய்த இடம், இஸ்லாமியர்கள் மிகுந்திருந்த திருச்செந்தூர் தொகுதி. என்னுடைய அரசியல் வாழ்க்கையின் முதல் சவால் அது.

தங்கள் வீடுகளை விட்டுச், சாதாரணமாக வெளியே வராத இஸ்லாமியச் சகோதரிகள் பல்லாயிரம் பேர், நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்துள் ளேன் என்பதை அறிந்து, வெளியில் வந்து என்னை வாழ்த்தியதோடு மட்டுமல்லாமல், எங்கள் வேட்பாளர் வெற்றி பெறுவதில் இருந்த, மிக நெருக்கடியான சூழ்நிலையை மாற்றி அமைத்து, நாங்கள் வெற்றி பெறச் செய்திட்ட உதவியையும், அவர்கள் எனக்குப் பெற்றுத் தந்த முதல் வெற்றி யையும், என்னால் எப்படி மறக்க முடியும்?

இஸ்லாமியச் சகோதர சகோதரிகளின் பேராதரவு மட்டும் அன்று எனக்குக் கிடைத்திருக்காவிட்டால், என்னுடைய பொது வாழ்க்கையின் முதல் முயற்சியிலேயே தோல்வி அடைந்திருப்பேன். என்னுடைய அந்த வெற்றிக்கு முழுமுதற் காரணமாக இருந்த அந்த அன்புச் சகோதர சகோதரிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எண்ணம் என் நெஞ்சில் ஏற்படுமா?

## எனக்காக உயிர்ப்பலி

இன்னும் உணர்ச்சி பொங்க, ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1989-ல் சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், இரு அணிகளாகப் பிரிந்திருந்த நாங்கள், வெற்றி வாய்ப்பை இழந்து, அதன் காரணமாக அன்றைக்கு தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், எங்கள் உடன்பிறப்புகள் வேட்டையாடப்பட்ட போது, எனக்காக முதல் உயிர்ப்பலி கொடுத்த செயல் வீரர், சென்னை நகரில் வாழ்ந்த ‘ஆலந்தூர் ஜஹாங்கீர்’ என்ற இஸ்லாமியச் சகோரர்தான், என்பதைக் கண்ணீர் மல்க நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அளவுக்கு, என் மீது உயிரையே வைத்துள்ள இஸ்லாமிய சமுதாயத்தினரைத்தான், என்னிடமிருந்து பிரித்துவிட சிலர் முயன்று வருகின்றார்கள்.

நாடாளுமன்றத்திற்கு நான் முதன்முதலில் தேர்வு செய்யப்பட்டு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அமர்ந்திருந்த அதே இருக்கையில் அமரும் அரிய வாய்ப்பைப் பெற்ற அன்றும் சரி; அப்பேரறிஞர் அண்ணாவும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அமர்ந்திருந்த தமிழக முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்து, பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள இன்றும் சரி; என் உணர்வுகளும், எண்ணங்களும், சிறுபன்மையினரைப் பாதுகாப்பதிலும், அரவணைப்பதிலும் இருந்து வருகின்றது என்பதையும், அவர்களைப் பாதிக்கும் எந்த முயற்சியையும், முறியடிக்கும் திடமான நெஞ்சுறுதி, எனக்கு உள்ளது என்பதையும், தெளிவு படுத்த விரும்புகிறேன்.

## பாபர் மசூதி - இராமர் கோயில்

பிரச்சினை ஆக்கப்பட்டுவிட்ட 'பாபர் மசூதி - இராமர் கோயில்' விவகாரத்தில், எதிருக்குப் புதிரான கருத்துக்கொண்டவர்கள், சிறிதும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்றி, இதனைப் பூதாகரமாக்கினர். ஒரு சாரார், மசூதி உள்ள இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்றும், இன்னொரு சாரார், மசூதி மட்டுமே இருக்க வேண்டும் என்றும், நிலை கொண்டனர். எத்தரப்பினரும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே, என்ற ஆதங்கம்தான் எனக்கு.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், போற்றி வளர்த்துள்ள சமயப் பொறையுடமை மிக்க, தமிழகத்தின் சார்பில் சென்று தேசிய ஒருமைப்பாட்டுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட நான், எப்படி ஒரு சாராருக்குச் சாதகமாகக் கருத்தை வெளியிடமுடியும்?

எனவே தான், நான் முதலமைச்சர் ஆனவுடன், 1991 நவம்பர் திங்களில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், இப்பிரச்சினை தொடர்பான விவாதத்தை, பாபர் மசூதியா? அல்லது ராமர் கோயிலா? என்று இல்லாமல்; ராமர் கோயிலும்- பாபர் மசூதியும், என்றுதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று, அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தேன். அதாவது,

"In so far as our party is concerned, we will support any decision that respects the rights ofthe minorities, acknowledges the freedom of the majority in this country to pursue its worship in a free and fair manner, and satisfies the aspirations of our people. the discussion need not be on RAM JANMA BHOOMI Vs BABRI MASJID, but could and ought to be on RAM JANMA BHOOMI AND BABRI MASJID."

*- என்று குறிப்பிட்டேன். இந்த நிலையில் சிறு மாற்றமும் இன்றிதான், தொடர்ந்து சொல்லிவந்துள்ளேன்.*

கடந்த 1992 நவம்பரில் நடந்த, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்திலும், இதையேதான் மீண்டும் வலியுறுத்தினேன். மேலும், நான் மட்டும் தான், பாபர் மசூதி ஆதியிலேயிருந்து இருந்ததா, இல்லையா, என்கிற வரலாற்றுப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது, இந்த நாட்டு மக்களை நிம்மதியாக வாழ வழிவகை செய்யுங்கள். மசூதி அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும், என்றும் தெரிவித்தேன்.

## இன்று நிலை என்ன?

அப்போது என் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்தார்களா? இல்லை. நான் கூறிய நல்ல கருத்துக்களை அன்று புறக்கணித்ததோடு மட்டுமன்றி, என் மீது புழுதியும் வாரித் தூற்றினார்கள். பாபர் மசூதி எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக்கூடாது; பாதுகாக்கப்பட வேண்டும்; நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி, ராமர் கோயில் கட்டவேண்டும் என்று, இரு தரப்பினரும் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தில் நான் தெரிவித்த கருத்துக் களை, எள்ளி நகையாடினர்.

இன்று நிலை என்ன? சரித்திரச் சான்றாகப் பல்லாண்டுக் காலம், நமது நாட்டின் சகோதரத்துவக் கொள்கையின் சின்னமாகத் திகழ்ந்த, பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதற்கு யார் காரணம்?

பாபர் மசூதி பாதுகாக்கப்பட வேண்டும், என்று கூறிய நான்தான் காரணம் என்று, சிலர் கூறுகின்றனர். இதில் என்ன நியாயம் இருக்கின்றது? கர சேவையை நான் தான் அனுமதித்தது போன்றும், பாபர் மசூதியை நான்தான் இடிக்கச் சொன்னது போன்றும், ஒரு மாயையை ஏற்படுத்த, என்மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர், தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்கள்.

## இது நியாயமா?

அந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு பாரதப் பிரதமருக்குத் தான், இப்பிரச்சினை குறித்து முடிவெடுக்க, அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டன. அந்த முடிவிற்கு என்னுடைய ஆதரவைப் பிரதமருக்குத் தெரிவித்ததோடு, பி.ஜே.பி. தலைவர் திரு. அத்வானி அவர்களுக்கும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க, உதவிட வேண்டும் என்று கோரி கடிதமும் எழுதினேன்.

இத்தனை முயற்சிகள் எடுத்துக்கொண்ட என் மீது, யாரோ செய்த தவறுக்காகக் குற்றம் சாட்டுகிறார்கள், குறை கூறுகிறார்கள். இது நியாயமா? நீங்கள் தான் நல்லதொரு முடிவு கூற வேண்டும்.

நிச்சயமாகக் கூறிக்கொள்கிறேன். நான் தெரிவித்த கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து, அதன்படி நடவடிக்கைகள் தொடர்ந்திருந்தால், இப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டிருக்கும்.

இதுபோன்ற அவல நிலை ஏற்பட்டிருக்காது; இஸ்லாமியச் சகோதரர்களின் உணர்வுகள் பாதுகாக்கப்பட்டிருக்கும், என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை நிலை இவ்வாறு இருக்க, நான் சொன்ன கருத்துக்களை, அரசியல் ஆதாயத்திற்காக இருட்டடிப்புச் செய்து விட்டு, நான் சிறுபான்மை முஸ்லீம் சகோதர சகோதரிகளுக்கு, விரோதமாக இருப்பது போல சிலர் இன்றும் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அவர்களை நீங்கள் நம்ப வேண்டாம். எந்தக் கால கட்டத்திலும், எக்காரணத்திற்காகவும், சிறுபான்மையிருக்கு முரண்பட்ட எந்த இயக்கத்தினருடனும், எங்களுக்குத் தோழமை இருக்காது என்பதைத் தெளிவுபட அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்.

ஏக பரம்பொருளை வழிபடும் இஸ்லாமியச் சகோதரர்களும், கிறிஸ்தவச் சகோதரர்களும், இந்துச் சகோதரர்களும் சகோதரிகளும் இணைந்து வாழும் நம் இனிய தமிழகத்தின் பெருமையினை, எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்க முயலும் சக்திகளை, முறியடிக்க, எங்கள் அரசு தயங்காது, தவறாது, என்று உறுதி கூறுகின்றேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 21 மாத காலத்தில், தமிழக மக்களுக்காக - குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்காக, நலிவுற்ற சிறுபான்மையினருக்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, உங்கள் அரசு ஆற்றியுள்ள அரும் பணிகள் அனைத்தையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களுக்கு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும், தற்போது என்னுடைய தலைமையில் அமைந்துள்ள அரசின் ஆட்சிக் காலத்திலும், செய்துள்ள நன்மைகள் பற்றி, இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. புரட்சித் தலைவர் ஆட்சிக்கு முன்பு, வக்பு வாரிய நிறுவனங்களின் மராமத்துக்காக, ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தது. இதை மாற்றி படிப்படியாக, 3 இலட்சம் ரூபாய், 4 இலட்சம் ரூபாய், 5 இலட்சம் ரூபாய் என்று, 1977-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை, உயர்த்தி ஆணையிட்டார்கள்.

2. 1984 மற்றும் 1985-ஆம் ஆண்டுகளுக்கு, மேற்சொன்ன காரியங்களுக்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்.

3. வக்பு நிறுவனங்களுக்கு நன்கொடை அளிக்கப்படும் சொத்துக்களுக்கு, சொத்து மதிப்பு எவ்வளவாக இருந்தாலும், 100 ரூபாய் மட்டுமே முத்திரைக் கட்டணம் செலுத்தினால் போதும் என்று ஆணையிட்டார்கள்.

4. சென்னை நகரில் வக்பு வாரியத்திற்கு அலுவலகம் கட்ட, 13 ஆயிரத்து 204 சதுர அடி நிலத்தை, மத்திய அரசின் பாதுகாப்புத் துறையிடம் இருந்து பெற்று, அதற்கான விலை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 692 ரூபாய் தொகையை, வக்பு வாரியத்திற்கு மானியமாக வழங்கினார்கள்.

5. 9.8.1980 அன்று, சட்டமன்றத்தில் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

6. 1985-ஆம் ஆண்டு இஸ்லாமிய சமுதாயத்தினரின் (1) அன்சர் (2) ஷேக் (3) சையத் ஆகிய பிரிவினரை, பிற்பட்ட வகுப்பினராக அறிவித்தார்கள்.

7. உலமா பென்ஷன்: 1981-ஆம் ஆண்டு, 60 வயதிற்கு மேற்பட்டவராகவும், 20 ஆண்டு முஸ்லீம் மத நிறுவனங்களில் பணியாற்றியவர்களுக்கு, மாதந்தோறும் 250 ரூபாய் ஓய்வூதியம் வழங்க உத்தரவிட்டார்கள். அப்போது 400 நபர்கள் பயனடைந்தார்கள். படிப்படியாக அதனை 1,400 நபர்கள் என்று உயர்த்தினார்கள்.

நான் முதலமைச்சரான பிறகு இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்த நன்மைகள்:

1. இஸ்லாமிய சமுதாயத்தினரின் மயானங்களைச் சுற்றி சுவர் கட்ட, சென்ற ஆண்டு 2 இலட்சம் ரூபாய், எளிய கடனாக அரசு அனுமதித்தது. இத்தொகை இந்த ஆண்டு மேலும் அதிகரிக்கப்பட உள்ளது.

2. தமிழ்நாடு வக்பு வாரியம், அதன் கீழ் உள்ள நிறுவனங்களிலிருந்து பெறப்படும். 6 சதவிகித சகாயத் தொகையைக் கொண்டு, நிர்வாகச் செலவு செய்து வருகிறது. இத்தொகை அதன் நிர்வாகச் செலவிற்குப் போதவில்லை என்பதால், இதற்காகச் சென்ற ஆண்டு சிறப்பு இனமாக 5 இலட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்கியது.

3. வக்பு வாரியத்திற்குப் புதிய கட்டடம் கட்ட, 5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

4. சிறுபான்மையினர் நலம் கருதி, சிறுபான்மையினர் நல ஆணையம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தின் தலைவராக, திருமதி பாதர் சையீத் என்ற பெண்ணை, முதன் முதலாக நியமித்துள்ளோம்.

5. உலமா பென்ஷன் பெறுபவர்கள் எண்ணிக்கையை, 1400-இல் இருந்து தற்போது 1500-ஆக உயர்த்தியுள்ளோம்.

6. 1991-ஆம் ஆண்டு, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, காயிதே மில்லத் அவர்களின் பெயரைச் சூட்டி உள்ளோம்.

- இப்படி, எங்கள் ஆட்சிக் காலம் முழுவதும், இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களை அன்புடன் அரவணைத்து வந்துள்ளோம். அவ்வாறே இதர சிறுபான்மையினப் பெருமக்களுக்கும் நன்மைகள் பல செய்துள்ளோம். அனைத்து சிறுபான்மையினப் பெருமக்களையும் தொடர்ந்து அரவணைத்து, பாதுகாப்புடன், அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மேலும் பல புதிய புதிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தமிழகத்தில், உடுத்த மாற்று உடையின்றி, கந்தலையே கசக்கிக் கட்டிக் கொண்டிருந்த, ஏழை எளியோருக்கு, ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே என் நெஞ்சத்தில் தோன்றியது. அதன் வெளிப்பாடுதான், தமிழகத்தில் வாழும் ஒரு கோடியே 20 இலட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கும், நகரங்களில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை-எளியவர்களுக்கும், இலவச சேலை-வேட்டி வழங்கும் திட்டம். கடந்த இரு ஆண்டுகளாகப் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இலவச சேலை-வேட்டி வழங்கினோம். அடுத்த ஆண்டும் இத்திட்டம், தொடர்ந்து சிறப்பாக நிறைவேற்றப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு, கூடுதலாக மருத்துவ வசதி கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன், மருத்துவர்களே கிராமங்களுக்குச் சென்று, மருத்துவ முகாம்களை நடத்தி, மக்களைச் சந்தித்து, நோயை அறிந்து, அங்கேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும், மகத்தான மருத்துவ நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாபெரும் வெற்றியும் கண்டு உள்ளோம்.

மாவட்டம் தோறும் மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை, விரைவாகவும் முறையாகவும் பரிசீலனை செய்து, தகுதியுள்ள அனைவரையும் தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், உதவிகள் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளதை, நீங்கள் நன்கு அறிவீர்கள்.

## சமுதாய வீதியில்...

சமுதாய வீதியில், விலை போகாமல் வீசி எறியப்படுகிற பூக்களாக, பெண் குழந்தைகள், இத்தனைக் காலம், இந்தத் தேசத்தில் அடைந்த துன்பத்திற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று உறுதி கொண்டேன். எனவே தான் அண்மையில், பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டத்தையும், பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் திட்டத்தையும், அறிமுகப் படுத்தி இருக்கிறேன்.

'மங்கையராகப் பிறப்பதற்கே, நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!' என்று, கவிஞர்கள் பெண்களின் புனிதத்தைப் பறைசாற்றினாலும், எதார்த்த நிலை, வேறாகவே உள்ளது. பிறக்கப் போகிற குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடித்துச் சொல்லும் திறமையை, இன்று விஞ்ஞானம் பெற்றிருக்கிறது.

இது வளர்ச்சிதான் என்றாலும், அந்த அறிவியல் தகவலை அறிந்து கொண்டு, பெண் குலத்தின் ஆணிவேரையே அறுத்து எறிகிற வேதனை, தொடர்கிறது.

இந்தக் கொடுமைக்கு, சமூகம், மவுன சாட்சியாக இருக்கலாம். ஆனால் பெண்ணுரிமைக்குப் போராடிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், வகுத்த வழியிலே நடைபோடும் பொறுப்பான அரசு, ஒரு பெண்ணையே முதல்வராகக் கொண்ட இந்த அரசு, எப்படி இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?

வெற்றி பெறுகிற ஒவ்வொரு ஆணுக்குப் பின்னும், ஒரு பெண் இருக் கிறாள் என்பது, உலகறிந்த . தத்துவம். இருந்தாலும், அந்தத் தத்துவத்தை உணராத சில மக்களும், நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். 'பெண் குழந்தையா? அது வேண்டாம். கருவிலே கலைத்து விடலாமா? அவ்வாறு கலைக்க முடியாவிட்டால், பிறந்த பெண் சிசுவை அழித்து விடலாமா?' என்ற அவல நிலை, ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளில் நிலவி வருகின்றது. ஆனால், இன்று உங்கள் சகோதரியான என் கையில்தானே, தமிழகத்தின் கோடானு கோடி மக்கள், ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக் கின்றீர்கள்? நானும் ஒரு பெண் தானே!

திராவிட இயக்கத்தின் அடித்தளமே, பெண்ணுக்குச் சம உரிமை, என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில் - தானே அமைக்கப்பட்டது? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் பெண்களின் உயர்விற்காகவும் உரிமைக்காகவும் எவ்வளவு பாடுபட்டனர். இத்தனை முயற்சிகள் மேற்கொண்ட பின்னரும், தமிழகத்தில், பெண் குழந்தைகளை அழிக்கும் எண்ணம், ஒரு சிலர் மனதில் தோன்றுகிறது என்றால், அவர்கள் எத்தனைக் கீழ்த்தரமானவர்கள்?

இந்த மாபெரும் கொடுமைக்கு, நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற நல்லெண்ணத்தில் தான், புதியதொரு புரட்சிகரமான திட்டத்தை, அரசு தீட்டியது. கருவில் வளரும் குழந்தை, பெண் என்று அறிந்து, அதனை வேண்டாம் என்று எண்ணும் பெற்றோர்கள், தயவுசெய்து அந்தச் சிசுவை அழித்துவிடாதீர்கள். அவர்களை வளர்த்துக் காக்க, எங்கள் அரசு இருக்கின்றது. பெண் குழந்தைகளைப் பெற்றெடுங்கள். அவர்களை வளர்த்து வாழ்வு அளிக்க வசதி இல்லை என்றால், அருகிலுள்ள சமூக நலத்துறை இல்லங்களில் ஒப்படையுங்கள். நாங்கள் அவர்களை வளர்க் கின்றோம் என்று அறிவித்தேன். பல சமூக நலத்துறை இல்லங்களுக்கு வெளியே, தொட்டில்கள் கட்டி வைக்கச் சொல்லி இருக்கின்றேன். பெற்றோ ருக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தைகளைப் பிறருக்குத் தெரியாமல், அந்தத் தொட்டில்களில் போட்டுவிட்டுப் போகலாம்.

அவர்களுக்கு வேண்டாத அந்தப் பெண் குழந்தை, அரசுக்கு வேண்டும், தமிழகத்திற்கு வேண்டும். ஏனெனில், தாயாக ஒரு பெண் வேண்டும் - தாரமாக ஒரு பெண் வேண்டும் - தமக்கையாகக் கூட ஒரு பெண் வேண்டும்- ஆனால் தங்கள் குழந்தையாக ஒரு பெண் வேண்டாம் என்று எண்ணும் எத்தர்களுக்குப் பெண் குழந்தை வேண்டாம் [illegible]றாலும், நல்லதொரு சமுதாயத்தை நாளை உருவாக்க, அவர்கள் [illegible]ளுக்குத் தேவை, இந் நாட்டுக்குத் தேவை. எனவே அவர்களை ஏற்று, வளர்த்து, காக்கும் பொறுப்பை, அரசே ஏற்றுக்கொண்டு உள்ளது. இனி எந்தப் பெற்றோரும், பெண் குழந்தைகளை அழிக்க வேண்டிய அவசியமில்லை. இத்திட்டத்தைத் தயவுசெய்து அவர்கள் தயங்காமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அரசின் ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் புரட்சிகரமான அரசாக, உங்கள் சகோதரியின் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் கண்கூடாகக் காண்கின்றீர்கள். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும், உரிய உதவிகளைச் செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களைப் பாதுகாக்க, எங்கள் அரசு என்றுமே தயங்கியதில்லை.

## ரூ.502 கோடிக்கான திட்டங்கள்

உங்களின் அன்புச் சகோதரியாகிய நான், இன்று கை நிறைய உதவிகளையும், மனம் நிறையத் திட்டங்களையும், சுமந்து கொண்டுதான் உங்கள் மாவட்டத்திற்கு வந்து இருக்கின்றேன்.

உங்கள் மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, 502 கோடி ரூபாய்க்கான திட்டங்களோடு வந்திருக்கின்றேன் என்பதை, மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

நான் சட்டப்பேரவையில் 1991-ஆம் ஆண்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய பொழுதே, தமிழகத்தில் அதிக அளவில் ஏற்றுமதி தொழில் செய்யும் நகரங்களுக்கு, அடிப்படை வசதிகளை அமைத்துத் தரும் திட்டங்களை, அரசு வகுத்து நிறைவேற்றும் என்று தெரிவித்தேன். அதன் அடிப்படையில், இம்மாவட்டத்தின் முக்கியத் தொழிலான, தோல்பொருள் பதனிடல், மற்றும் தயாரித்தல் ஆகியவற்றில், பல ஆண்டுகளாக இந்தியாவிலேயே முன்னணியில் இருந்துவரும் ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப்பேட்டை, மற்றும் பேரணாம்பட்டு ஆகிய பகுதிகளை, நவீன வசதிகளுடன் கூடிய, ஏற்றுமதி நகரங்களாக்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள், மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு, மத்திய அரசு, உலக வங்கி, மற்றும் இதர நிதி நிறுவனங்களின் உதவியுடன், இந்தத் திட்டத்தினை ஐந்து ஆண்டுகளுக்குள் செய்து முடிக்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் இந்த மாவட்டத்தின் தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன். மேலும், அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ், இம்மாவட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட பணிகளைத் திறந்து வைத்ததிலும், நலத்திட்ட உதவிகளை இம்மாவட்ட மக்களுக்கு வழங்கியதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தாங்கள் தேர்ந்தெடுத்த முதலமைச்சரை, சந்திக்க முடியாது என்ற ஒரு நிலை, தமிழக மக்களுக்கு, என் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது, என்ற எனது உறுதியான முடிவின் அடிப்படையில் தான், இதுவரை சென்னை, தர்மபுரி, தென்னார்க்காடு, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், கோவை, பெரியார், சிதம்பரனார், திருச்சி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களில், அரசு விழாக்களில் கலந்து கொண்டும், திருநெல்வேலி, சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்தும் வந்துள்ளேன்.

இப்படி, மக்களைச் சந்திப்பதற்கு, நான் கொடுத்து வரும் முக்கியத்துவத்தின் தொடர்ச்சியாக, இன்று, இங்கே, வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட மக்களாகிய உங்கள் முன் நிற்கின்றேன்.

## தேர்தல் கருத்துக் கணிப்புகள்

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும், ஏழை, எளியோரின் பாது காவலர்களையும், எவராலும், என்றைக்கும், அசைக்க முடியாது என்ற திடமான நம்பிக்கை, எனக்கு இருக்கிறது. மக்கள் மத்தியில், அரசியல் கட்சிகளுக்கு உள்ள செல்வாக்கைக் கணக்கிட்டுச் சொல்லுவதாகச் சில பத்திரிகைகள் கருத்துக் கணிப்புகளை வெளியிடுகின்றன.

அவை, கல்லூரி மாணவர்களைக் கொண்டு சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலோ, அல்லது ஒரு பத்திரிகையின் வாசகர்களிடமிருந்து பெறப்படும் பதில்களின் அடிப்படையிலோ, கணக்கிடப் படுபவை. இவற்றில், குறிப்பிட்ட சிலர் மட்டுமே கலந்துகொண்டு, கருத்துக் களைச் சொல்கின்றார்கள். எனவே, பொதுவாக இவை, மக்களின் ஏகோபித்த கருத்துக்களாக அமைவது கிடையாது. ஏன்? - என்னையே எடுத்துக் கொண்டால், இதுவரை பல முறை கருத்துக் கணிப்புகள் செய்து வெளியிட்ட பத்திரிகைகள் எதிலும் - நான் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவேன், முதலமைச்சர் ஆவேன் என்ற கருத்துச் சொன்னதில்லையே!

அவர்கள் கணிப்புகள் எல்லாம் தவறென்று, தமிழக மக்கள் நிரூபித்துக் காட்டினர். எனவே, எப்பொழுதுமே இதுபோன்ற கருத்துக் கணிப்புகளின் முடிவுகளுக்கு, நான் மதிப்புக் கொடுப்பதில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளில் உள்ள, சில ஆயிரம் மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் அமையும், இதுபோன்ற ''கருத்துக் கணிப்புகள்', பொது மக்களின் ஏகோபித்த உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக எப்போதும் அமைவதில்லை. ஏனென்றால், பத்திரிகைகளில் வரும் இந்த முடிவுகளைப் பார்த்துவிட்டு, எங்களுக்கு ஓட்டளிக்கும் மக்கள் யாரும் தங்களது ஆதரவைத் தருவது பற்றித் தீர்மானிப் பதில்லை.

எனக்கு என்று ஒரு கணிப்பு உள்ளது. அதுதான் நான் மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது, காண்கின்ற மக்களின் முகங்கள். அவற்றில் காணப்படும் ஆர்வம், அன்பு, மகிழ்ச்சி, ஆகிய உணர்வுகளே, எனக்கு உள்ள ஆதரவு என்ன என்பதைத் தெளிவாக எடுத்து உணர்த்துவதாக நான் கருதுகின்றேன். நான் ஒவ்வொரு முறை சுற்றுப் பயணம் செல்லும் பொழுதும், சந்திக்கின்ற மக்களின் கண்களில் வீசுகின்ற ஒளியினைக் கொண்டே, அவர்களின் நெஞ்சங்களை என்னால் எடைபோட முடிகிறது. நாளுக்கு நாள், நான் செல்லும் இடங்களில் எல்லாம், மக்களின் எழுச்சி கூடிக்கொண்டே வருவதை நான் காண்கின்றேன். நாங்கள் வளர்ந்துகொண்டு வருவதையும் நான் உணர்கின்றேன்.

தமிழக மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, அவர்களின் பேராதரவைத் தந்து, அவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பை எனக்கு நல்கி இருக்கிறார்கள்.

மக்கள் ஆதரவே, மகத்தானது என்தை உணர்ந்திருப்பவள் நான். மக்கள் பணியே மகேசன் பணி என்று கொண்டிருப்பவள் நான். எனவே எனக்கு உங்கள் ஆதரவு உள்ளவரை எந்தச் சக்தியாலும் எங்களை நெருங்க முடியாது, அசைக்க முடியாது.

**உங்களுக்கு நான் - எனக்கு நீங்கள்**

நான் எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. என் மீது எத்தனை எத்தனையோ குற்றச்சாட்டுக்களையும், குறைபாடுகளையும், சிலர் திட்டமிட்டே கூறி வந்தாலும், உங்களுக்குப் பணிபுரிய நானும், என் மீது நம்பிக்கை வைத்து, பேராதரவு தர நீங்களும் இருக்கும் வரை, நான் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன். தொடர்ந்து, என் மக்கட் பணியினை, தொய்வில்லாது ஆற்றுவேன் என்று, உறுதி கூறுகிறேன்.

இன்றைய தினம், இந்த மாபெரும் விழாவில், அலை கடல் என, ஆர்ப் பரித்துக் கூடியுள்ள அன்பு உள்ளங்களைச் சந்தித்ததில், நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மாவட்ட மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுக்கும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்ததற்குப் பெருமை அடைகின்றேன்.

இந்த விழா, இத்தனைச் சிறப்பாக நடைபெற, அயராது உழைத்த, உங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர், சகோதரர் ஜி. விஸ்வநாதன் அவர்களையும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் சகோதரி திருமதி இந்திரகுமாரி அவர்களையும், பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். நித்தம், நித்தம், மக்கள் பிரச் சினைகளையே எதிர்நோக்க வேண்டியுள்ள, முக்கிய துறைகள் இரண்டின் பொறுப்பில் உள்ள சகோதரர் ஜி. விஸ்வநாதன், அவற்றை, எங்களை எதிர்ப்பவர்கள் கூட குறைகூற முடியாத அளவிற்கு, மிகவும் திறமையாக நிர்வகித்து வருகின்றார். புதிய பொதுவிநியோகத் திட்டத்தில் பல முற் போக்கான முறைகளை அறிமுகம் செய்துள்ளார், என்று கூடக் கூறலாம். அவருக்கு என் மனப்பூர்வமான பாராட்டுக்களை, மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினராகி, இன்று சமூக நலத்துறை அமைச்சராக - சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற திருமதி இந்திரகுமாரி அவர்கள், பல்வேறு சமூக நலத்திட்டங்களை ஆர்வத்தோடு செயல்படுத்தி வந்தாலும், என் எண்ணத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதில் பாராட்டுக் குரியவர்கள். குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், பெண்சிசுக் கொலையினைத் தடுக்கும், தொட்டில் குழந்தைத் திட்டத்தினை மிகச் சிறப்பாக, விரைந்து நிறைவேற்றி வருகின்றார்.

இந்த விழாவை, வெற்றி விழாவாக ஆக்குவதற்கு, அவர்களுக்கு உறு துணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு இராமசுந்தரம் அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் இருந்து, நான் இந்த விழாவில் கலந்துகொள்ள, வருகை தந்த பாதையில் எல்லாம், வழிமேல் விழிவைத்து, என் வருகைக்காகக் காத்திருந்து, என்னை உவகைப் பெருக்கோடு, வாழ்த்தி வரவேற்ற பெரு மக்கள் ஒவ்வொருவருக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவில், பாசத்துடன் கலந்துகொண்டு, சிறப்பித்துள்ள பெருமக்கள் ஒவ்வொருவருக்கும், என் இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். உங்களின் அன்பும், ஆதரவும், இந்தப் பாசமும், பரிவும் உங்களுக்கான சேவைகளை, நான் இன்னும் வேகமாகத் தொடர, எனக்குப் புதிய சக்தியை அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**5.4.1993 அன்று வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.**

# படவுலகில் வேற்றுமைகள் மறையட்டும் நல்லுறவு மலரட்டும்

சமீப காலமாகத், திரைப்படத் தொழிலில் விநியோகஸ்தர்களுக்கும், ஏனைய சாராருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக, புதிய படங்கள் எடுப்பதும், விநியோகிப்பதும், வெகுவாகக் குறைந்து, திரைப்படத் தொழிலே ஒரு தேக்க நிலைக்கு வந்து ஸ்தம்பித்து விட்டது.

இதனால் பல்வேறு தீய விளைவுகள் நிகழ்ந்து விட்டன என்றெல்லாம் இங்கே கூறினீர்கள். அது உண்மைதான். இத்தொழிலை நம்பி வாழும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளப் பெருமக்கள், தொழில் நுட்பக் கலைஞர்கள் வேலையின்றித் தவித்து, பிழைப்பின்றிப் பேதலித்ததை, நான் ஏற்கெனவே நன்கறிவேன்.

## ரசிகர்கள் ஏமாற்றம்

இத்தொழிலை நம்பியவர்களுக்கு, பெருத்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் உண்மையே. அரசுக்கு இந்த வகையில் கிடைக்க வேண்டிய வருவாய், வெகுவாகக் குறைந்திருக்கிறது. இன்னொரு கோணத்தில் பார்த்தால், திரைப்பட ரசிகர்கள், போதிய படங்கள் இன்றி ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை, இன்னும் பூதாகரமாக உருவெடுக்குமுன் அரசே தலையிட்டுத் தீர்த்து வைக்க முன் வந்துள்ளது. அந்த வகையில் தான், முத்தரப்பினரையும், கலைஞர்களையும், நடிகர்களையும் கூட்டி, இப்படி ஒரு சமரசப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்யச் சொன்னேன். பொதுவாக, உங்களின் பிரச்சினையை, நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசை. அது முடியாதபோது தான், நீங்களும் அரசை அணுக வேண்டும்; அரசும் தலையிட்டு உதவ வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்த வரையில், நான் முதலமைச்சராய் பொறுப் பேற்ற உடன், உங்கள் அனைவரையும், 20.8.1991 அன்று இதே இடத்தில் அழைத்து, உங்களுக்கு உள்ள பிரச்சினைகளை எல்லாம் கேட்டு, பின்னர் அவற்றில் பலவற்றிற்கு, 25.7.1992-இல் நடந்த பாராட்டு விழாவில் தீர்வு கொடுத்தேன். பல்வேறு சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கினேன்.

குறைந்த முதலீட்டில் எடுக்கும் படத்திற்கான மானியம் உயர்த்தப்பட்டது. அவ்வாறு மானியம் வழங்கப்படும் படங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் பட்டது. சிறந்த படத்தைத் தேர்ந்தெடுக்கும் குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. ஸ்லைடுகளுக்கு உள்ள வரி நீக்கப் பட்டது. திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள் 24 கிராஃப்ட் Craft தொழி லாளர்கள், விபத்திற்குள்ளானால், விபத்து நிவாரண உதவித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டது. மண்டலத் தொழிலாளர் ஆலோசனைக்குழுவில், பெடரேஷனுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

திரையரங்குக் கட்டணம் உயர்த்தப்பட்டது. திரையரங்குகளுக்குப் பராமரிப்புக்கென, டிக்கெட் கட்டணத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது.

இதை அடுத்து டிசம்பர் 1992-ல் விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினையில், ஒரு சில நாட்கள் திரையரங்குகள் மூடப்பட்ட நிலையில், என்னுடைய ஆலோசனையின் பேரில், உள்துறைச் செயலாளர், பேச்சு வார்த்தை நடத்தி 11.1.1993-ல் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

## ஒத்துழைப்பு

இப்போது விநியோகஸ்தர்கள் ஒரு புறமாகவும், மற்ற அனைவரும் ஒரு புறமாகவும் திரண்டு, இந்தத் தகராறில் நின்று கொண்டிருக்கிறீர்கள். பிரபல நடிகர்களும் இயக்குநர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுவிட்டார்கள். இரு தரப்பிலிருந்தும் பலபேர் பேசினீர்கள். அவரவர் கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லி, தத்தம் பக்கம் உள்ள நியாயத்தை, நன்கு வலியுறுத்தியிருக்கிறீர்கள்.

இந்தத் துறையில், எனக்கும் நீண்ட நெடிய தொடர்பு உள்ள காரணத்தால், பிரச்சினைகளின் கூறுகளை, நுணுக்கங்களை, அதில் உள்ள நியாய அநியாயங்களை, என்னால் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த சமரசப் பேச்சுக்கு, நான் அழைத்தவுடன் வருகை தந்து, கலந்துகொண்டு, இதுவரை ஒத்துழைப்புத் தந்து, இனியும் ஒத்துப்போக ஒப்புதல் அளித்த உங்கள் அனைவரையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

எந்த ஒரு சிக்கலுக்கும், ஏதாவது ஒரு மட்டத்தில், ஏதாவது ஒரு காலகட்டத்தில், தீர்வு ஏற்பட்டே ஆக வேண்டும். அப்படிப்பட்ட நிலை தான், இன்றைக்கு வந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

## ஆதிக்கம் கூடாது

திரைப்படத் துறையைப் பொறுத்த வரையில், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையிடுவோர் ஆகிய மூன்று சாராரும், அத்தொழிலின் முக்கிய முதுகெலும்புகள். இவர்களில் யார் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. மூவரும், அவரவருக்குரிய எல்லைக் கோட்டைத் தாண்டாமல், அடுத்தவர் எல்லையில், உரசாமல் செயல்படும் சூழ்நிலை தான், ஆரோக்கியமான, அருமையான சூழ்நிலையாக இருக்க முடியும்.

இதைத்தான் இந்த அரசு எதிர்பார்க்கிறது; விரும்புகிறது. யாரும், யார் மீதும் ஆதிக்கம் செலுத்தி அழுத்துவதை; சுமுகச் சூழ்நிலையை, நல்லுறவைப் பாதிப்பதை, இந்த அரசு விரும்பவில்லை.

தனி மனிதர்கள் நலத்தைவிட, அமைப்பின் நலம், தொழிலின் நலம், பொது நலம், இவை தாம் முக்கியம். தகராறை விடுத்து பொது நன்மையைப் பார்க்கவேண்டும்.

## நல்லுறவு

எனவே, சுருங்கச் சொன்னால், உங்களுக்குள் உள்ள வேறுபாடுகள், மாறுபாடுகள் மறைந்து, உறவு தழைத்து, அது நல்லுறவாக மலர வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் வாதத்தை வலியுறுத்தும் போது, அடுத்த பக்கமுள்ள நியாயத்தையும் பார்க்க வேண்டும்.

கவுரவப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி, அதனால் நடக்க இருக்கும் நல்ல காரியங்களைக் கெடுத்துவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும். உங்களில் ஒருவர் என்ற முறையில், உரிமை எடுத்து உங்களுக்கு இதைச் சொல்லுவதை, பரந்த மனதோடு ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

## தீர்வு

நீங்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் உன்னிப்பாகக் கேட்டேன். இதற்கு முன், உள்துறைச் செயலாளரிடம், நீங்கள் முறையிட்டவற்றையும் கேட்டறிந்தேன். பிரச்சினைகள் என்ன என்று, என்னால் இனம் காண முடிந்தது. அவற்றில் முக்கியமானவை எவை எவை என்று, என்னால் பகுக்கவும் தொகுக்கவும் முடிந்தது. அந்த வகையில், அவற்றிற்கான தீர்வு, இவை இவை எனத் தீர்மானித்து, அறிவிக்க முன் வந்துள்ளேன். அதற்குக் காரணம், இங்கே குழுமியுள்ள இரு தரப்பினரும், எனக்கு அந்த ஒரு சைகையினை நேரடியாகவும், மறைமுகமாகவும் தந்திருக்கிறீர்கள். எனவே, உங்கள் ஒப்புதலோடு, பிரச்சினை தீர்வதற்கு, தீர்வுகளை அறிவிக்கிறேன். சம்பந்தப்பட்ட அனைவரும், ஏற்றுக்கொண்டதாகக் கொண்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப் படும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி, திரைப்படத் துறையினருடன் வெற்றிகரமாக, பேச்சு வார்த்தைகள் நடத்தி முடித்த பின்னர், கீழ்க்கண்ட உடன்பாட்டு விவரங்களைத் தெரிவித்தார்கள்.

1. கடந்த சில மாதங்களாக, தமிழ் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந்த விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள், மற்றவர்கள் மத்தியில், நிலவி வந்த தகராறு தீர்க்கப்பட்டு தொழிலில் இருந்த தேக்க நிலை, ஸ்தம்பித்த நிலை, இன்று முதல் நீக்கப்பட்டு, இனி முதல் முன்னய காலங்களைப் போல், படத்தயாரிப்புகள் தொடங்கப்படும்.

2. இன்றிலிருந்து வெளியிடப்படும் திரைப்படங்களுக்கு, எந்தவிதத் தடையும், இடைஞ்சலும் ஏற்படா வண்ணம், பார்த்துக் கொள்ளப்படும். குறிப்பாக, 24.6.1993-இல் வெளியிடப்படும் படத்திற்கும் இது பொருந்தும்.

3. திரைப்படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள், தம் விருப்பம் போல் படங்களைத் தயாரித்து, வெளியிடும் வர்த்தகச் சுதந்திரத்தைப் பெற்றவர்களாவார்கள். எந்த விநியோகஸ்தருக்கு என்ன விநியோக முறையில், என்ன விலையில் கொடுப்பது என்று தீர்மானிக்கும் உரிமை, தயாரிப்பாளருக்கு வெகுவாகவே உண்டு. அதே நேரம், விநியோகஸ்தர் ஒப்புக்கொள்ளாவிடில் வியாபாரம் நடக்காது என்பதும் உண்மையே. எனவே மார்க்கெட் நிலவரத்தை

அனுசரித்து இரு தரப்பினரும் பேசி முடிவு செய்யும் வர்த்தக சுதந்திரம் இரு சாராருக்கும் உண்டு. விநியோக முறையில், தற்சமயம் நடைமுறையில் இருந்து வரும் எதார்த்த முறை, குறைந்தபட்ச உத்தரவாத முறை, ஒட்டு மொத்த விலை, ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஓட விட்டு வாங்கும்முறை, படத்தைப் போட்டுக் காட்டி விற்கும் முறை, போன்ற பல்வேறு முறைகளில் இரு சாராரும் பேசி, எந்த முறையையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். இரு சாராருக்கும் உள்ள இந்த வர்த்தக சுதந்திரத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஊறுவிளைவிக்கும் எந்தச் செயலும், கண்டிப்பாகக் கைவிடப்பட வேண்டும்.

**சிவப்புச் சுற்றறிக்கை**

4. தயாரிப்பாளர்கள், நடிகர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் மத்தியில் ஏற்படும் தகராறுகளுக்கு, விநியோகஸ்தர்கள் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில், ''சிவப்புச் சுற்றறிக்கை'' என்ற ஒரு முறையைக் கடைப்பிடித்தது. மற்ற சாராரை வெகுவாகப் பாதிப்பதாக, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் பிரச்சினையும் தீர வேண்டும். அதற்கெனச் சரியான முறையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அரசு கருதுகிறது. இந்தச் சிவப்புச் சுற்றறிக்கை முறையை இன்று முதல் கைவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதற்குப் பதிலாக இன்று முதல் இத்தொழிலில் ஏற்படும் தகராறுகளை, அந்தந்த மாவட்ட மட்டத்தில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கென மாவட்ட அளவில், ஒரு உயர்மட்டக் குழுவை நியமிப்பது என்றும், அதற்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரி ஒருவர், தலைவராக இருப்பார் என்றும், அதில் தயாரிப்பாளர் பிரதிநிதிகள், விநியோகஸ்தர் பிரதிநிதிகள், திரையரங்கு உரிமையாளர் பிரதிநிதிகள் என முறையே தலைக்கு இருவரை நியமிப்பது என்றும், அந்த உயர்மட்டக்குழு பிரச்சினையை 2 மாதத்திற்குள் முடிவு செய்ய வேண்டும் என்றும் அந்த முடிவின் மீது மேல் முறையீடு செய்ய வேண்டியிருப்பின், மாநில மட்டத்தில் ஒரு உயர்மட்டக்குழுவைச் செய்தித்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு நியமித்து முத்தரப்பினர் பிரதிநிதிகள், முறையே இருவரை அக்குழுவில் இடம் பெறச் செய்து, பிரச்சினைக்கு முடிவு கட்டலாம் என்றும் அரசு கருதுகிறது. மேல் முறையீட்டை இக்குழுவும் 2 மாதத்தில் முடிவு செய்ய வேண்டும். மாநில மட்டக்குழுவின் முடிவே இறுதியானதாக இருக்கும். இந்த ஏற்பாட்டைச் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்க வேண்டும்.

5. விநியோகஸ்தர்களுக்கும், திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இடையே, 1992-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட தகராறை ஒட்டி, 11.1.1993-இல் முதலமைச்சரின் அறிவுரையின் பேரில், உள்துறைச் செயலாளர் முன்னிலையில், ஒரு செட்டில்மெண்டு ஏற்பட்டது. குறிப்பாக, திரையிடப்படும் படத்தில் கிடைக்கும் வசூலை, இரு சாராரும் சதவீத அடிப்படையில், பிரித்துக் கொள்வதற்கான ஒப்பந்தம்தான் அது. அது பரவலாக அமலாக்கப்படுவதாக அறிந்தாலும், அது முழுக்க முழுக்க செயல் படவில்லை என்று, அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்று முதல், அந்த ஒப்பந்தம் முழுவதுமாக அமல் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

6. குறைந்த செலவில், அல்லது சிறு முதலீட்டில் தயாரிக்கும் படங்களுக்கு, சலுகை வழங்கி, உற்சாகப்படுத்த வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் தான், இப்படங்களுக்கான மானியத்தைப் படத்திற்கு 3 இலட்சம் ரூபாய் என உயர்த்தியது. சலுகை பெறும் படங்களின் எண்ணிக்கையும் 50 என உயர்த்தப்பட்டது. இருப் பினும், இப்போது கூறப்பட்ட கோரிக்கையை, தமிழக அரசு பரிவோடு பரிசீலிக்கும். வரிச்சலுகை, மானியம் வழங்கல் பற்றி, அரசு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும். இதற்கிடையில், இப்போது மானியம் பெறும் குறைந்த முதலீட்டுப் படங்களின் எண்ணிக்கை 50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை இன்று முதல் 75 ஆக உயர்த்தப்படும். அதாவது, இன்று முதல் ஆண்டு ஒன்றுக்கு 75 படங்களுக்கு மானியம் வழங்கப்படும். இதற்காக ஆண்டுக்கு 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். சிறு முதலீட்டுப் படங்களுக்காக எடுக்கப்படும் பிரதிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை இன்று முதல் 12-லிருந்து 6-ஆகக் குறைக்கப்படும். (இது முன்பு குறைந்தபட்ச எண்ணிக்கை 12 ஆகவும், அதிக பட்ச எண்ணிக்கை 30 ஆகவும் இருந்தது. இப்போது 12 என்பது 6 ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது).

7. வேறு மாநிலங்களில் தமிழ்ப்படம் ''டப்'' செய்யப்படும் போதும், வெளிப்புறக் காட்சிகள் எடுக்கப்படும் போதும், அதிகவரிக் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. வேறு மொழிப்படங்கள் இங்கே தமிழில் ''டப்'' செய்யப்படும்போது, அதிக வரி இங்கே விதிப்பதில்லை. இதனால் இங்கே தமிழில் ''டப்'' செய்யப்படும் படம் குறைந்த செலவில் தயாராகி அதிகம் வெளிவருகிறது. இது குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்படங் களுக்கு, பெரும் போட்டியாக அமைகிறது. எனவே, இன்று முதல் மற்ற மாநிலங்களில் தமிழ்ப்படம் ''டப்'' செய்யும்போது வெளிப்புறக் காட்சிகள் எடுக்கும்போது நிர்ணயிக்கும் அதே அல்லது அதற்கு அதிகமான வரிக் கட்டணம் தமிழ்நாட்டிலும் விதிக்கப்படும் என முடிவு செய்யப்படுகிறது.

8. தமிழ்த் திரைப்படங்களின் வீடியோ, தொலைக்காட்சி உரிமை, இதரத் தொலைத்தொடர்பு விண்வெளி உரிமைகள் போன்றவை, இப்போது பழக்கத்தில் இருக்கும். அதாவது ''சரண்டர்'' விநியோகஸ்தரிடம் ஒப் படைக்கும் செய்யும் முறை, தொடர்ந்து நீடிக்கும்.

9. தமிழகத்தில் கணிசமான திரையரங்குகளில், நிர்ணயித்த கட்டணத் திற்கு மேலாக, பல மடங்கு உயர்த்தி, எல்லா டிக்கெட்டுக்கும் ஒரே கட்டண மாகப் புதுப்படங்களுக்கு அனுமதிப்பதாகவும், அதே நேரம் படம் பார்ப் போரை, நிர்ணயித்த எண்ணிக்கையைவிட, இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக அனுமதிப்பதாகவும், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. இது ஒரு மிகப்பெரிய முறைகேடு என்பதோடு, அரசை ஏமாற்றும், அரசுக்கும் வர வேண்டிய வருவாயை இழக்கச் செய்யும் குற்றமும் ஆகும். இதை லேசாக விடுவதற்கில்லை. இன்று முதல், இதற்குக் காரணமான திரையரங்குகள், விநியோகஸ்தர்கள், சம்பந்தப்பட்ட அனைவர் மீதும், நடவடிக்கை எடுப்பதோடு, குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும். இந்த முறைகேடு தடுக்கப்படும், ஒடுக்கப்படும்.

10. தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோருக்கு, ஒரு ஒழுங்கு நெறி கொண்டு வரவும், ''உரிமம்'' (லைசென்சு) வழங்கும் திட்டத்தின்கீழ் கொண்டு வருவது குறித்தும் ஆராயப்படும்.

11. தமிழ்த் திரைப் படங்களில் நடக்கும் வீடியோ, கேபிள் டி.வி. திருட்டுச் செயல்களை, தீவிரமாகத் தடுத்து நிறுத்த, இதற்கென ஒரு தனிக் காவல் படை உருவாக்கப்பட்டு, கேபிள் டி.வி. திருட்டுகள் தடுக்கப்படும்.

12. 5 ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட பழைய படங்களுக்கு, எப்படிப்பட்ட வரிச் சலுகை, எத்தகைய உதவி அளிக்கப்பட வேண்டும் என்பது பற்றி அரசு தனியாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

13. வெளிப்புறப் படப்பிடிப்பிற்கு அனுமதி ஒரே இடத்தில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கெனவே கொள்கைரீதியில் ஏற்கப்பட்டு உள்ளது. விரைவில் இதற்காக ஆணை பிறப்பிக்கப்படும்.

14. தமிழக அரசு நடத்தும் திரைப்படக் கல்லூரியில் திரைப்படத் தொழிலாளர்கள், கலைஞர்கள், நுணுக்கர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீத இடஒதுக்கீடு செய்வது குறித்தும், சலுகைக் கட்டணம் விதிப்பது குறித்தும் அரசு ஆய்ந்து விரைவில் முடிவு எடுக்கும்.

இப்போது அறிவிக்கப்பட்ட 14 அம்சங்களில், திரைப்படத் துறைக்குப் பெருவாரியான சலுகைகளும், நன்மைகளும் அடங்கியுள்ளன. அதோடு எனது சிறு சிறு வேண்டுகோள்களும் இணைந்து இருக்கின்றன. இவற்றை அனைத்துத் தரப்பினரும் முழுமனதோடு ஏற்றுக் கொண்டு, நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரைப்படத் துறையில் எப்போது, எத்தகைய பிரச்சினைகள் எழுந்தாலும், தேவைப்படும்போதெல் லாம் பரிவுடன் கவனித்து அவற்றைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கும் அரசு இந்த அரசு - உங்களது அரசு என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவூட்டி, நாளை முதல் திரைப்படத் துறை முன்னைய காலத்தைப் போல் இயங்கத் தொடங்கும், மென்மேலும் வளரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

**21.6.93-ல் சென்னையில் நடந்த பட அதிபர்கள், டைரக்டர்கள், நடிகர்கள், விநியோகஸ்தர்கள் கூட்டத்தில் பிரச்சினையைத் தீர்த்துவைத்து, ஆற்றிய உரை.**

# சென்னைப் புறநகரில் ஒரு தொழில் பூங்கா

"தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்" குறித்த கருத்தரங்கின் தொடக்க விழாவில் கலந்து கொள்ளும் இந்நேரத்தில், தொழில் அதிபர்களான உங்களையெல்லாம் மீண்டும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் என்னுடைய அரசு ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் நான் தொடங்கிய விவாதத்தின் தொடர்ச்சிதான் இந்தக் கருத்தரங்கம் என்று கருதுகிறேன். இத்தகைய கருத்தரங்கம், நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றோம் என்பதை அறிய உதவு வதோடு, எதிர்காலத்திற்கு நம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். இந்த விவாதங்கள் அரசு நல்ல செயல் திட்டங்களை உருவாக்கி, அதன் மூலம் ஒருங்கிணைந்த செயலாக்கத்திற்கு அடித்தளமாக அமையுமென நம்புகிறேன்.

பல்வேறு முன்னணித் துறைகளில் தங்களை அர்ப்பணித்து போற்றத்தகு முன்னேற்றம் அடைந்ததற்காக விருதுகள் பெற்ற தொழிலதிபர்களை வாழ்த்தி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். இதை மற்றவர்களும் பின்பற்றி தொழில் துறையில் உயர்ந்த நிலையை அடைய, நமக்கு இது போன்ற மேலும் பல உதாரணங்கள் தேவைப்படுகின்றன.

ஊக்கமுள்ள முதலீட்டாளர்களுக்கு வழங்க, தமிழ்நாட்டில் பல வாய்ப் புகள் இருப்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். உகந்த தொழில் மற்றும் தொழிலாளர் சூழ்நிலையைத் தவிர தமிழ்நாட்டில் மிக உயர்ந்த பயிற்சி பெற்ற மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட மனிதவளம் இருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் உள்ள குழப்பமான சூழ்நிலையை ஒப்பிடும் போது, தமிழ்நாட்டில் உள்ள அமைதியான சட்டம் ஒழுங்கு நிலைமை ஆர்வமுள்ள தொழில் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. தேவையான அடிப்படை வசதியைப் பொறுத்தமட்டில் தமிழகம் நமது நாட்டில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. மின் உற்பத்தியை அதிகரிக்க தனியார்துறை ஈடுபாட்டுடன் நிறைவேற்ற பல பெரிய திட்டங்களைத் தீட்டியுள்ளோம். முன்னோடித் திட்டமாக, ரூ.4,200 கோடி செலவில் மூன்று திட்டங்களை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளோம்.

இதைத்தவிர, கூட்டுத்துறையில் ரூ.7,000 கோடி செலவில் ஒருங் கிணைந்த சுரங்கம் மற்றும் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. நீங்கள் மகிழ்ச்சி அடையத்தக்க வகையில் தமிழகத்தில் தற்பொழுது மின்வெட்டே இல்லை. எதிர்காலத்திலும் இந்த மகிழ்ச்சியான நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பது தான் எங்கள் முயற்சி.

எட்டாவது திட்டத்தில் மாநிலத்தின் தொழில்துறையின் அடிப்படை வசதிகளுக்காக, குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் ரூ.1,450 கோடி செலவில் நிறைவேற்றப்படவுள்ளன. தொழில் உற்பத்தி, தரம், கடன் வசதி

போன்ற பல்வேறு இனங்களில் அகில இந்தியாவில் தமிழகம் மற்ற மாநிலங் களைவிட முன்னணியில் உள்ளது. குறிப்பாக சிறு தொழில்களின் ஆண்டு வளர்ச்சி 15.25 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இது நாட்டின் உயர்ந்த அளவாகும்.

ஏற்றுமதியைப் பொருத்தமட்டில் அகில இந்திய அளவில் நம்முடைய பங்கு 12.5 சதவிகிதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நமது மாநிலம், தோல் பொருட்கள், ஆயத்த ஆடைகள், துணி உற்பத்தி, கடல் பொருட்கள், பொறியியல் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க முன்னணியில் இருக்கிறது. தொழில் தொடங்குவதற்கான ஏற்றதொரு சூழ்நிலை நமது மாநிலத்தில் இருப்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவே இதை நான் குறிப்பிடுகிறேன்.

தொழில்துறையைத் தாராளமயமாக்குவதில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த பொருளாதாரச் சீர்திருத்தத்தை நாடு உருவாக்கியுள்ளது. பொரு ளாதார வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதற்காக மைய அரசு பல நடவடிக்கை களைத் தொடங்கியுள்ளது. இதில் மாநிலங்கள் பின் தங்கிவிடக்கூடாது. வேகமான தொழில் வளர்ச்சிக்காகத் தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தொழில் தொடங்குவதற்கு வசதியாக ஏற்ற சூழ்நிலையையும், அடிப்படை வசதிகளையும் மாநில அரசு செய்துதர வேண்டியிருப்பதால், முக்கிய பொறுப்பு மாநில அரசின் மேல் விழுந்துள்ளது. இதனால் தனியார் துறைகளில் உள்ள தொழில் அதிபர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி புதிய தொழிற்சாலைகள் அமைக்க இயலும். தாராளக் கொள்கை என்பது கட்டுப்பாட்டைத் தளர்த்துவதாகும்.

தனியார் துறையை ஊக்கப்படுத்துவதும் இதில் அடங்கும். உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் வலியுறுத்தும் முயற்சியையும் இது குறிப்பிடுகின்றது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, தொழில் வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலைகளையும் தொழில் முனைபவர்களுக்கு நட்பான சூழ்நிலைகளையும் உருவாக்கும் நோக்கத்துடன் 1992-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பரவ லான நிதிச் சலுகை மற்றும் பிற ஊக்கங்களைக் கொண்ட புதிய தொழில் கொள்கையை நான் அறிவித்தேன்.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதை விரைவுபடுத்தவும், வழி காட்டும் பணிகளுக்கும் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TACID), தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம் (GUIDANCE) போன்ற தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சி நிறுவனம், தொழில் மூலதனம் செய்பவர்களுக்கு உதவுவதற்காக ஓராண்டுக்கு முன் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் (TACID) மத்திய அரசு திட்டப்படி மூன்று தொழில் வளர்ச்சி மையங்களை உரு வாக்கும் பணிகளை எடுத்துக் கொண்டுள்ளது. மாநில அரசின் சார்பில் தருமபுரி மாவட்டம், பருகூரில் தொழில் வளர்ச்சி மையம் ஒன்றையும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் நிலக்கோட்டையில் ஒரு வேளாண்

தொழிற்பேட்டையையும் உருவாக்க தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் தொடங்கியுள்ளது.

இதைத்தவிர, பெரிய ஏற்றுமதி மையமான திருப்பூரில் ரூ.200 கோடி செலவில் அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் ஒரு பெரிய திட்டத்தையும் இந்த நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது.

இவையெல்லாம் நாங்கள் எடுக்கும் முயற்சிகளின் சிறு உதாரணங்களே யாகும். புதிய முதலீடுகளை வரவேற்பதே பொதுவான எங்கள் கொள்கை யாகும்.

முக்கியமாக, போட்டியும், லாபமும் உள்ள துறைகளில் முதலீடுகளை நான் வரவேற்கிறேன். இம்முதலீடுகளில் சில புதிய தொழில் கொள்கையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுச் சிலவற்றைச் சொல்ல வேண்டுமானால், தோல் பொருட்கள், ஆடைகள், மோட்டார் வாகனப் பாகங்கள் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் போன்ற சில பிரிவுகளில் நான் முக்கிய கவனம் செலுத்தவுள்ளேன். தொழில் வளர்ச்சியில் தாய்த் தொழில்களாகக் கருதப்படும் மாபெரும் திட்டங்களில் முதலீடுகளுக்கு அரசு எல்லா உதவிகளையும் வழங்கும். புதிய தொழில் மற்றும் முதலீடு முயற்சி களுக்கு இவை முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட அளவில் சிறுதொழில் முனைவர்கள் ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் பெற வழி செய்யும் அமைப்பை உருவாக்கி முதலீட்டாளர் களுக்கு ஒரு நட்பான சூழ்நிலையை உருவாக்கி வருகிறோம். குறிப்பிட்ட பகுதிகளிலும், தொழிற்பேட்டைகளிலும் தொழில் வளர்ச்சிக் குழுமங்கள் அமைக்க சட்டம் கொண்டுவரப்படும். இதன் மூலம் தொழில் முனைவர் களுக்கு ஏற்படும் பல சுமைகள் குறைக்கபபட்டு அவர்கள், தங்கள் திட்டங்கள் மேல் முழுக்கவனம் செலுத்த வழிகோலும்.

உள்நாட்டு முதலீட்டை மட்டும் கவர வேண்டுமென்று நாங்கள் எண்ண வில்லை. வெளிநாட்டிலிருந்து குறிப்பாக சிங்கப்பூர், பசிபிக் நாடுகளிலிருந்து நேரடி முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ''சென்னைத் தொழில் பூங்கா'' என்றழைக்கப்படும் ஒரு வணிக வளாகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வெளிநாட்டு முதலீடு ஊக்கப் படுத்தப்படுவதோடு, உன் நாட்டுப் பொருளாதாரத்தில் புதிய தொழில் நுணுக்கங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதைத்தவிர, தொழில் நுணுக்கத் திலும், நிர்வாகத் திறமையிலும் முன்னேற்றம் ஏற்படும். இது உலகச் சந்தை யில் போட்டியையும் ஊக்குவிக்கும். சென்னைத் தொழில் பூங்காவுக்கு வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் தமிழக அரசின் குறிக்கோளை நிறை வேற்ற, தமிழக அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தத் தொழில் பூங்கா திகழும்.

சென்னை நகரின் புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படும் இத்தொழிற் பூங்கா, தென்கிழக்கு ஆசியாவில் எந்த ஒரு பகுதியுடனும் ஒப்பிடும் அளவுக்கு அடிப்படை வசதிகளைக் கொண்டிருக்கும். மேலும், இந்திய அளவில் தனித்தன்மையுடன் கூடிய ஊக்கத் திட்டங்களைக் கொண்டதாகவும் இது இருக்கும். தமிழ்நாட்டுக்கு விலை மதிக்கத்தக்க பயன்கள் கிடைக்கும் வகையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பது இப்பூங்காவின் முக்கிய

குறிக்கோளாகும். இதற்குத் தேவைப்படும் ஊக்கத்தை மத்திய, மாநில அரசுகள் அளிக்க வேண்டும். மாநில அரசைப் பொறுத்தமட்டில் மின்சார சப்ளை, மாநில அரசின் ஒப்புதலை விரைவாக வழங்குதல், அடிப்படை வசதிகள் போன்ற உதவிகளை முதலீட்டாளர்களுக்கு அரசு வழங்கும்.

மத்திய அரசின் ஒத்துழைப்போடுதான் ஒரு மாநிலம், தொழில் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைய முடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எண்ணூரில் ஒரு துணைத் துறைமுகம் அமைப்பது அவசரத் தேவையாகும். இதனால் மாநிலத்தின் மின் உற்பத்தி பாதிக்காத வகையில் நிலக்கரியை எளிதாகக் கொண்டுவர முடியும்.

மற்றொரு பெரிய திட்டம் தென்னக எரிவாய்வு இணைப்புத் திட்டம் ஆகும். இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். எரிசக்தி கிடைப்பதை இது அதிகரிப்பதோடு இரசாயனத் திட்டங்களுக்குத் தேவைப்படும் முக்கிய பொருளாகவும் விளங்கும். இது குறித்து மத்திய அரசு தேவையான ஒப்புதல்களை அளித்துள்ளதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். தென்மாநிலங்களின் தொழில் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் இத்திட்டத்தை மிக விரைவில் செயல்படுத்தத் தேவைப்படும் பிற நடவடிக்கைகளையும் துரிதப்படுத்துமாறு நான் மைய அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழிற்துறையில் எங்கள் முன்னேற்றம் மனநிறைவு அளிப்பதாக இருந்தாலும், இப்போதுள்ள நிலையை அப்படியே தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று மட்டும் நினைக்காமல், தொழில் வளர்ச்சியை விரிவுபடுத்தி, தமிழ்நாட்டைத் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதல் இடத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறோம். எங்களுடைய இந்த முயற்சிக்குத் தொழில் அதிபர்கள் உற்சாகத்துடன் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இறுதியில் இந்த கூட்டுமுயற்சிதான் தொழில் துறையில் மேன்மையடைய உதவியாக இருக்கும்.

இக்கருத்தரங்கத்தில் இடம் பெறும் பேச்சு வார்த்தைகள் பயனுள்ளவையாக இருக்கும் என நான் நம்புகிறேன். என்னுடைய உரையை முடிப்பதற்கு முன் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரியான கருத்தரங்கில் நீங்கள் பலம் மற்றும் பலவீனங்களை விவாதித்து, தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருக வாய்ப்புகள் என்ன என்பதை ஆராய்ந்து, தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்த நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து எங்களுக்கு ஆலோசனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்களிடமிருந்து பயனுள்ள பல ஆலோசனைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

**23.6.1993 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் 'தமிழகத்தில் தொழில் வாய்ப்புகள்' குறித்த கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.**

